# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

30/-





## கட்டுநாயக்கா கலங்கிய கதை!



## ஆளுக்கொரு பேப்பர்





# இதுதான் முதலடி

Digitized by Noolaham Foundation
noolaham.org

# இலங்கையில் 'ஜார்' ஆட்சி

அக்கினிபுத்திரன்

'புத்துயிர்ப்பு' இது உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் அவர்களின் பிரசித்தி பெற்ற நாவல். இது உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பல இலட்சம் வாசகர்களால் அதிசிறந்த ஒரு படைப்பு என இன்றும் போற்றப் பட்டு வருகிறது.

இதில் வரும் கதாநாயகி ஒரு பணிப்பெண். இவள் செய்யாத ஒரு குற்றத்திற்காக நீதிமன்றில் நிறுத்தப் படுகிறாள். ஒரு விருந்துக்குச் செல்ல வேண்டிய அவசரத்தில் நீதிபதி எதையோ எழுதி வைக்க அவள் சிறை செய்யப்படுகிறாள். உண்மையை அறிந்த அவள் வேலை செய்த வீட்டு இளைஞன் அவளை மீட்கப் பெரும் முயற்சி எடுக்கிறான். சிறை அதிகாரிகளின் இடமாற்றம். அவள் வெவ்வேறு சிறைகளுக்குமாற்றப்படுதல், ஆவணங்கள், தொலைதல் போன்ற காரணங்களால் அவளை மீட்க முயலும் இளைஞரின் முயற்சிகள் தோல்வியடைகின்றன. எனினும் அவள் மாற்றப்படும் சிறைகளையெல்லாம் தேடிக்கண்டு பிடித்து இளைஞன் தன் முயற்சியைத் தொடர்கின்றான். இளம் பெண்ணாகச் சிறைசெல்லும் அவள் முதியவளாகும் வரை சிறையிலேயே கழிக்கிறாள்.

இது ரஷ்யாவில் அதிகாரிகளின் தட்டிக்கேட்க ஆளில்லாத் தலைக்கணம் மக்களை மக்களாக மதிக்காத மிருகத்தனம். கடமையில் பொறுப்பற்ற அலட்சியம். நீதிபதிகளுக்கே நீதி, நியாயம் தொடர்பான அக்கறையின்மை போன்றவற்றை அக்குவேறு ஆணி வேறாகப் பிரித்துக்காட்டும் அற்புத நாவல்.

இது நடந்ததாகச் சித்தரிக்கப் படுவது ஜார் மன்னனின் கொடிய சர்வதிகார ஆட்சி ரஷ்யாவில் நிலவிய காலப்பகுதி. அந்தக் கொடிய ஆட்சி பாட்டாளி வர்க்கப்புரட்சி மூலம் தூக்கி எறியப்பட்டு அங்கு 1917இல் மக்களாட்சி நிறுவப்பட்டது.

ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்களாட்சி நிலவுவதாகக் கூறப்படும் இலங்கையில் 21ம் நூற்றாண்டிலும் அதே வகையில் சட்டமும், நியாயமும் காலில் போட்டு மிதிக்கப்படுவது தான் இங்கு நாம் கருதும் மிகப்பெரும் அநீதி.

அண்மையில் கொழும்பில் இடம் பெற்ற ஒரு வழக்கில் போதைவஸ்துக் குற்றம் தொடர்பான ஒருவர் ஏழு வருடங்களாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாத காரணத்தால் அவர் சிறைவாசம் அனுபவிப்பது சுட்டிக்காட்டப்பட்டது. உடனடியாகவே உயர்நீதிமன்ற நீதியரசர் இப்படியான பொறுப்பற்ற நாமங்களைக் கண்டணம் செய்ததுடன் வழக்குகளில் விரைவாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனச் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தினார்.


நீதி மறுக்கப்பட்ட ஒரு போதை வஸ்து தொடர்பான சந்தேக நபரின் நீண்ட சிறைவாசம் நீதியரசர் சட்டமா அதிபருக்குக்கட்டளையிடும்நிலையை உருவாக்கிவிட்டது. எனினும் பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான கைதிகளின் நிலை பல கேள்விகளை எழுப்புகிறது. இன்றைய பிரதம நீதியரசர் முன்னாள் சட்டமா அதிபர், அவரின் காலத்தில் பயங்கர வாதச் தடைத்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழ்க்கைதி பற்றிய கோவைகள் சட்டமா அதிபர் திணைக் களத்தில் நீண்ட துயிலில் ஆழ்ந்து விட்டன. அவை இன்று வரை துயிலெழவில்லை.

## இதன் விளைவு

ஒருவர் 15 வருடங்கள் சிறையில் வாடுகிறார். இது வரை இவர் 430 தடவைகளுக்கு மேல் நீதிமன்றம் கொண்டு வரப்பட்டு இன்னும் அவர் மீது வழக்குத் தொடுக்கப்படவில்லை. 5பேர்- பத்து வருடங்கள் தடுப்புக் காவலில். 7பேர் ஐந்து வருடங்களாகக் கம்பிக் கூட்டுக்குள்

இன்னும் நூற்றுக்கணக்கானோர் பல வருடங்களாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் அல்லது சம்பந்தப் பட்ட பொலிசார் சமூகமளிக்காமல் அல்லது சாட்சிகள் வராமையால் எனப் பல்வேறு காரணங்களால் நீதிக்குப் புறம்பான வகையில்சிறையிருக்கின்றனர்.

> "இதில் வரும் கதாநாயகி ஒரு பணிப்பெண். இவள் செய்யாத ஒரு குற்றத்திற்காக நீதிமன்றில் நிறுத்தப்படுகிறாள். ஒரு விருந்துக்குச் செல்ல வேண்டிய அவசரத்தில் நீதிபதி எதையோ எழுதி வைக்க அவள் சிறை செய்யப்படுகிறாள். உண்மையை அறிந்த அவள் வேலை செய்த வீட்டு இளைஞன் அவளை மீட்கப் பெரும் முயற்சி எடுக்கிறான். சிறை அதிகாரிகளின் இடமாற்றம். அவள் வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றப்படுதல், ஆவணங்கள் தொலைதல் போன்ற காரணங்களால் அவளை மீட்க முயலும் இளைஞரின் முயற்சிகள் தோல்வியடைகின்றன.



இவர்கள் டால்ஸ்டாயின் நாவலில் வரும் கதாநாயகி போன்று இலங்கையின் மக்களாட்சியிலும் அதே போன்ற அவலங்களை அனுபவித்திருக்கின்றனர். இந்த நியாயமற்ற ஒடுக்குமுறையில் இன்றைய பிரதம நீதியரசரான முன்னாள் சட்டமா அதிபரும் பங்களிக்கின்றார்.

எனினும் ஒரு போதைவஸ்து தொடர்பான சந்தேக நபருக்கு நீதி மறுக்கப் பட்டமையைக்கண்டிக்கிறது நீதிமன்றம்.

## அப்படியானால்

நீதியில் இருவகை உண்டா என்ற கேள்வி எழுகிறது. அப்படிக்கேள்வி எழ இன்னும் பல காரணங்கள் உண்டு. 2006ம் ஆண்டு 5 மாணவர்கள் திருகோணமலை உல்லாசக்கடற் கரைக்கு அண்மையில் வைத்து சீருடை தரித்தவர்களால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

"இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டது. எவரும் கைது செய்யப்படவுமில்லை தண்டிக்கப்படவுமில்லை"

## ஒரு மாணவனின் தந்தை.

ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையத்தில் முறையிட்டனர். சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் பல வித அழுத்தங்களைக் கொடுத்தன. அசைந்து கொடுக்கவில்லைஇலங்கையில்சட்டமும் நீதியும். வாய் திறக்கவில்லை சட்டமா அதிபர் திணைக்களம்.

## ஏழு வருடங்கள் நீண்ட தூக்கம்

இவ்வருட இறுதியில் கொழும்பில் பொதுநலவாய மகாநாடு இடம் பெறவுள்ள நிலையில் அதிகாரிகள் உட்பட பொலிஸ் அதிரடிப்படையினர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மனித உரிமை அமைப்புகளின் அழுத்தங்களிலிருந்து தப்ப மேற்கொள்ளப்பட்ட கண்துடைப்பு என்கிறார் மாணவனின் தந்தை. இப் படுகொலை தொடர்பாக நியாயமான விசாரணை நடைபெறாது எனவும் அவர் அடித்துக் கூறுகிறார். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இக்கொலைகள் இடம்பெற்ற போது தலைமைக்காரியால இன்ஸ்பெக்டராகக் கடைமையாற்றியவர். இப்போ அவர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்.

கொலைக்குற்றம் தொடர்பான சந்தேகநபர்கள் பதவிஉயர்வும் பதக்கங்களும் பெறுவது இலங்கையில் அப்படி ஒன்றும் அதிசயமல்ல.

எனவே மாணவனின் தந்தை நீதி கிடைக்காது என அவ நம்பிக்கை கொள்வதில்ஆச்சரியம் இருக்கமுடியுமா?

தங்காலையில் ஒரு சுற்றுலா விடுதியில் வைத்து ஒரு பிரிட்டிஷ் பிரஜை கொலை செய்யப்பட்டார். அவரின் நண்பியான ஒரு ரஷ்யப் பிரஜை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். வெளி நாட்டுப் பிரஜைகளுக்கு இலங்கை யில் வழங்கப்படும் கௌரவம் அது.

இது தொடர்பாகக் கைது செய்யப் பட்டவர்ஒரு பிரபலபுள்ளி. தங்காலைப் பிரதேசசபையின்தலைவர். தங்காலைப் பிரதேச சபையின் தலைவர். இவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்.

## இவர் பிணையில்விடப்பட்டார்

இலங்கையின் கௌரவம் சம்பந்தமான பிரச்சினையாக இருந்த போதும் அது தொடர்பான கோவை வேகமாகச் செயற்பட அவர் பிணையில் விடப்பட்டார். சட்டமா அதிபர் திணைக்களம் மிக வேகமாகவே செயற்பட்டது. இப்போது சாட்சிகள் பாதுகாப்புக் கோரி கொழும்புக்கு மாற்றும்படி கோரிக்கை விட்டுள்ளனர்.

தங்காலைத் தலைவரோ தன் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஒரு வெறிக் கட்டுச் சதி என்று கூறி விட்டார். என்ன ஆச்சரியம்?

இலங்கையின் நட்பு நாடான ரஷ்யாவே அவருக்கு எதிராகச் சதி செய்கிறதாம். எப்படியிருந்த போதிலும் அமெரிக்காவும் பிரிட்டனும் தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்து விட்டன. இலங்கையில் சட்ட ஆட்சி பற்றி இன்னும் பல ஆதாரங்கள் உண்டு. 1917 இல் ரஷ்யாவில் ஜார் ஆட்சி முடிவுக்கு வந்துவிட்டது.

இலங்கையில் 2013லும் இது நிலைபெற்று நிலவுகிறது.

எனினும் இங்கும் டால்ஸ்டாய்கள் எழுதுகோலோடு காத்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஜெரா


சரியானதொரு கருத்துச் சூழல் எழவேண்டிய காலத்தில்ஈழத்தமிழினம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அரசியல் போராட்டம், ஆயுதப்போராட்டம், தேர்தல்போராட்டம் என அனைத்து வகையான உரிமை மீட்புக்கான செயற் பாடுகளும் தோல்வி கண்டுள்ள நிலையிலேயே புதிய சிந்தனைச் சூழ்நிலை ஈழத்தமிழ் உலகம் எதிர் பார்த்து நிற்கிறது. எழுத்துத் துறைசார்ந்த பக்கங்களினாலேயே எதிர் பார்க்கப் படும் இந்த விடயத்தை இட்டு நிரப்ப முடியும். ஒரு வகையில் எம்மிடையேயேற்பட்டிருக்கும் பாரிய இடைவெளியாகவும் இதனைப் பார்க்கலாம். இயற்கை ஒருபோதும் இடைவெளிகளை விட்டதில்லை என்ற இயங்கியல் விதிக்கமைவாக

அது ஒரு விளைவாகவே வடக்கில் விரைவாக முளைத்த புதிய பத்திரிகைகளைக் குறிப்பிடலாம். 2009இற்கு முன்னர் வடக்கில் இயங்கிய பத்திரிகைகள் தீவிர தமிழ் தேசியம் பேசின. தொடர்ந்து வந்த காலத்திலும் அந்தத் தீவிர தன்மையிலிருந்து அவை விடுபடவில்லை. விடுதலைக்கான குரலை, உரிமை மீட்புக்கான பாதையை தொடர்ந்தும் வெளிச்சப்படுத்திக் கொண்டே இருந்தன. இந்த கருத்தியல் தளத்தை முடக்க வேண்டிய கடப்பாடு சில தரப்புகளுக்கு தேவைப்பட்டன. அதற்காக ஆங்காங்கே புதிய சிந்தனைத் தளங்கள் உருவாகின. கருவாகிய வேகத்திலேயே உருச்சிதைந்து போக வேண்டிய கட்டாயமும் அவைக்கு ஏற்பட்டது. காரணம் இந்தப் பிராந்திய தமிழர்களுக்கு எதை ஏற்கவேண்டும் எதை நிராகரிக்க வேண்டுமென்பதை வெளிவந்த பத்திரிகைகள் நிராகரிக்கப் பட்டமைக்கு இதுவே பிரதான காரணம்.

வெறுமனே ஒரு கட்சி சார்ந்த துதிப்பாடல்களுக்காகவும், மற்றைய தரப்பினரைப் போட்டுத் தாக்குவதற்காகவும் ஆரம்பிக்கப்படும் பத்திரிகைகளும் நிண்டு பிடிக்க முடியாது. கட்சிப் பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதற்காக யாரும் செலவழிக்கத் தயாரில்லை. வாசிப்பவன் சார்ந்த நலனும், அவனது நோக்க நிலையும் அவன் தெரிவு செய்யும் பத்திரிகையில் இருந்தாலே அதனை தொடர்ந்து படிப்பதில் ஆர்வம் கொள்கின்றான். இந்த இடத்தில்த்தான் அவசரப்பட்டு கட்சி நலன் சார்ந்து ஆரம்பிக்கப்படும் பத்திரிகைகள் சரிந்து விழுகின்றன. வெளிநாடுகளில் நூறு ஆண்டுகள் ஒரு பத்திரிகை நிலைத்திருப்பதற்கும் நம்நாட்டில் ஒரு வருடத்திற்குக் கூட ஒரு பத்திரிகை நிலைத் திருக்க

ஒருவரின் நிதிமூலம் பற்றிய சந்தேகம் நம்மிடையே எழுவது இயல்பானது. மிக விரைவாக அச்சேறும் பத்திரிகைகள் எங்கிருந்து நிதியைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பதிலும் வாசகர் மட்டத்தில் பரந்த சந்தேகம் இருக்கின்றது. ஒரு பத்திரிகை ஆரம்பிப்பதும் அதனைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதற்கும் சில ஆயிரங்கள் போதுமானதாக இருக்கிறது. பல இலட்ச முதலீடுகளின் பின்னரே ஒரு பத்திரிகை வெளிவருகின்றது. ஆனால் இந்த அவசரப் பத்திரிகைகளின் வருகைக்கான நிதியும், கைவிடலுக்கான நஸ்ட ஈடும் எங்கிருந்து கிடைக்கின்றனவோ என்ற சந்தேகத்துடனேயே ஒவ்வொரு பக்கத்தையும் வாசகன் புரட்டத் தயாராகின்றான்.

# ஆளுக்கொரு பேப்பர்!



வாசகர் ஏமாற்றுத் தனத்தில் இறங்குவதும் வாசிப்பின் பெறுமதியைக் குறைக்கச் செய்துவிடும் விடுதலைப் புலிகளையும் அவர்களது வீரங்களையும் தமது விற்பனைப் பண்டங்களாக இத்தகைய பத்திரிகைகள் தமது பக்கங்களில் கடை பரப்புகின்றன. தாமும் தமிழ் தேசியவாதிகள் தான் என்ற மாயையை இதன்மூலம் வாசகர்களிடையே ஏற்படுத்தி காலப் போக்கில் மெல்ல மெல்ல தமது கொள்கைகளை வாசகர் இடத்தே அவர்களையும் அறியாமல் திணிக்க முற்படுகின்றன. வாசகரின் ஈர்ப்புக்காகவும், விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காகவும் பயன்படுத்தப்படுகின்ற இந்த உத்திகள் அதீத கற்பனைகளினால் நிரம்பப் பெற்றவை. இதுமாதிரி யான

**“ வாசகர் ஏமாற்றுத் தனத்தில் இறங்குவதும் வாசிப்பின் பெறுமதியைக் குறைக்கச் செய்துவிடும். விடுதலைப்புலிகள், அவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், போர் வியூகங்கள், முன்னாள் போராளின் இன்னாள் நேர்காணல்கள், இறுதிப் போரில் நடந்தது என்ன?, ஆயுதக் கடத்தல் போன்ற கதைகளை மேலும் மேலும் முடிச்சவிழ்க்கும் வேலைகளை எழுத்தில் செய்வதும் நடந்து வருகின்றது.**

ஈழத் தமிழர்கள் மத்தியில் எழுந்திருக்கும் அறிவுசார் இடைவெளியை நிரப்பு வதற்கு பல முனைகளிலிருந்தும் நிரப்பிகள் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அது சரியானதாகவும், வீழ்ச்சி கண்டிருக்கும் இந்த இனத்திற்கு விரோதமானதாகவும், மேலும் அழிவை விஸ்தீரணப்படுத்தக்கூடியதாகவும் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

2009இற்குப் பின்னர் ஈழத் தமிழ் பரப்பிற்குள் பல விடயங்கள் புதிதாக அறிமுகப்பட்டன. அபிவிருத்தி, புனரமைப்பு என்ற பெயரில் இதனை அனுபவிக்கத் தலைப்பட் டோம். ஒரு வகையில் அது சரியா னதாகவும், ஆழ யோசித்தால் அவை தவறானவையாகவும் நீண்ட கால நோக்கில் பெரு விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன. இந்தச் சாயலிலேயே தமிழரின் கருத்தியல் தளத்தில் புதிய மாற்றங்கள் அறிமுகமாயின. மாற்றுக் கதையாடல் அல்லது மாற்று அரசியல் என்ற வடிவத்துக்குள் அவை மெருகு பெற்றன. 2009இற்கு முன்னரான காலத்தை, அக்காலத்தை ஆக்கிரமித்திருந்த அரசியலை மிகக் கேவலமாக விமர்சிப்பதை இந்த மாற்றுச் சிந்தனை முக்கிய கருப்பொருளாகக் கொண்டிருந்தது. நடுநிலைத் தன்மை கீழிறங்கியும் மேலுயர்ந்தும் சென்ற வசைக் கோணத்தை இந்த மாற்றுச் சிந்தனைகளில் பிரதான இடம் பிடித்திருந்ததை காணமுடிந்தது.

கடந்த 30 ஆண்டு கால வாழ்வு அனுபவம் தெளிவாகச் சொல்லிப் போய் இருக்கிறது. இந்த ஏற்றலையும், நிராகரித்தலையும் கருத்தியல்த்தளத் தில் மட்டுமல்லாது அரசியல், அபிவிருத்தி, பொருளாதாரம் என அனைத்து விடயங் களிலும் பொருத்திப் பார்க்க முடியும். எத்தனை கோடிகளைச் செலவழித்து வாக்குவங்கிகளை நிரப்பிக் கொள்ள போராடினாலும் கடைசியில் தோற்றுப் போவது இந்தப் பொதுப் புத்தியில் இருந்துதான். ஆகவே இந்த பொதுப் புத்திச் சிதைப்புக்கான பணியை கருத்தியல் தளத்திலிருந்து மேற்கொள்ள வேண்டிய தேவை உரிய தரப்புக்கு இருந்தது. அதன் வழியாகவும் கடந்த மூன்று ஆண்டுகளிலும்சில புதுப் பத்திரி கைகள் வந்து மறைந்தன. ஆனால் அவற் றால் நின்று பிடிக்க முடியவில்லை. ஏனெனில் அதிகாரத்தின் முகத்தை மறைத்து போலிக் குரலில் பேச முனைந்த இந்தப் பத்திரிகைகள் காலப்போக்கில் சாயம் வெளுத்துவிட்டதால் நின்று நிலைக்க முடியவில்லை.

இப்போது தேர்தல் நெருங்கி வரும் வேளையில் வடக்கின் பல பாகங்களிலும் விரைவில் வெளிவர இருக்கிறது என்ற விளம்பரப் பதாகைகளை கானக்கூடியதாக இருக்கின்றது. புதிய சிந்தனைச் சூழல் உருவாவது வரவேற்பத் தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும். ஆனால் அவை பேசப்போகும் கருப் பொருள் சார்ந்தே அவற்றுக்கான சமூக மதிப்பீடுகளும் அந்தஸ்தும் கிடைக்க வாய்ப்பிருக்கின்றது. தமிழ் தேசிய சிதைப்புக்காக முடியாமல் போகின்றமைக்கும் இதுவே பிரதான காரணம்.

பத்திரிகைகள் வெறுமனே செய்திக் குரியவை மட்டுமல்ல. நிகழ்கால வரலாற்றை பதிவு செய்து செய்பவை. அத்தோடு பத்திரிகை இயங்கும் சமூகத்தில் பொதுப் புத்தியையும் தீர்மானிப்பதில் அதற்கு முக்கிய பங்கு இருக்கிறது. ஆகவே இந்த விடயங்கள் உண்மைத் தன்மை மிக்கவையாகவும் நடுநிலையோடு பதிவிடப்பட வேண்டும். வெறும் பக்கம் நிரப்பும் அவசரத்துக்காக அள்ளிப் போடுதலையும், இணையத் தளங்கள் மற்றும் வலைத் தளங்கள் கற்பனைக் கப்பால் நின்று எழுதப்படுபனவற்றைத் தொகுத்துப் போடுதலையும் தம் நலன் சார்ந்து வெளியிடுதலையும் தவிர்த்தல் இனிவரும் பத்திரிகைகளுக்கு மிகவும் அவசியமானது. ஏனெனில் நடைமுறையில் இருக்கும் பத்திரிகைப் பழக்கம் இதனை தவிர்க்கமுடியாது நிற்பதைப் பார்க்கின்றோம்.

எழுத்துக்கள் முதலில் படிப்பதற்குச் சுவாரஷ்யத்தைத் தந்தாலும் வெகு விரைவிலேயே வெறுப்பைத் தந்துவிடுகிறது. இவ்வாறான விற்பனை தமிழ் சினிமாவில் காட்டப்படும் தொப்புள் நடனத்திற்குச் சமமானது.

ஆக சரியான கருத்தியல் தளத்தை உருவாக்குவதற்கு பத்திரிகைகளுக்கு இருக்கும் பங்கை விளங்கிக் கொண்டு அவை சரியான தடத்தில் பயணிக்க வேண்டும். வாசகர்களும் நேர்மையான ஊடகங்கள் எவை என்பதை கண்டறியவேண்டும். மழைக்கு முளைக்கும் காளான் பத்திரிகைகளில் எவை அதிகாரத்தின் குடைகளாக இருக்கின்றன என்பதையும் இருப்பதையும் இனங்காண வேண்டும். இல்லையேல் சிதைவுக் குள்ளாகியிருக்கும் நம் அனைத்தும் மேலும் சுக்குநூறாகி அழிந்துபோவதைத் தவிர்க்க இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவன்

# கட்டுநாயக்க கலங்கிய கதை!

2001 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 5.30 மணி. கம்பளை என்று பெயர் பலகை செருகப் பட்ட குளிரூட்டப்பட்ட பஸ் ஒன்று கட்டு நாயக்க விமானநிலையத்துக்கு அண்மை யாகவுள்ள இடமொன்றில் வந்து நிற்கிறது. வெற்றுவெளியான அந்த இடம் சில சமயங் களில் உள்ளூர் இளைஞர்களின் மைதா னமும் கூட. பஸ்ஸில் இருந்து இறங்கிய இளைஞர்கள் மைதானத்தில் கூடியிருந்து சிங்கள பைலாப்பாடல்களைப் பாடத்தொடங்கினர். ஆட்டமும் பாட்டமும் அந்தப்பகுதியை அமர்க்களப்படுத்தியது. என்றாலும் அந்தப் பகுதியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவருக்கு சின்னதாகச் சந்தேகம். இவர்களை இதற்கு முன் இந்தப்பகுதியில் பார்த்ததில்லையே. எதற்கும் பொலிஸுக்குச் சொல்வோம் என்று தொலைபேசி இலக்கங்களைச் சுழற்றினார். தகவல் படைத்தரப்புக்குப் பறந்தது.

சற்றைக்கெல்லாம் உறுமிக்கொண்டு பொலிஸ் ஜீப் ஒன்று அந்த இடத்துக்கு வந்தி ருந்தது. ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. அங்கு யாருமேயில்லை அந்த மைதானத்தில் அதுவரை ஆடிப்பாடிய இளை ஞர்கள் சாப்பிட்டுவிட்டு எறிந்த பிஸ்கட் பெட்டிகளையே பொலிஸார் காண முடிந்தது.

யாரேனும் அயல் கிராமத்து இளை ஞர்கள் போலும். கிரிக்கெட் போட்டியில் விளையாடிவிட்டு இங்கு வந்து பம்பலடித் துவிட்டு போயிருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றனர் பொலிஸார். அப்போது இரவு 9 மணி.

சரியாக இரண்டு மணித்தியாலங்கள் கழித்து இரவு 11 மணிக்கு மீண்டும் அதே பகுதிக்கு வந்தது கம்பளை பெயர்ப்பலகையுடனான குளிரூட்டப்பட்ட பஸ். இந்தமுறை இளை ஞர்களை இறக்கிவிட்டு அங்கு தரித்து நிற்காமல் பஸ் போய்விட்டது. சிலமணி நேரத்துக்கு முன்னர் வரை ஆடிப்பாடிக்கொண் டிருந்த அந்த இளைஞர்களின் தோற்றமே முற்றாக மாறியிருந்தது. ஒவ்வொருவரும் விமான நிலையப் பணியாளர்களின் சீருடைகளோடு, பெயர் கண்டறியமுடியாத ஆயுதங்களைச் சுமந்திருந்தனர். கண்களில் வேட்டைக்கு கிளம்பும் வெறி. முகத்தில் வெற்றியின் புன்னகை.

சிலநிமிடங்களுக்குள் அங்கிருந்து பற்றைகள் வளர்ந்த வாய்க்கால் ஒன்றினூடாக முன்னேறத்தொடங்கினர். எந்த நேரமும் சுடுலன்களை இயக்குவதற்கு கைகள் தயாராக இருந்தன. 10 நிமிடத்தில் அவர்கள் சேர வேண்டிய இடத்தை அண்மித்திருந்தார்கள். ஆயினும் எதற்காகவோ அவர்கள் சில நிமிடங்கள் காத்திருந்தார்கள், சரியாக 20 நிமிடங்களில் அவர்கள் எதற்காகக் காத்திருந் தார்களோ அது நிகழ்ந்தது. ஒளிவெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த அந்தப்பகுதியை சட்டென இருள் கவ்விக்கொண்டது. வழமை யாகவே 11.30 க்கு சில நிமிடங்கள் அந்தப்பகுதில் மின்வெட்டு இருப்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரியும். மின்வெட்டு நடைமுறையில் இருந்த அந்த சில நிமிடத்துளிகள் அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

இருளைத் துணையாக கொண்டு பாதுகாப் புக்காக அமைக்கப்பட்டிருந்த மின்வேலி கண்ணிமைக்கும் நேரத்தில் வெட்டி, எல்லோரும் உள்நுழைவதற்கான பாதை திறக்கப்பட்டது. யாரும் தாமதிக்கவில்லை. ஆயுதங்கள், வெடிபொருள்களோடு அனைவரும் ஊடுருவி, ஏற்கனவே திட்டமிட்டபடி நிலையெடுத்துக் கொண்டனர்.

அதிகாலை 2 மணி வரை அப்படியே தத்தம் நிலைகளில் ஆடாமல் அசையாமல் இருந்தார்கள். ஏனெனில் அதிகாலை 2 மணியுடன் சகல வெளி நாட்டுவிமானங்களும் அங்கிருந்து கிளம்பிவிடும் அவர்களுக்கு முன்னரே தெரியும். வெளிநாட்டு விமானங்கள் தரித்து நிற்கும் போது தாக்குதலைத் தொடங்கினால் சிலவேளைகளில் அவற்றுக்கும் ஏதாவது ஊறு நேர்ந்தால் அது சர்வதேசரீதியில் சில எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதால்தான் உள்நுழைந்த பின்னும் அவர்களின் காத்திருப்பு தொடர்ந்தது.

நேரம் நெருங்கிவிட்டது. திறக்கப்பட்டது களமுனை. வந்தவர்கள் இரு அணிகளாகப் பிரிந்து கொண்டனர். ஒரு அணி நீர் கொழும்பு கொழும்பு பிரதான வீதியின் ஓரமாக இருக்கும் வாய்க்காலூடாக ஆயுதங்களுடன் நகரத் தொடங்கியது.வீதியூடாக நகர்ந்தால் அங்கு முழத்துக்கு முழம் பொருத்தப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கமெராக்கள் கரும்புலிகளைக் காட்டிக் கொடுத்துவிடும். இதனால்தான் வாய்க்காலூடாக முன்னேற முடிவு செய் யப்பட்டது. விமான நிலைய பணியாளர்களின் சீருடையில் விமான நிலைய முன்பக்க பகுதிக் குள் பிரவேசித்த அணியினரின் கைகளில் இருந்த சுடுகலன்கள் நெருப்பைக் கக்கத் தொடங்கின. எதிர்பாராத இந்தப்பாய்ச்சலால் அங்கிருந்த படையினர் திகைத்துப் போய் நிற்க, கரும்புலிகள் காற்றாக மாறி, கட்டுநாயக் கவுக்குள் நுழைந்தனர். எங்கும் தீக்கோளங்கள் வட்டமிடத்தொடங்கின. தலைநகரின் தூக்கம் வெடியோசைகளில் தொலைந்து போனது.

முன்புறக் களமுனையில் இத்தனை களோபரங்கள் நடக்க, படைத்தரப்பின் முழுக்கவனமும் அங்கேயே குவிந்திருந்தது. இதனை நன்கு பயன்படுத்திக் கொண்ட கரும் புலிகளின் அடுத்த அணி, கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் பின் பக்க முட்கம்பிகளை வெட்டி அகற்றிக் கொண்டு, விமானங்கள் தரித்துநிற்கும் ஓடு பாதை வரை ஊடுருவி விட்டனர். சீறிப்பாய்ந்த ரவைகளாலும் ரொக்கெட் லோஞ்சர்களின் வேகத்தை தாங்கமுடியாமல் தீப்பிடித்து எரியத் தொடங்கின விமானங்கள். சடசடவென முழங்கும் துப்பாக்கிகளோடு விரைந்த கரும்புலிகள் அதிரடித் தாக்குதலைத் தொடுத்தபடி விமான நிலையத்தின் முக்கிய இடங்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் நிறுவப் பட்டிருந்த நிலைகள், ராடர் மையங்கள், விமான நிலையத்திற்கான மின் இயந்திர அறை என்பன புலிகளின் காலடியில் வீழ்ந்திருந்தன. சிலமணிநேரங்கள் விமானநிலையத்துக் கான மின்விநியோகமும் கரும்புலிகளால் தடுக்கப்பட்டது.

ஒருகட்டத்தில் விமானத்தளத்தின் முன்புறமாக முன்னேறிய அணியினரும், பின்புறமாக ஊடுருவிய அணியினரும் ஒன்றாக இணைந்து, ஓடுபாதையில் ஒளிந்திருந்த இராணுவ விமானங்களைத் தேடித்தேடி அழிக்கத் தொடங்கினர்.விமான நிலையத் திற்கான எரிபொருள் தாங்கியையும் எரியத் தொடங்கியது. எங்கும் புகைமண்டலம். தீப்பந் தங்களாக எரிந்து கொண்டிருந்த விமானங் களால் அந்தப்பகுதியே வெளிச்சக்காடானது. இனி அழிப்பதற்க்கு இராணுவ விமானங்கள் ஏதுமில்லை என்ற நிலையில், அங்கிருந்து நகர்ந்த கரும்புலிகள் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குள் ஊடுருவி அங்கு நிறுத்தப்பட்டிருந்த இலங்கைக்கு சொந்தமான ஆள்களற்ற பயணிகள் விமானங்களையும் தகர்க்கத் தொடங்கினர். படைத்தரப்பு ஏதும் செய்யமுடியாமல் கையைப்பிசைந்து கொண்டு கரும்புலிகளின் சாகசத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. எவ்வளவுநேரம் தான் உயிர்ப் பயத்தில் ஒளிந்திருக்க முடியும். மேலிடத்தில் இருந்து கட்டளைக்கு மேல் கட்டளைகள் வந்தபின்னர் பெரும் படைபலத்துடன் மீண்டும் விமானத்தளத்தை கைப்பற்ற இராணுவம் பாதபாடுபட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும், 14 கரும்புலிகளும் விமான நிலைய பணியாளர்களின் சீருடையில் இருந்தால் யார் புலிகள்? யார் சிப்பந்திகள்? என்று இனங்கண்டுகொள்ளமுடியாமல் படையினர் முழிபிதுங்கினர். கைவசம் கொண்டு சென்றிருந்த வெடிபொருள்கள் அத்தனையும் முடிந்து போக, இனித் தகர்ப்பதற்கு எந்தவொரு விமானமும் அங்கில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட கரும் புலிகள் தம் திட்டத்தின் கடைசி அத்தியாயத்தை அரங்கேற்றத் தொடங்கினர். தங்கள் உடலில் கட்டியிருந்த தற்கொலை அங்கியை வெடிக்கச் செய்து, எந்தத் தடயமும் இன்றி சிதறிப்போனார்கள். அதன் பின்னே ஆயிரம் பேர் கொண்ட இராணுவப்படையணி உள்நுழைய முடிந்தது. கிட்டத்தட்ட 22 விமானங்கள் ஒரு அதிகாலைப் பொழுதில் கருகிப் போயிருந்தன. 14 கரும்புலிகள் காற்றோடு கலந்து, தமிழனின் வீரத்தை உலகறியச் செய்திருந்தார்கள்.

2001 ஆம் ஆண்டு ஜீலை 24 ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற கட்டுநாயக்க வான்படைத் தளம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீதான தாக்குதல்கள் இராணுவச் சமநிலையில் புலிகளின் கரங்களை மேலெழச் செய்திருந்தன. எதற்கும் அசையாத இரும்புப்பெண் சந்திரிகா, தன் சிம்மாசனத்தை விட்டிறங்கி உலகின் கால்களில் வீழ்ந்து புலிகளைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து வரும்படி கதறச் செய்யுமளவுக்கு அந்தத்தாக்குதல் இலங்கையை உலுப்பியிருந்தது. அண்மையில் கூட பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரே நாளில் 22விமானக்களை இழப்பதென்பது எவ்வளவு பெரிய அழிவு என்று கட்டுநாயக்க தாக்குதலை மறக்கமுடியாமல் அழுதுவடித்திருந்தார். அந்த தாக்குதல் நிகழ்ந்து 12 வருடங்கள் கடந்தபோதும் இன்னும் அதன் அதிர்வு இருக்கவே செய்கிறது.



## பின்னணியில் நின்றவர்கள்

கட்டுநாயக்க வான் தளம் மீதான தாக்குதல் புலிகளின் வீரத்தை பறைசாற்றும் தாக்குதலாக உலக இராணுவ ஆய்வாளர்களால் இன்றும் வியக்கப்படுகின்றது. இத்தாக்குதலுக்குரிய வழிநடத்தலையும் புலனாய்வு வேவு நடவடிக்கைகளையும் மேற் கொண்டவர் விடுதலை புலிகளின் படையப் புலனாய்வுப் பிரிவு தளபதியாக பிற்காலத்தில் அறியப்பட்ட கேணல் சாள்ஸ் எனப்படும் அருள்வேந்தன். தென்னிலங்கையிலிருந்து கொண்டு புலிகளின் தாக்குதல்கள் தொடர்பான புலனாய்வுச் செயற்பாடுகளை இவரே மேற்கொண்டார். ஒரு தளபதியாக சாள்ளை மக்கள் அறிந்ததை விடவும் சாதாரண தமிழ்ப் பொதுமகனாகவே அறிந்திருந்தனர். கட்டுநாயக்க தாக்குதல் பற்றிய விசாரணைகளின் போது சம்பந்தப்பட்ட விடயங்கள் படைத்தரப்புக்குத் தெரியவந்த பின்னர் சாள்ஸ் தேடப்படும் புலிகளின் பட்டியலில் இடம் பெற்றார். ஆயினும் அதன் பின்னும் சாள்ஸ் சர்வசாதாரணமாக தென்னிலங்கையின் மூலை முடுக்கெங்கும் நடமாடவே செய்தார். இவர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளரான பொட்டம்மானின் நெருங்கிய சகா. சாள்ஸின் திட்டமிடல் சரிவர நிறைவேறத் துணையாகச் செயற்பட்டவர்கள் இன்னும் இருவர். ஒருவர் கடற்புலிகளின் உதவித்தளபதியான விநாயகம். மற்றையவர் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான மூத்தவண்ணா. இவர்கள் இருவருமே தாக்குதல் அணிகளை கொழும்புக்கு நகர்த்தல், ஆயுதங்களை உரிய இடங்களுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தல் என்பவற்றை மேற் கொண்டனர் என்று இராணுவத் தரப்புக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17, ஜூலை – 23, ஜூலை, 2013

# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

sudarolijaffna@gmail.com

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 567 7609

முன்பக்க ஒளிப்படம் -
விருமாண்டி

## மக்கள் மனதறிந்த அரசியல்

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். கூட்டமைப்பு இரண்டு பட்டால் பேரினவாதிகளுக்குக் கொண்டாட்டம். எதை மனதில் நினைத்துக் கொண்டு அரசு காய் நகர்த்தியதோ அதற்கேற்றால் போல் கூட்டமைப்பின் வேட்பாளர் யார் என்பதில் அந்தக் கட்சிக்குள் பெரும் குடுமிப்பிடிச் சண்டை அரங்கேறியிருக்கிறது. தமிழ்த் தேசியத்தின் மீது அக்கறை கொண்ட கட்சிகளை உள்ளடக்கிய கூட்டமைப்புக்குள் ஜனநாயக ரீதியான முடிவுகள் எடுக்கப்படுவதில்லை என்பதையே முதலமைச்சர் வேட்பாளர் பிரச்சினை வெளிப்படுத்தியிருக்கிறது.

வடமாகாணத் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே கூட்டமைப்பைப் பதிவு செய்வது தொடர்பில் உள்ளுக்குள் சில சலசலப்புகள் தோன்றியிருந்தன. அதனைச் சமாளிப்பதற்காகவும், தேர்தலை எதிர் கொள்வதற்காகவும் ஒருங்கிணைப்புக் குழு ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. இதில் கூட்டமைப்பில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் சம விகிதத்தில் உள்வாங்கப்பட்டிருந்தன. இந்தக் குழுவே முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் படியே கொழும்பில் முதலமைச்சர் வேட்பாளரை அறிவிப்பதற்காக கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழு கூடிய போது, அதிர்ச்சி காத்திருந்தது. ஒருங்கிணைப்புக்குழுவில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்துக்கு மாறாக கூட்டமைப்பின் தலைவரும் அவருக்கு நெருக்கமான சிலரும் ஏற்கனவே ஒரு வேட்பாளரை தாமே தீர்மானித்து விட்டு அவரை ஏற்றுக் கொள்ளும் முடிவை மற்றைய கட்சிகளிடம் திணிக்கும் முயற்சிகளில் இறங்கினர்.

இத்தகைய ஜனநாயகத்துக்குப் புறம்பான முடிவே கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக்கட்சியின் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிளைகளிடம் பெரும் கொதிப்பை உண்டாக்கியிருந்தது. எல்லோரும் கட்சி சார்பில் ஒரு வேட்பாளரை முன் நிறுத்தியிருக்கையில் எதற்காக கூட்டமைப்பின் தலைவர் வெளியில் இருந்து ஒருவரை முதல்வராக முன்னிலைப் படுத்த முனைகிறார்? என்ற சீற்றம் அவர்களிடம் ஏற்பட்டு, தலைமைக்கெதிராக கிளர்ந்தெழும் நிலையும் உருவாகிவிட்டது.

தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் வல்லமை கொண்டது என வர்ணிக்கப்படும் வடமாகாணத் தேர்தலின் போது கூட்டமைப்பினர் மனதளவில் பிளவு பட்டு நிற்பது ஆரோக்கியமான விடயம் அல்ல. கூட்டமைப்பின் பலவீனம் அரசதரப்புக்கு சாதகமாகி விடக்கூடும். கட்சிகளினதும், ஆதரவாளர்களினதும், மக்களினதும் விருப்பு வெறுப்புகளை அறிந்து அதற்கேற்ப முடிவெடுப்பதே ஒரு கூட்டணியின் தலைவரின் பொறுப்பாகும். அதை விடுத்து தன்னிஷ்டப்படி முடிவெடுப்பதென்பது கட்சியிடையே தேவையற்ற பிளவுகளையும், அபிப்பிராயபேதங்களையும் உருவாக்கிவிடும். அத்துடன் கட்சி பற்றிய மக்களின் நம்பிக்கையும் இத்தகைய ஏகபோக முடிவுகளால் சிதைந்து விடக் கூடும். காலம் இன்னமும் தூரப் போகவில்லை. இனியாவது மக்களின் மனம் அறிந்து அரசியல் செய்யத் தமிழ்க் கட்சிகளும் அவற்றின் தலைமைகளும் முன்வர வேண்டும்.

- பிரமன்

# இதுதான் முதலடி!



சீலன் சாவடைந்து ஒருவாரம். அன்றைக்குத் தான் புலிகள் மிக முக்கியமான அந்த முடிவை எடுத்திருந்தார்கள். "எதிரியைக் கண்டு இனி நாங்கள் ஓடுவதில்லை. எங்களைக் கண்டு எதிரி ஓட வேண்டும்" இதுதான் அந்த முடிவு.

அது போராளிக் குழுக்களின் ஓடுதலின் காலமாக இருந்தது. பேரினவாதத்தால் தொடர்ந்து அடக்கப்பட்ட தமிழினத்தின் விடிவுக்காக ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் தத்தம் கொள்கையின் படி வெவ்வேறு அமைப்புகளாக செயற்படத் தொடங்கியிருந்தார்கள். ஒவ்வொரு அமைப்பிலும் போராளிகளின் எண்ணிக்கை, ஆயுதங்களின் தொகை என்பன மட்டுப்பாடாகவே இருந்தன. சுதந்திரமாக வெளிய நடமாட முடியாத நிலை, போதிய பொருளாதார வளம் இன்மை, விடுதலைப் போராட்டம் பற்றிய விழிப்புணர்வு தமிழ் மக்களிடையே அப்போது பெரிதாக இல்லாமை என்பனவே இத்தகைய மட்டுப்பாடுகளுக்குக் காரணம். எனவே சொற்ப தொகையான போராளிகள் தமது ஆளணியையும், ஆயுதங்களையும் பாதுகாப்பதற்காக படைத் தரப்பைக் கண்டவுடன் ஒட்டமெடுப்பதே அதுவரை வழக்கமாக இருந்தது.

அன்றைக்கு சீலனும் இத்தகைய தப்பித்தோடுதலின் போதுதான் சாவடைய நேரிட்டது. புலிகளின் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்குரிய தளபதியாக மட்டுமன்றி உற்ற நண்பனாகவும் இருந்தவன் சீலன். மக்களின் விடிவு பற்றிய அதிக கனவுகளை ...ண்டிருந்தவன். இயக்க நடவடிக்கை ஒன்றுக்காக சகபோரா...டன் மீசாலைப் பகுதியில் சீலன் சென்றுகொண்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக இராணுவத்தை எதிர்கொள்ள நேரிட்டது.

தப்பி ஓடுவதைத்தவிர சீலனுக்கும் மற்றைய போராளிக்கும் வேறு தெரிவுகள் அப்போதைக்கு இருக்கவில்லை. வேட்டை நாய்கள் போல நாலாபுறத்திலிருந்தும் இளைக்க இளைக்க படைத்தரப்பும் அவர்களை விடாமல் துரத்திக்கொண்டே இருந்தது. இரண்டு புலிகளையும் வேட்டையாடியே தீருவது என்ற வெறியோடு சிப்பாய்களின் துப்பாக்கிகளில் இருந்து கண்மூடித்தனமான வேட்டுகள் தீர்க்கப் பட்டன. அந்தச் சன்னங்களில் ஒன்று சீலனைப் படுகாயப்படுத்தியது. இனி அவனால் ஓட முடியாது. ஆனால் சீலனை அப்படியே விட்டுச் செல்ல சக போராளிக்கு மனம் இல்லை.

காயம்பட்ட சீலனை தோளில் சுமந்து கொண்டு தப்பிக்க அவன் நினைத்தான். ஆனால் அப்படிச் செய்தால் விரைவாகவே அந்தப் போராளி களைத்துப் போவதோடு அவனின் ஓட்ட வேகமும் மந்தமாகிவிடும். இதனால் இருவருமே படைகளிடம் சிக்க வேண்டியிருக்கும். இந்தக் கணத்தில் தான் மற்றவர்கள் எவரும் எடுக்கத் தயங்கும் முடிவை சீலன் எடுத்தான்.

(அடுத்த பக்கம் செல்லுங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் முதலடி!



(முன்பக்க தொடர்ச்சி)

''மச்சான்! இனியும் என்னால ஒட முடியாது. ஆமியிட்டையும் மாட்டுப்படக் கூடாது. நாங்கள் சிக்கினாலும் கஷ்டப்பட்டு வாங்கின ஆயுதங்களை பறிகொடுக்கக் கூடாது. அதுக்கு ஒரு வழிதான் இருக்கு'' என்று காயத்தின் வலியையும் பொறுத்துக் கொண்டு சீலன் சொன்னான். என்ன வழி என்பது போல மற்றைய போராளி அவனைப் பார்த்தான். சலனமற்ற ஆனால் உறுதியான குரலில் சீலன் இப்படிக் கட்டளையிட்டான்.

''என்னைச் சுட்டுப்போட்டு துவக்கை எடுத்துக் கொண்டு ஓடு''

தோழனுக்கு இதைக் கேட்டதும் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. அவன் திகைத்துப் போய் நின்றான். மீண்டும் சீலன் புலியாக உறுமினான்.

"பார்த்துக் கொண்டு நிக்காதை. அவங்கள் கிட்ட வந்திட்டாங்கள். என்னைச் சுட்டுப் போட்டுத் துவக்கை எடுத்துக் கொண்டு போய் தம்பியிட்ட(தலைவரிட்ட) குடு"

இனியும் தாமதிக்க முடியாது. ஆபத்து நெருங்கிக் கொண்டு இருந்தது. சற்றுத் தூரத்தே சிங்களக் கூச்சல்கள் கேட்கத் தொடங்கியிருந்தது. வேறு வழியில்லை. சீலனின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துதான் ஆக வேண்டும். ஆறாய்ப் பெருகும் கண்ணீரை துடைக்கவும் அவகாசமின்றி மனதை இரும்பாக்கிக் கொண்டு சீலனை நோக்கி துப்பாக்கியை நீட்டினான் சக போராளி. அடுத்த கணம்,

"டுமீல்!"

ஒற்றை வேட்டொலியில் அதிர்ந்தது அந்தப் பகுதி. சீலன் காவியமாகிப் போயிருந்தான். அவனின் ஆயுதத்தோடு மற்றைய போராளி பாதுகாப்பாக தளம் திரும்பிவிட்டான். ஆனால் தளபதி சீலன் மட்டும் வரவேயில்லை.

சீலனின் இழப்பு புலிகளிடத்தே பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

"இனியும் ஓடமுடியாது. எங்களுக்கு பயத்தை ஏற்படுத்தும் எதிரிக்கு நாங்கள் பயத்தைத் திருப்பிப் பரிசளிக்க வேண்டும்'' புலிகளின் தலைவர்



சீலன் (சாள்ஸ் அன்ரனி)

கட்டளையிட, அதைச் செயற்படுத்த களமிறங்கினான் செல்லக்கிளி அம்மான்.

அம்மான் இயக்கத்தில் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவர். இயக்கத்துக்கு ஆயுதம் வாங்க பணமின்றி எல்லோரும் கையைப் பிசைந்துகொண்டிருந்த போது தன் வீட்டிலிருந்த மாட்டை விற்று பெற்ற பணத்தைக் கொடுத்து ஆயுதம் வாங்கியவன் தான் அம்மான். எல்லாவற்றையும் விட மக்களும் விடுதலையுமே அம்மானின் உயிர் மூச்சாக இருந்தன. தலைவரின் கட்டளைப்படி சிங்களப்படைகள் மீதான முதலாவது வலிந்த பெருந் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கான பொறுப்பை செல்லக்கிளி அம்மான் ஏற்றுக் கொண்டான்.

வேவுப் பணிகள் பல இடங்களிலும் நடந்தன. இறுதியில் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் களமுனையைத்திறக்கமுடிவுசெய்தான் செல்லக்கிளி.

வழமையாக பலாலியில் இருந்து கோட்டைக்கு முன்னிரவில் ஜீப் மற்றும் கவச வாகனம் என்பவற்றோடு படைத் தரப்பு வருவது வழமை. அந்த அணியையே செல்லக்கிளி அம்மான் இலக்கு வைத்தான். மாலைக் கருக்கலில் பலாலி வீதியில் கண்ணி வெடியை எவரும் அறியா வண்ணம் அம்மானின் அணிகள் புதைத்தன. திட்டம் தயாரானது. பின்னால் வரும் கவச வாகனத்தை கண்ணி வெடி தூக்கி எறிய, முன்னால் வரும் ஜீப் மீது பதுங்கி இருக்கும் போராளிகள் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டும். இதுதான் திட்டம். தாக்குதலில் கடைசி நேரத்தில் தானும் பங்கு கொள்ளப் போவதாக புலிகளின் தலைவரும் தாக்குதல் அணியில் இணைந்து கொண்டார். எல்லாம் நினைத்தபடியே நடந்துகொண்டிருந்தது. திருநெல்வேலிச் சந்தியை வாகனங்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.



புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செல்லக்கிளி அம்மான்.

பதுங்கியிருந்த புலிகள் பாய்வதற்கான தருணத்தைக் கணக்கிட்டுக் கொண்டார்கள். படைகளின் வாகன அணி தபால் பெட்டிச் சந்தியை நெருங்கிய போது, அம்மான் பதற்றத்தில் திட்டமிட்டதற்கு மாறாக ஜீப் வரும் போதே கண்ணிவெடியை வெடிக்கச் செய்தான். தூக்கி எறியப்பட்டது ஜீப்.

கவச வாகனத்தில் வந்த படைகள் ஒரு கணம் திகைத்துப் போனாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு துப்பாக்கி வேட்டுகளைக் கக்கியபடி தப்பி ஓடப் பார்த்தனர். ஆனால் புலிகள் விடுவதாக இல்லை. திட்டமிட்ட படியே கவச வாகனத்தின் மீது புலிகளின் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. அந்த முன்னிரவில் வானத்திற்குக் கீழே - தார் றோட்டில் - திருநெல்வேலியில் துப்பாக்கிச் சன்னங்கள் நட்சத்திரங்கள் போல ஒளிர்ந்தன. இழப்புகளோடு முதல்முறையாக புலிகளைக் கண்டு ஓடத் தொடங்கியது இராணுவம். கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக இந்த ஓட்டம் நிற்கவில்லை.

படைகள் மீதான முதலாவது மரண அடி அது. ஒரே தாக்குதலில் 13 சிப்பாய்களை படைத்தரப்பு இழந்து போனது. இந்தத் தாக்குதலின் மூளையாகவும், தளபதியாகவும் இருந்த செல்லக்கிளி அம்மானை அன்றைய நாளில் புலிகள் களப்பலி கொடுக்க வேண்டியிருந்தது. தான் சாவடைந்து போனாலும் வெற்றி தேடிக் கொடுத்துவிட்டே அம்மான் கண்மூடியிருந்தான்.

இந்தத் தாக்குதல் அழுத்தமான செய்தி ஒன்றை பேரினத்தின் காதுகளில் ஓங்கி அறைந்தது. அரசு நினைப்பது போல போராளிகள் நாலைந்து பேர் கொண்ட சாதாரண கும்பல் அல்ல. அவர்கள் படைகளையே கிலிகொள்ள வைக்கும் அளவுக்கு சக்தி கொண்டவர்கள் என்பதே அந்தச் செய்தி. திருநெல்வேலியில் கொல்லப்பட்ட 13 சிப்பாய்களினதும் சடலங்கள் கொழும்பில் பெரும் கொந்தளிப்பை உண்டாக்கின. 83 கலவரம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. தமிழர்கள் தலைநகரில் வேட்டையாடப்பட்டனர். சரியாக 18 வருடங்கள் கழித்து அதே ஜூலையில் தலைநகருக்குள் புகுந்த கரும்புலிகள் கட்டுநாயக்கவில் பூகம்பத்தை உற்பத்தி செய்தார்கள். இனக்கலவரத்தில் வாங்கிய வலிகளை 18வருடங்களின் பின்னர் திருப்பிக் கொடுத்தார்கள்.

யாழ்ப்பாணம் தொடக்கம் கொழும்பு வரை புலிகளைக் கண்டு படைகள் பயந்தோடத் தொடங்கிய காலத்தின் பிள்ளையார் சுழி செல்லக்கிளி அம்மானால் போடப்பட்டு 30 வருடங்கள் முடிந்து போய் விட்டன. ஆனாலும் இன்னமும் தீராமல் எரிகிறது இனப்பிரச்சினைத் தீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழில்: ஜஸ்ரீனா

(சண்டே ரைம்ஸ் - வசந்த குருகுல சூரிய எழுதியது..)

# 13+வும்

## இந்தியாவின் ஆழ்ந்த ஏமாற்றமும்!

**"வடமாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக இலங்கை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் அளிக்கப்பட்டுள்ள முக்கியமான சில அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்வதற்கு இலங்கை அரசு திட்டமிடுவதாகக் கூறி வெளிவரும் செய்திகள் குறித்து பிரதம மந்திரி மன்மோகன்சிங் தமிழ் தேசியக் கூட்டமைப்புக் குழுவினருக்கு அவரது ஆழ்ந்த ஏமாற்றத்தையும் கவலையையும் வெளிப்படுத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அலுவலகப் பேச்சாளர் கூறியுள்ளார்.**




வெகு அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒரு குழுவினர் இந்தியாவுக்கு விஜயத்தை மேற் கொண்டு இந்திய உயர் மட்ட அதிகாரத்திலுள்ளவர்களுடன் வழமைபோல் பேச்சு வார்த்தைகளை நடத் தியிருந்தனர். இலங்கையின் தேசியப் பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் குறித்த கேள்விகளை இது எழுப்பியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைமைப்பினன் இந்திய விஜயத்தை அடுத்து இம்மாத முற்பகுதியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ளவென இந்தியாவின் தேசியபாதுகாப்பு ஆலோசகரான சிவசங்கர் மேனன் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

அரசியலமைப்பில் மாற்றம் செய்யப்படவென முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து ஏனைய அரசியல் கட்சிகளுடன் அவர்களின் ஆட்சேபனைகள் பற்றிக் கலந்தாய்வு செய்யப்படாமல் அதனை நாடாளுமன்றில் 19 ஆவது திருத்தமாக முன்வைக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராகப் பெயரிடப்பட்டுள்ள அமைச்சர் நிமால் சிறீபால டி.சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தரப்பை பிரதிநிதிப்படுத்தும் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைச் சபாநாயகர் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கு பற்றுபவர்களாக அறிவித்துள்ளார். எதிர்தரப்பு கட்சிகள், அவர்களது சார்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்குபற்றப்போபவர்களின் பெயர்களை இன்னமும் தெரிவிக்கவில்லை.

1980 களில் வடக்கு கிழக்கு ஒன்றிணைந்து உருவாகிய மாகாண சபையினை அந்நேர முதலமைச்சர் ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்ததையடுத்து நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டினை மதிக்கும் எவரும் ஏற்றுக்கொள்ள முடியாதுமட்டுமீறிய அளவிலான தவறின் காரணமாக எழுந்த உணர்வலைகளினால் உந்தப்பட்டு பெரும் அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டது. அதனையடுத்து 2006 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கு இணைப்பானது சட்டபூர்வமற்றது என உயர் நீதிமன்றினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் சிவசங்கர் மேனன் முன்பொருதடவை இலங்கைக்கு வந்திருந்த போது ஊடகவியலாளர்கள் அவரிடம் "13ஆவது திருத்தத்தை முழுதளவில் நடைமுறைப் படுத்துவது குறித்துப் பிடிவாதமாக உள்ளீர்களா?" எனக் கேள்வியெழுப்பியதற்கு அவர் "இங்குள்ளவர்கள் 13 ஆவது திருத்தத்தை விடவும் சிறந்ததான ஒன்றினைச் செய்ய விரும்பினால் அவர்கள் செய்யக்கூடும். அவர்கள் அதை வித்தியாசமான முறையில் செய்ய விரும்புகின்றனர். அது அவர்களுக்கானது, ஆனால், அதனைச் சகலகட்சிகளும் ஏற்றுக்கொண்டதாக இருத்தல் வேண்டும்" எனக் கூறியதை இன்று மீள நினைவு கூறுதல் நன்று (இந்துபத்திரிகை 29/06/2013)

இந்திய ஏமாற்றத்திற்கு அதிகம் சச்சரவை உண்டுபண்ணுவதற்கு மூலமாக இருக்கக் கூடியது. அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள இரண்டாவது திருத்தமேயாகும் அதாவது இரண்டு மாகாண சபைகள் இணைய விரும்பின் அவற்றிற்கிடையிலான ஒத்திசைவுடன் இணையலாமென்பதை பெரும்பான்மையான மாகாணசபைகளின் ஒத்திசைவுகளுடன் என மாற்ற முயற்சிப்பதேயாகும். இத்திருத்தத்திற்கெதிரான நெருக்கடிகள் ஆளும் தரப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்குள்ளும் மற்றும் வெளிக் கட்சிகளுக்குள்ளும் நிலவுகின்றன. அரசின் இந் நகர்வானது மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வின் குறிக்கோள்களை வலுவிழக்கச் செய்துவிடுமென்பதே அவர்களின் வாதமாகவுள்ளது.

இதுகுறித்தும் மற்றும் விவாதத்துக்குரிய ஏனைய பிரச்சினைகளையும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு முன் வைக்கப் போவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பரில் நடத்தப்படவுள்ளது. அதற்குள் இப்பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தீர்வுகள் எட்டப்படாதுவிட்டாலும்கூட அது குறித்துக் கவலைப்படாது தேர்தலை முடிவு செய்தபடி நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் மாகாணசபைகளுக்கான காணி மற்றும் பொலிஸ் அதிகாரப் பகிர்வு குறித்தும் அத்துடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கூட்டுப் பங்காளர்கள் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் ஆட்சேபனைகள் உட்பட சகல விடயங்களும் விவாதிக்கப்படவுள்ளன.

இப்பிரச்சினைகள் சகலமும் இனவாத உணர்வுகளைக் கிளறி விடுவதற்காகவே உற்பத்தியாக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டும் வரப்படுவதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமானதிஸ்ஸ வித்தாரண கூறிவருகிறார். அத்துடன் காணி பொலிஸ் அதிகாரங்கள் எதுவும் எந்த வொரு மாகாணத்திற்கும் இன்னமும் அமுல்படுத்தும் நடைமுறை எதுவும் செயற்படுத்தப்படவில்லை எனவும் அவையாவும் எழுத்துவடிவில் புத்தகத்திலேயே உள்ளன எனவும் கூறியுள்ளார்.

மேலும் அவர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டாலும் அவர்கள் அவை எதனையும் அமுல்படுத்த முடியாது ஏனெனில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மட்டுப் படுதப்பட்டவையாகவும் மட்டும் அல்லாமல் அதற்குவப் பின்னர் அரசினால் அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்ட 18 ஆவது திருத்தத்தினூடாக அவை குறைக்கப்பட்டுள்ளதோடு ஜனாதிபதியின் தலையீடும் வேண்டப் பட்டுள்ளது என விளக்கமாக கூறியுள்ளார்.

இருந்த போதிலும் மாகாணசபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்கள் நாட்டின் பொதுப் பாதுகாப்புக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்ற கருத்துகளை ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. ஆயினும், மாகாணசபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் உண்மையில் உரிய முறையில் மாற்றப்படாதவரைக்கும் அது குறித்து உய்த்துணர்ந்து மதிப்பீடு செய்வதற்கு எந்தவொரு வழியும் இல்லை.

வடமாகாணத் தேர்தல் பற்றிய அறிவிப்பானது திடீரென இந்த விடயத்தை ஓர் விவாதத்திற்கும் அத்துடன் எதிர்காலம் பற்றிய அச்சவுணர்வுக்கும் உரிய ஒரு பரபரப்பான விடயமாக ஆக்கியுள்ளது.

இக்கவலைகள் யாவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முற்றிலுமாக கலந்துரையாட வேண்டிய தேவையுள்ளது. சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று மாகாணசபை பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பிலான விதிக்கூறுகள் குறித்து நன்கு புரிந்து கொண்டு கலந்துரையாடப்படல் வேண்டும்.

இறுதியாக மிக அண்மையில் 13 ஆவது திருத்தம் குறித்து இந்தியாவின் கருத்து வெளிப்பாடுகளைத் தொடர்ந்து திருத்தங்கள் மேற் கொள்வதா அல்லது விட்டுவிடுவதா என்பதே தற்போது அரச தரப்பின் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அத்துடன் சுதந்திர பிரச்சினையாகக் காணப்படுகின்றது. அத்துடன் சுதந்திர நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாடு என்பவற்றிற்கு முக்கியத்துவமளித்து சரிசமமாக அதிகாரப் பகிர்வினை மேற் கொள்ளுதல் அவசியமாகவுமுள்ளது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதன் படி மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தால் தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் வடமாகாணத்திற்கு ஓர் தன்னாட்சியளவிலான உரிமைகள் கிடைக்கும். இவை கூட ஓர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்படுத்தக் கூடியதாகவும் இருப்பதை ஏனோ அரசாங்கத்தின் பட்டிக்குள் இருக்கும் இனவாதத் தீவிரவாதிகள் புரிந்து கொள்ளாதவர்களாய் இருக்கின்றார்களோ தெரியவில்லை.

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு சிறந்த ஜனநாயக வழிமுறையாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைய வேண்டுமாயின், அக்குழுவில் எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகளும் மற்றும் சிறுபான்மையினரைப் பிரதிநிதிப்படுத்தியதும் கட்சிகளின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் பங்கு பற்றிப் பரந்த மனப்பான்மையுடன் கலந்துரையாடி ஓர் கருத்தொற்றுமையை ஈட்டுதல் வேண்டும்.

அதை விடுத்து அரசாங்கம் ஒரு பக்கசார்பாக அதனுடைய தீர்மானங்களை எடுக்குமேயாயின் இச் செயல் முயற்சியின் நம்பகத்தன்மை பாதிப்புக்குள்ளாவதுடன் அதன் நோக்கமும் தோல்வியடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாச மலர்கள்

வி. அனிதா



சிறுகதை

"ஆனால் ஆண்டவன் நல்லவர்களையும், பிரியமானவர்களை யும் இவ் உலகில் நீண்ட காலம் வாழ விட மாட்டான் என்பதற்கு இணங்க காவேரி ஒரு விபத்தில் இறந்து விட்டாள். இவனுக்கு இருந்த ஒரே அன்பான உறவு காவேரி. அவனது வலது கரமாகக் காவேரி இருந்தாள்.

பிள்ளையார் கோயில் மணி ஓசை 'டாங் டாங்' என்று ஒலித்தது. காவேரி கண் விழித்தது தான் தாமதம் அடுக்களையில் பம்பரம் போல் சுழன்றாள். பரத் அவளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுத்தான். அண்ணா நீ ஏன் இவ்வளவு கஸ்ரப் படவேணும். தோட்டவேலை, கல்லூரி படிப்பு அத்துடன் இந்த வேலைகளையும் என்னால் தானே. அண்ணா நீ கஸ்ரப்படும் போது எனக்குக் கஸ்ரமே தெரிவதில்லை. காவேரி நீ தான் என் உயிர். என் செல்ல முகத்தை எப்ப வுமே பார்த்துக் கொண்டே இருக்க வேணும். அண்ணா நாங்கள் எப்பவும் பிரியக் கூடாது. காவேரி நம் வாழ்க்கையில் பிரிவு என்ற சொல்லுக்கே இடமிருக்காது. சட்டம், பந்தம், பாசம் எல்லாமே பணத்திற்கு அடிமையாக இருக்கின்ற இந்தக் காலத்தில் எதுவித சுயநலமும் எதிர்பார்ப்பும் இல்லாத இரண்டு பாச உள்ளங்கள்.

ஆனால் ஆண்டவன் நல்லவர்களையும், பிரியமானவர்களையும் இவ் உலகில் நீண்ட காலம் வாழ விட மாட்டான் என்பதற்கு இணங்க காவேரி ஒரு விபத்தில் இறந்து விட்டாள். இவனுக்கு இருந்த ஒரே அன்பான உறவு காவேரி. அவனது வலது கரமாகக் காவேரி இருந்தாள். காவேரியின் ஒரு கண்ணாகப் பரத் இருந்தான். அதனால் காவேரியின் இறப்பை ஜீரணிக்க முடியாத பரத் புலம்பினான். கடவுளே! ஏன் என்னை அநாதையாக்கினான்? நான் என்ன பாவம் செய்தேன். அவளுக்காகத்தானே நான் வாழ்ந்தேன். அவளே இல்லை என்று ஆனதன் பின் எனக்கு ஏன் இந்த வாழ்க்கை. அவளை மணக்கோலத்தில் பார்க்க ஆசைப்பட்டேன். இந்தக் கோலத் தில் பார்க்க வேண்டி வந்துவிட்டதே என கதறினான், அழுதான், துடித்தான் பலன் என்ன?

காலங்கள் காயங்களை மாற்ற லாம். ஆனால் காவேரியின் பிரிவை பரத்தால் மறக்கமுடியவில்லை. பரத் தின் நண்பர்கள் பரத்தை மாற்ற முயற்சி செய்தார்கள். எதுவித பலனும் இல்லை. பரத்தால் கல்லூரிக்குள் முன்பு போல் கலகலப்பாக இருக்க முடியவில்லை. நாட்கள் நகர்ந்தன. கல்லூரிக்கு அன்று வழக்கத்துக்கு மாறாக குதூகலத்தில் களைகட்டி இருந்தது. புதுமுக மாணவர் களிற்கு வரவேற்பு நிகழ்ச்சி வரவேற்பு என்ற பெயரில் 'ராக்கிங்' மூலம் புதுமுக மாணவர்களை வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். ஆனால் பரத் சற்று வித்தியாசமானவன் விலகியே நின்றான். ஆனால் பரத்தின் நண்பர்கள் சிலர் ஒரு பெண்ணை நீண்ட நேரமாக வற்புறுத்திக் கொண்டும் கேலி செய்து கொண்டும் இருந்தார்கள். அந்தப் பெண் தப்ப முடியாமல் முழித்துக் கொண்டி ருந்தாள். அதனை அவதானித்த பரத் "டேண்ணாஇது அவளைவிட்டிடுங்கோ," என்ன நீ இவளுக்காக வக்காளத்து வாங்குகிறாய், "யாரடா இவள்? உனக்கு என்ன உறவு?" என நண்பர்கள் கேட்ட னர். அவள் என் தங்கை என பரத் கொஞ்ச நாளைக்கு முன் தானே உன் தங்கை இறந்தவள் ஒன்றுமே புரியவில் லையே என்று நண்பர்கள் கூறினார்கள்.

பெண்களைப் போகப் பொருட்க ளாகவும் காமக்கண்கொண்டும் கேலிப் பேச்சோடும் பார்க்கும் இன்றைய இளைஞர்களுக்கு மத்தியில் இப்படி யொருவன் என்று எண்ணிக்கொண்டு குனிந்த தலையை நிமிர்த்தினாள் பிரியா. பரத் இன் முகத்தைக் கண்டவுடனே அவளை அறியாமலே அவன் மேல் ஒரு பரிவு பரிதாபம். அன்று முதல் பரத், பிரியா நட்பு தொடங்கிற்று. நாட்கள் நகரநகர நட்பு அதிகரித்து அளவு கடந்த பாசமாகியது. பிரியா தான் ஒரு அநாதை தனக்கு யாருமே இல்லை எனக்கூற பரத் பிரியா தன் வீட்டிற்குள் நுழையும் நாளுக்காகவே காத்துக் கொண்டிருந்தான். அவளுக் கென அந்த வீட்டில் ஒரு முக்கிய கடமை இருந்தது.

நாட்கள் கடந்தன. பிரியா பரத் அன்பு சொல்ல முடியாத அளவிற்கு வளர்ந்து கொண்டே இருந்தது. தங்கையை இழந்து நிர்க்கதியாக நின்ற பரத்திற்கு பிரியாவின் அன்பு ஒத்தடமாக இருந் தது. பிரியா பரத் இருவரது அன்பையும் கண்டு கல்லூரி நண்பர்கள் அனைவரும் வியந்தனர். ஏன் பரத்திற்கே ஆச்சரியம். இவள் என்ன என் காவேரியைப் போலவே வளைய வளைய என்னை என்னையே சுற்றுகின்றாள். அது மட்டு மல்ல செயற்பாடுகள் கூட என் காவேரியைப் போலவே இருக்கு. இது கனவா? நிஜமா? என வியந்தான்.

காலம் தன் கடமையின் படி நகர்ந் தது. அன்று பரத்தின் பிறந்தநாள். பரத்தே மறந்து விட்டான். வழக்கமாகவே பரத் தின் பிறந்த நாளைக் காவேரி தான் வெகு விமர்சையாகக் கொண்டாடுவது. காவேரி இறந்த நாளில் இருந்து அவன் பிறந்த நாளே கொண்டாடுவதில்லை. அன்று வழக்கத்துக்கு மாறாக பிரியா பரத்திற் கு புதிய உடுப்புக்களை வாங்கி தேவையான சிற்றுண்டிகளைத் தயார்படுத்தி பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக வீட்டை அலங்கரித்தாள். இவற்றைக் கண்ட பரத் திற்கு கண்களில் இருந்து நீர் கசியத் தொடங்கியது. தங்கை காவேரியை இழந்த சோகமா? அல்லது காவேரியைப் போலவே தங்கைகிடைத்துவிட்டாள் என்ற ஆனந்தக் கண்ணீரா?

என்றுமில்லாதவாறு பரத்தின் வீடு குதூகுலத்தில் மூழ்கி இருந்தது. கல்லூரி நண்பர்கள் அனைவரும் பிறந்தநாளில் கலந்து கொண்டனர். கலந்து கொண்டது மட்டுமல்ல பிரியா உனக்கும் பரத்திற்கும் ஏற்பட்ட இந்த உன்னதமான உறவு எப்பவுமே நிலைக்க வேண்டும். நீ பரத் வீட்டிற்கு வந்த பிறகு தான் அவனுடைய வாழ்க்கையிலே நல்ல முன்னேற்றமும் மாற்றமும் ஏற்பட்டிருக்கு. அவனு டைய வாழ்க்கை சிறப்புற நீ தான் பிரியா பக்கத் துணையாக இருக்க வேண்டும்.

சரி இன்று பரத்தின் பிறந்த நாள். அன்று நான் உங்களுக்கு எனக்குள்ளே புதைந்திருக்கின்ற ஒரு உண்மையைச் செரல்லப் போகின்றேன் என்று பிரியா கூறினாள். அதனைக்கேட்டு நீங்கள் நிச்சயமாக அதிர்ச்சியடைவீர்கள். பரத்தி னுடைய இந்த மாற்றத்திற்கு எல்லாம் நான் காரணமில்லை. காவேரி தான் காரணம். உண்மையில் காவேரியைப் போல ஒரு தங்கை கிடைக்க பரத் கொடுத்து வைத்திருக்க வேணும் பரத். அவனது நண்பர்கள், காவேரி பற்றி உனக்கு எப்படித் தெரியும் பிரியா என்று கேட்டார்கள்.

ஆமாம் நான் ஒரு அநாதை. இருதய நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அவதிப்பட்டுக் கொண் டிருந்தேன். அந்த நேரத்தில் காவேரி விபத்துக் குள்ளாகி மரணத்திற்குப் போராடிக் கொண்டிருந்தாள். அவளது இதயம் அவளது பூரண சம்மதத்துடன் எனக்குப் பொருத் தப்பட்டது. அவள் இறந்தாள். அநாதையாக இருந்த நான் உயிர் பிழைத்தேன்.

அவள் இறக்கும்பொழுது எனக்கு ஒரு வாக்குக் கொடுத்தாள். பிரியா என் இதயம் உனக்குத் தருவதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். ஆனால் என் அன்பான ஒரு வேண்டுகோள் 'நீ என் அண்ணாவை அநாதையாகத் தவிக்க விடாமல் என்னைப்போல அவனுக்கு தங்கையாக இருக்க வேண்டும்' என்னை பிரிந்து என் அண்ணா ஒரு நிமிடமும் உயிரோடு இருக்கமாட்டான் இருந்தாலும் உயிரற்ற ஜடமாகவே இருப்பான்.

நீ என் அண்ணனுக்கு நல்ல தங் கையாக இருந்தால் தான் என் ஆத்மா சாந்தியடையும் பிரியா என்று காவேரி கூறினாள். அது மட்டுமல்ல ஒரு டயரி யையும் என்கையில் ஒப்படைத்து விட்டு இறந்திட்டாள்.

நண்பர்கள் திகைத்தனர். என்ன இப்படி ஒரு அண்ணன் தங்கை பாசம் உலகமே ஒரு சினிமாவாகவும் அதில் வாழ்கின்ற மக்கள் நடிகர்களாகவும் வாழும் போது இப்படியான பாச உள்ளங்கள் மட்டுமல்ல தன் அங்கத்தை தானம் செய்கின்ற பக்குவமுள்ள உள் ளங்களைச் சந்திப்பது அபூர்வம் தானே.

பரத் நீங்கள் எனக்கு நன்றி சொல் வதைவிட காவேரிக்குத் தான் நன்றி சொல்லவேண்டும் பிரியா காவேரியைப் பு[illegible] தங்கை மட்டு மல்ல என் தாயும் கூட. உங்களுக்கு மட்டுமல்ல பரத் அவள் எனக் கும் என் உயிரைக் காப்பாற்றிய தெய்வம். பரத் இன்று பணத்தின் கையில் தான் பாசம் என்பதை நிரூபித்துவிட்டாள்.


பரத் பிரியா வாழ்க்கை சந்தோசத் துடன் நகர்ந்து பரத் பிரியாவிற்கு திரு மணத்தை வெகுவிமர்சையாகச் செய் தான். அதே போல் பிரியாவும் பரத்தை தனிமையில் தவிக்க விடாது அவனுக்கும் திருமணத்தை தானே முன்நின்று நடாத்தினாள். இருவரும் திருமணத்தின் பின்னரும் ஒரே வீட்டில் அண்ணன் தங்கையாகவே வாழ்ந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● தமிழில்: ஜெகன்

# தாயைக் காத்த தனயன்




"அம்மா இது உங்களை உஷ்ணமாக வைத் திருக்கும் அமைதியாக இருங் களம்மா!" விம்மலுடன் கூறிய அவனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொஞ்ச வேண் டும் போலிருந்தது சில்வியாவுக்கு ஆனால் அவளிருந்த நிலைமையில் அவளால் முடிய வில்லை

## உண்மைச் சம்பவம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மெல்லிய வெளிச்சம் பரவி யதுமே ரோனி சற்று முற்றும் பார்த்தான். அவன் கண்கள் வியப் பால் விரிந்தன. சில யார் தூரத்துக் கப்பால் ஒரு வீடு தெரிந்தது. எப்படியும் அந்த வீட்டுக்குப் போனால் உதவி கிடைக்கலாம் தாயை உலுக்கி அவளையும் அணைத்தபடி மிகுந்த சிரமத்துடன் மெது மெதுவாக நடந்து அந்த வீட்டை அடைந்தார்கள்.

ஆனால் வீட்டில் ஒருவருமே இல்லை. வீட்டின் முன்பக்கம் பூட்டிக் கிடந்தது. மழை இப்போது முழுமையாக நின்று விட்டிருந்தது. தாயை முன் வராந்தாவில் கிடத்தி விட்டு வீட்டின் பின்புறம் போன ரோனி ஒரு வைக்கோல் போர் அங்கிருப்பதைக் கண் டான். அதிலிருந்து வைக்கோலைக் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வந்து முன் வராந்தாவில் பரவி ஒரு மெத்தையைப் போல் செய்து சில்வியாவை அதில் படுக்க விட்டான். மேலும் கொஞ்ச வைக்கோலைப் பிரித் தெடுத்து அவளின் உடல் மேல் போட்டான்.

"அம்மா இது உங்களை உஷ்ணமாக வைத்திருக்கும் அமைதியாக இருங்களம்மா!" விம்மலுடன் கூறிய அவனை அப்படியே கட்டிப் பிடித்துக் கொஞ்ச வேண்டும் போலி ருந்தது சில்வியாவுக்கு. ஆனால் அவளிருந்த நிலைமையில் அவளால் முடியவில்லை. என்ன தவம் செய்தேன் இப்படியொரு மைந் தனைப் பெற? அப்போது ரோனி வெளிச்சத்தில் அம்மாவைப் பார்த்தான். அவளது இடது கையில் தனச் கிழிந்து தொங்கிச் கொண் டிருந்தது. உடலெங்கு திட்டுத் திட்டாக இரத்தம் கைகள் வீங்கி உப்பிப் போயிருந்தன. வலது கையிலும் காயம் அவளது முகம் உடல் எல்லாம் வெளிறிப் போயிருந்தன. கண்களில் அரை மயக் கம் தெரிந் தது.

"அம்மா நாங்கள் உடனடியாக மருத்துவம னைக்குப்போயே ஆக வேண்டும் அது மட்டு மல்ல எங்களைத் தேடி வருபவர்களின் கண் களிலும் நாங்கள் பட வேண்டும் எப்படியாவது வாருங்கள் வேதனையைப் பொறுத்துக் கொண்டு வீதிப் பக்கம் போவோம். வாருங்கள் அம்மா" மனம் பதைபதைத்த நிலையில் தாயிடம் கூறினான். சிறுவன் ரோனி.

வார்த்தைகளால் விபரிக்க முடியாத வலியா லும் வேதனையாலும் சில்வியாவால் உடலைச் சற்றும் அசைக்க முடியவில்லை. ரோனி அவளுடலைத் தொடும் போது வலியால் உயிர் போயிற்று எப்படியோ வலது கையை ஊன்றி எழுந்து ரோனியின் உதவியுடன் தத்தித் தந்தி நடந்து மெதுவாக இருவரும் வீதிக்கு வந் தார்கள்.

அதற்குள் அவர்களைத் தேடிப் புறப்பட்ட நாலைந்து பேர்டிக் ரோஜரின் வழி காட் டலில் அந்தப் பகுதிக்கு அதிஷ்ட வசமாக வரவே இவர்களைத் தேடி வந்தோர் கண்களில் இருவரும் பட்டார்கள். சிறிதும் தாமதியாது உடனடியாகவே தாயும் மகனும் அம்புலன்ஸில் மருத்துவமனைக்கு விரைந்து எடுத்துச் செல்லப் பட்டார்கள். இந்த ஆபத்து நேரிட்டு 8 மணி நேரத்துக்குப் பிறகே அவர்கள் மீட்கப்பட் டார்கள்.

மருத்துவமனைய்யில் தாயின் நிலை தெரி யாமல் அவள் அபாயக் கட்டத்தைத் தாண் டியதைத் தெரிந்து கொள்ளாமல் எந்தத் சிகிச்சைக்கும் உட்பட ரோனி பிடிவாதமாக மறுத்து விட்டான்.

தாய்க்கான உடனடி அவசர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டு அவளுக்கு அபாயம் இல்லை என்று டாக்டர் சொன்ன பிறகு தான் அப்படியே மருத்துவமனைக் கட்டிலில் படுத்து நீண்ட துக்கத்தில் ஆழ்ந்து மெதுவாக மயக்க நிலைக்குப் போனான். அவனது மனோ திடமும் தாயைக் காப்பாற்ற வேண்டும் என்ற வெறியும் ஆண்டவனின் கருணையும் தான் அவனை வியக்கத்தக்க இந்த சாதனையைப் புரிய வைத்தது.

இது நடந்து ஏறத்தாழ எட்டு மாதங்களின் பின்னர் டெக்ஸாஸ் நடந்த ஒரு மிகப்பெரிய விழாவில் வீரப்பதக்கம் அணிவிக்கப்பட்டு ரோனி கௌரவிக்கப்பட்டான். சாரணர் இயக்கத்தில் அவன் இருந்தபடியால் சார ணார்க்களுக்கே ஒரு கௌரவம் என்று அவன் போற்றப்பட்டான். 50 வருடச் சரித்திரத் தைக் கொண்ட சாரணர் இயக்கத்தில் இப்படியான வீரப்பதக்கங்களைப் பெற்றது. ரோனியோடு சேர்த்து ஆக நான்கே பேர் தான் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

எத்தனையோ முக்கிய புள்ளிகள் ஏறத் தாழ இருநூறு பேருக்கு மேல் குழுமியிருந்த அந்த விழாவில் அணிவிக்கப்பட்ட பதக்கத் தோடு தலை நிமிர்ந்து நின்ற அவனைக் கண்ட அவனது பெற்றோரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

ரோனியின் தந்தை மெதுவாகக் குனிந்து அவன் காதில் கண்ணீர் மல்கக் கூறினார். "நீ தான் எங்கள் வீட்டின் தலைவன்"


(முற்றும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பஸில் காமப் பேய்கள்-6

● அனுஷ்கன்



## பத்துக்குள்ள நம்பர் ஒன்று சொல்லு

பரீட்சை தொடர்பான பரபரப்பு மண்டபமெங்கும் நிறைந்திருந்தது. எல்லா மாணவர்களினதும் முகங்களிலும் இரவிரவாகப் படித்த அயர்ச்சி அப்பட்டமாகத் தெரிந்தது. அப்படி விழுந்து விழுந்து படித்தும் கூட தாம் படித்த விடயங்களுக்குள் கேள்வி வருமா? இல்லாவிட்டால் தேவையில்லை என்று தாம் 'சொய்ஸ்' பண்ணிய விடயங்களைத்தான் வினாக்கள் சுமந்து நிற்குமா என்பது அவர்களுக்கு இன்னமும் புரியாத புதிராகவே இருந்தது.

பரீட்சை தொடங்குவதற்கான அறிவிப்பைத் தொடர்ந்து, ஒவ்வொரு வரிசைக்கும் வினாத்தாள்கள் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றை வாங்கிப் பார்த்த மாணவர்களின் முகங்களில் பிரகாசம். அவர்கள் படித்த விடயங்கள் தான் வினாக்களுக்குள் சிக்கியிருந்தன. ஆனால் குறித்த நேரத்துக்குள் விடையெழுதி முடிக்க வேண்டுமே. எல்லோரும் அவசரத்தனத்தோடு விடைத்தாள்களில் பேனைகளை விரட்டிக் கொண்டிருந்தார்கள். எழுத எழுத பக்கங்கள் நிறைகின்றனவே தவிர விடையெழுதி முடிந்தபாடாக இல்லை.

இப்படிப்பட்ட அவசரத்தருணத்தில் கர்நாடக இசைப் பாடலொன்றை முணுமுணுத்தபடி தன்னருகே தரிசனம் கொடுத்த விரிவுரையாளரை கண்டு தலை நிமிர்த்தினாள் ஒரு மாணவி.

"எப்பிடி எக்ஸாம்? கேள்வியெல்லாம் சுகம் தானே?" என்று பரீட்சை மண்டபம் என்பதையே மறந்தவர் போல அந்த விரிவுரையாளர் விசாரிப்புகளை அடுக்கினார். மிக உயர்நிலையில் இருக்கும் அந்த விரிவுரையாளர் கேட்கும் போது அதை அலட்சியம் செய்யாமல் விடைஎழுதுவதில் குறியாக இருப்பது நல்லதல்ல என நினைத்துக் கொண்ட மாணவி,

"பரவாயில்லை சேர். ஓரளவுக்கு செய்யக்கூடிய மாதிரித்தான் இருக்கு. இனி திருத்துற ஆக்களின்ர கையிலதான் மார்க்ஸ் இருக்கு" என்று பதில் சொன்னாள்.

"அதெல்லாம் நான் இருக்கேக்க என்ன பயம்? ஒண்டுக்கும் யோசிக்காதையும். எல்லாம் வெல்லலாம். ஏதாவது டவுட் இருந்தா கேளும் இப்பவே சொல்லித்தரலாம்" என்று பேச்சை நீடிக்கவே இசையின் தரிசனம் கண்ட அந்த விரிவுரையாளர் விரும்பினார். ஆனாலும் மாணவி எப்படி இவரை இங்கிருந்து அகற்றலாம் என்பதிலேயே யோசனையாக இருந்தாள். ஏனெனில் நேரம் அசுரத்தனத்தோடு ஓடிக்கொண்டிருந்தது. ஒவ்வொரு நிமிடமும் ஒரு புள்ளியை இழக்கச் செய்துவிடும். ஆனால் விரிவுரையாளர் அதைப்பற்றி அக்கறை கொள்வதாக இல்லை. மாணவியின் விலகலை கொஞ்சநேரம் கழித்துப் புரிந்து கொண்ட விரிவுரையாளர் பேச்சை தான் வந்த ரூட்டுக்கு திருப்ப முனைந்தார்.

"சரி. உம்மட நேரத்தை கெடுக்க விரும்பேலை. ஆனா அநியாயமா ஒரு நல்ல பிள்ளைக்கு மாக்ஸ் குறையக் கூடாது எண்டு நினைக்கிறன். அதோட படிப்பில உம்மட அக்கறையும் பத்தாது. ஒண்டு செய்யும். உம்மட போன் நம்பரைத்தாரும். என்னென்ன டவுட் இருக்கோ எல்லாத்தையும் நான் போன்ல கிளியர் பண்றன். அதோட மார்க்ஸையும் கூட்டிப் போட ஒழுங்கு செய்யலாம்" என்று சொல்லிவிட்டு அடுத்த மேசைக்கு தாவினார். அங்கும் குனிந்தபடி வினாத்தாளோடு போராடிக் கொண்டிருந்த இன்னொரு மாணவியிடம் , பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார். முதல் மாணவியிடம் சொன்ன அதே வார்த்தைகளை அட்சரம் பிசகாமல் இவளிடமும் ஒப்புவித்தார். இப்படியே அன்றைய பரீட்சை முடியும் வரை அவரின் மேசை தாவும் படலம் தொடர்ந்து கொண்டிருந்தது.

பரீட்சை முடிந்து மாணவிகள் வெளியே செல்லும் போது, அவர்களுக்கு வாயெல்லாம் பல்லாக அதே விரிவுரையாளர் தரிசனம் கொடுத்தார்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கத்தில்)






**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

நல்ல செயல்கள், தன்னை வாழவைக்கும் என, நம்புகின்ற, மேஷ இராசிக்காரர்களே!

திட்டமிட்டு பணிபுரிந்து வாழ்வில், சிறப்பான முன்னேற்றம் காண்பீர்கள். வசீகரமாக பேசி, உறவினர்களிடம் நன்மதிப்பு பெறுவீர்கள். நண்பரிடம் கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமான அளவில் இருக்கும். மாணவர்கள், கூடுதல் பயிற்சியினால் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர்.



**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

வாக்குறுதியை நிறைவேற்றுவதில், அக்கறை உள்ள, ரிஷப இராசிக்காரர்களே!

வாழ்வில் கூடுதல் பலம் பெற, கிடைக்கிற வாய்ப்புகளை பயன்படுத்தி, தகுந்த அளவில் நன்மை பெறுவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். இல்லறத்துணை, உங்களின் கவுரவம் பாதுகாக்கும் வகையில் உதவுவர். குடும்ப பெண்கள், கணவரின் அன்பு, தாராள பணவசதி கிடைத்து சந்தோஷ வாழ்வு நடத்துவர். மாணவர்கள், விளையாட்டுகளில் சாகசம் செய்வது கூடாது.



**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

அன்பும், பண்பும் மனதில் வைத்து, வாழ்ந்திடும், மிதுன இராசிக்காரர்களே!

வாழ்வில் எதிர்ப்படுகிற சிரமம், மனஉறுதி நிறைந்த செயல்களால் சரி செய்வீர்கள். உங்களுக்கு ஆதரவாக செயல்படுகிற நண்பர், உறவினர்களை மதித்து நடப்பீர்கள். புத்திரர் விரும்பிய பொருள், பணவசதிக்கேற்ப வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை தவிர்ப்பதால், படிப்பில் கவனம் வளரும்.



**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

எளிமை வாழ்வு முறையை விரும்பி ஏற்கின்ற, கடக இராசிக்காரர்களே!

புத்திரரின் உடல்நலம் ஆரோக்கியம் பெற, சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை உதவும். தொழிலில் உற்பத்தி, விற்பனை இலக்கு நிறைவேற தாமதமாகும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிவதால் மட்டுமே, குளறுபடி வராமல் தவிர்க்கலாம். மாணவர்கள் பெற்றோரின் சூழ்நிலை உணர்ந்து தேவைகளை குறைத்து கொள்வது நல்லது.



**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

பொறுப்பு உணர்வுடன் பணிபுரிந்து, முழு அளவில் பலன் பெறும், சிம்ம இராசிக்காரர்களே!

உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். பணியாளர்கள், பணித்திறன் வளர்த்து நிர்வாகத்திடம் எதிர்பார்த்த சலுகைப் பயன் பெறுவர். தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள், ஆசிரியர், பெற்றோரிடம் பாராட்டு பெறும் வகையில், அதிக தர தேர்ச்சியை பெறுவர்.



**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

அனுபவங்களை கொண்டு, வாழ்வை செழுமையாக்கும், கன்னி இராசிக்காரர்களே!

அரசு தொடர்பான உதவியை, உரிய முயற்சியால் பெறுவீர்கள். இல்லறத்துணை சேமிப்பு, பணத்தை தந்து உதவுவர். உத்தியோகஸ்தர், பணியாளர்களை ஊக்கப்படுத்தி, உற்பத்தி இலக்கை பூர்த்தி செய்வது நல்லது. பெண்கள், கணவரின் நல்ல குணத்தை பாராட்டுவர். மாணவர்கள், கூடுதல் பயிற்சியால், தரதேர்ச்சியை பாதுகாக்கலாம்.



**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உண்மையும், உழைப்பும் இருகண்கள் என, கருதி வாழும், துலாம் இராசிக்காரர்களே!

உடன் பிறந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செயல்படுவீர்கள். இல்லறத் துணையின் மனதில் நம்பிக்கை வளர உதவுவது அவசியம். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை, அக்கறையுடன் பின்பற்றுவது நல்லது. மாணவர்கள், உரிய பயிற்சியால் சராசரி தேர்ச்சி விகிதம் பெறலாம்.



**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தன் வாழ்வை வளப்படுத்தி, பிறருக்கும் உதவும், விருச்சிக இராசிக்காரர்களே!

நற்பெயரை பாதுகாப்பதில், தகுந்த கவனம் வேண்டும். பூர்வ சொத்தில் பெறுகிற வருமானம் கூடுதல் செலவுக்கு பயன்படும். தொழில், வியாபார நடைமுறை வளர்ச்சி பெற, கூடுதல் உழைப்பு உதவும். குடும்ப பெண்கள், பிள்ளைகளிடம் கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். மாணவர்கள், புதியவரை நண்பராக ஏற்பதில் உரிய கவனம் வேண்டும்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

இலக்கை அடைய ஆர்வமுடன் பணிபுரியும், தனுசு இராசிக்காரர்களே!

பணவரவு அதிக அளவில் பெறுவதற்காக கிடைக்கிற, புதிய வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்துவீர்கள். உங்களின் கஷ்ட சூழ்நிலையை பார்த்து விலகிய நண்பர், உறவினர் மதித்து அன்பு பாராட்டுவர். இல்லறத் துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து, குடும்ப நலன் காத்திடுவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து, உபரி பணவரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள். மாணவர்கள் கவனமுடன் படித்து, தரதேர்ச்சி இலக்கை அடைவர்.



**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

கடின செயலையும், முறையான பயிற்சியுடன் நிறைவேற்றும், மகர இராசிக்காரர்களே!

சமூகத்தில் பெற்ற நன்மதிப்பை, அக்கறையுடன் பேணி காத்திடுவீர்கள். வீடு, வாகனம், தங்க நகை வாங்க, தாராள பணவசதி துணை நிற்கும். புத்திரர், உங்களின் பாராட்டை எதிர்மறையாக எடுத்துக் கொள்வார். கவனம் தேவை. மாணவர்கள், ஆரோக்கிய உடல்நலம் அமைந்து படிப்பில் முன்னேற்றம் பெறுவர்.



**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உயர்ந்த செயல்களால் நன்மதிப்பு பெறுகிற, கும்ப இராசிக்காரர்களே!

உங்கள் மனதில் ஆன்மிக சிந்தனையும், பிறருக்கு உதவுகிற மனப்பான்மையும் வளரும். நட்புக்கு இலக்கணமாக நடந்து கொள்வீர்கள். மனதில் இருந்த பய உணர்வு நீங்கும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட புத்திரருக்கு வாய்ப்பு தர விரும்புபவர்கள் உரிய பயிற்சி வழங்குவர். மாணவர்கள், முறையான பயிற்சியால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சி விகிதம் பெற இயலும்.



**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தன் தகுதி உணர்ந்து செயல்களை மேற்கொள்கிற, மீன இராசிக்காரர்களே!


சான்றோர் தரிசனம், ஆலய வழிபாடு நிறைவேற்றுவீர்கள். மனதில் புத்துணர்வு பிறக்கும். தம்பி, தங்கைக்கான சுபநிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டாகும். இல்லறத்துணை மற்றும் மகளின் ஜாதக யோக பலன், வாழ்வில் மிகுந்த நன்மை பெற துணை நின்று உதவும். பெண்கள், குடும்ப எதிர்கால நலன் சிறக்க, கணவருக்கு தகுந்த உதவி புரிவர். மாணவர்கள், நன்றாகப் படித்து பெற்றோரிடம் விரும்பிய பரிசுப் பொருள் பெறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## இந்த நேரத்திலே.....



இந்த நேரத்தில்
இறுதி முத்தத்தை பகிர்ந்து
விடைபெறுகிறது ஓர் காதல்.

இன்னோரிடத்தில்
கண்களின் வழியே உயிருள்
நுழைகிறது.

விண்மீன்களின் ஒளியில்
இரவு பாடலை ரசிக்கிறது ஓர்
உயிரி
சூரிய தகிப்பால்
வியர்வை நதியால் வெப்பம்
குறைக்கும் ஓர் மானிடம்.

இந்த நேரம்
அகால வேளை காரணமின்றி
கைது செய்யப்படும்
மகனுக்காக கதறுகிறாள் ஒரு
பெண்.

விடுதலை பாடலை பாடி
உயிர் விதைக்கிறான் ஓர்
போராளி.

சிலர் கனவுகளில் இன்பம்
துய்க்கிறார்கள்
பலர் மரணக்கனவுகள்
கண்டுவிழித்து
வியர்வையில் விழுகிறார்கள்.

ஏதோ ஓர் மூலையில்
இனிய சங்கீதம் ஒலிக்கிறது
இன்னுமோரிடத்தில்பேரழிவு
குண்டொன்று
விழுந்து கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில்
யாரோ சிலர்
இந்த கவிதையைப் படித்து
கொண்டிருக்கிறார்கள்.

*வேலணையூர் - தாஸ்.*

## மனிதா நீ யார்?

மனிதா நீ யார்? எத்தனை பேர் நீ?
வயிற்றில் கரு பிறந்தால் சிசு
வயதில் சிறுவன் வளர்ந்தால் இளைஞன்
அன்னையின் பிள்ளை தந்தையின் மைந்தன்
மாமனின் மருமகன் மகளின் கணவன்
தம்பியின் அண்ணர் தங்கையால் மச்சான்
சித்தப்பன் பெரியப்பன் சிறியவன் பெரியவன்
சிங்களன் தமிழன் சோனகன் பறங்கி
யாழ்ப்பாணி களப்பான் வன்னியான் வடக்கன்
கிறஸ்தவன் புத்தன் சைவன் முசல்மான்
கந்தன் கபூர் பண்டா பாவிலு
கள்ளன் கபடன் காமாந்தகாரன்
பொய்யன் புலையன் புரட்டன் மூடன்
படித்தவன் பாமரன் பாராளும் வேந்தன்
புனிதன் பாவி போக்கிரி முரடன்
நல்லவன் வல்லவன் காதலன் கணவன்
உயர்ந்தவன் தாழ்ந்தவன் உத்தமன் வித்தகன்
வாழ்ந்தால் உடலம் செத்தால் சடலம்
எத்தனை வேடம் மனிதா உனக்கு?
அத்தனை போரிலும் மனிதா நீயார்?
உண்மையில் மனிதா உலகினில் நீயார்?



*கந்தபேரின்பம்*
*தீவான்*

## பெயர்களும் பட்டங்களும்

ஈன்றவர் இட்டு
ஆசை தீர அழைத்தது
சரி பிழை பார்த்து
பொருத்தம் கண்டது
உயர்வு வேண்டித்
துடித்து நிற்கையில்
உச்சரித்து உச்சரித்து
உச்சம் ஏறிட ஒத்திகை
பார்த்தது.

கல்விக்கூடங்களில்
மிகைத்த எதிர்பார்ப்புக்களில்
பரீட்சைகள் என்றும்
பல்கலைக்கழகங்கள் என்றும்
பட்டங்கள் தந்திட
அமைப்புக்கள் அரவணைத்து
அள்ளி வழங்கி
அழகு பார்க்கையில்

பண்படா மனிதம் வழங்கிடும்
பட்டங்கள்
தூக்கிவிழுங்கி விடுகிறது
பெற்றோர் இட்டவற்றை



வரைந்த கோலத்திற்கு
வர்ணம் தேடிட
எங்கிருந்தோ வந்து
ஒட்டிக்கொண்ட
வசைப்பூச்சுக்களாய்
அப்பிக் கொள்கின்றது
தூரிகைகள் தீட்டிய
அழகிய போஸ்டரில்
சாணி அடித்தது போல்

கல்விச் சாலைகளெல்லாம்
எங்கே வழங்கியது
இந்தப் பட்டங்களை
ஊர் உறவு
குடும்பம் கோத்திரமெல்லாம்
அடையாளம் காட்டுகிறது
சக்தி பெற்ற ஆவணமாய்

சந்ததிக்கு உரித்தானதாய்
வந்து சேர்ந்தாலும்
சேர்ந்திட்டவர் வைத்திட்டாலும்
பட்டப்பெயர்களாய்
நிலைத்த அவை
தரித்து நிற்கின்றது
சுடலை வரைக்கும்


*எம்.ஐ.எம். அஷ்ரப்*
*சாய்ந்தமருது 07.*



## அடைவு மரணங்கள்

மானம்
அடகுவைக்கப்பட்டதால்
மரியாதையிழந்து போனது
எங்கள் மரணங்கள்

*திரு.த. பருத்தி; தாசன்.*



## இதயம்

உங்களை நாங்கள்
இதயத்தில் வைத்து
இருப்பதால் - தான்
உங்களை தாலாட்டும் விதமாய்
எங்கள் இதயம்
துடித்துக் கொண்டிருக்கிறது.

*தீ.கலைவாணி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தப்பினார் செல்வராகவன்

இயக்குநர் செல்வராகவன் சில நாட்களுக்கு முன்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்குப் பின் தற்போது வீடு திரும்பி இருக்கிறார்.

ஆர்யா நடித்துள்ள 'இரண்டாம் உலகம்' பட வேலைகளில் தீவிரமாக இருக்கிறார் செல்வராகவன். சில நாட்களுக்கு முன்பு 'இரண்டாம் உலகம்' படப்பணிகளில் இருந்த போது நெஞ்சுவலிப்பதாகக் கூற, பதறிப்போய் அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள், இதயத்தில் சில பிரச்சினைகள் இருப்பதாகக் கூறி உள்ளனர். அதோடு வயிறு தொடர்பான தொற்றுநோயும் ஏற்பட்டுள்ளதாகக் கூறி இருக்கின்றனர்.

இதுபற்றி டுவிட்டரில் தெரிவித்துள்ள செல்வராகவன் மனைவி, "மிகப்பெரிய அபாயம் எதுவும் இல்லை. கடவுளுக்கு நன்றி" எனக் குறிப்பிட்டுள்ளார்.


மது, சிகரெட் இரண்டையும் தொடவே கூடாது என மருத்துவர்கள் தடை விதித்துள்ளனர். "மதுவும், சிகரெட்டும் இல்லாமல் எப்படி அருமையாக இருக்கிறேன் என்பதை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை" என டுவிட்டரில் தட்டியிருக்கிறார் செல்வராகவன்.



## பார்வதியின் நெருக்கம்

வ டிவேலு
வுடன் நடிக்க மறுத்த பார்வதி ஓமனகுட்டன் 'பீட்சா' படத்தின் ஹிந்திப் பதிப்பில் நடிக்கிறார். விஜய் சேதுபதி வேடத்தில் நடிப்பவர் அக்ஷய் ஓபராய். பீட்சாவைவிட நெருக்கமான படுக்கையறைக் காட்சிகளில் நெருக்கம் காட்டுகிறாராம் பார்வதி.

## உண்மையான பட்டத்து யானை



விஷால் நடிக்கும் 'பட்டத்து யானை' படத்துக்கு முதலில் வைத்த பெயர் 'அடேங்கப்பா ஆறு பேர்'. ஹோட்டல் நடத்தும் சந்தானத்திடம் விஷால் வேலைக்குச் சேர்ந்து, பின் பள்ளியில் படிக்கும் ஐஸ்வர்யாவைக் காதலித்து இழுத்துக் கொண்டு ஓட, வில்லன் குழு சந்தானத்தைப் பிடித்துத் துவைக்கிறார்கள். அப்புறம் என்ன, விஷால் சண்டையிட்டு, ஐஸ்வர்யாவைக் கரம் பிடிப்பதுதான் கதை.

இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய தே.மு.தி.க. அதிருப்தி எம்.எல்.ஏ சுந்தரராஜன், தயாரிப்பாளர் மைக்கேல் ராயப்பனைப் பார்த்து, 'பட்டத்து யானை' பெயர் விஷாலுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, சட்டசபையில் சமாளித்த மைக்கேல் ராயப்பனுக்கு இந்தப் பட்டம் மிக பொருத்தம் என்று அரசியல் பொடி வைத்துப் பேச கூட்டத்தில் சிரிப்பு.



## முனி விழுங்கும் காசு

ராகவா லோரன்ஸின் 'முனி - 3' படத்துக்குக் கிரபிக்ஸ் செலவு அதிகமாம். படத்தில் டாப்ஸி ஆவணப்பட இயக்குநராக வருகிறார். ஈ.சி.ஆர் பகுதியில் ஒரு நாளைக்கு ஒரு லட்சம் வாடகை கொடுத்து இரவில் படமாக்கி வருகிறார்கள். தமிழ் - தெலுங்கு - ஹிந்தி என மூன்று மொழியில் பெரும் நிதிச் செலவில் படம் உருவாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூங்கும் போதும் சேலை



வித்யா பாலன் 'கான் சக்கர் பாலிவுட்' படத்தில் பஞ்சாபிப் பெண்ணாக நடித்துள்ளார். அம்மணிக்குப் பத்தில் நகைச் சுவை வேடமாம். அதைவிட முக்கியம், படம் முழுக்க சேலையில்தான் நடித்துள்ளார். "எனக்கு மிகவும் பிடித்த உடை சேலைதான். நான் தூங்கும்போதுகூட சேலையில்தான் தூங்குவேன்" என்கிறார்.


## அயல்மொழியிலும் அலப்பறை




இதுவரை அண்ணன் வெங்கட் பிரபுவின் படங்களில் அலப்பறை செய்த பிரேம்ஜி, இப்போது மாநிலம் விட்டு மாநிலம் போகிறார்.

அனில் ராதா கிருஷ்ண மேனன் என்பவர் இயக்கத்தில் பகத் பாஸில் - ஸ்வாதி ரெட்டி நடிக்கும் 'நோர்த் 24 காதம்' என்ற மலையாளப் படத்தில் பிரேம்ஜியும் நடிக்கிறார்.

## நட்புக்காக



ராம்சரண் கேட்டுக் கொண்டதற்காக ஸ்ருதி ஹாசன், ராம்சரண் நடிக்கும் 'எவடு' படத்தில் காஜல் அகர்வாலும், அல்லு அர்ஜுனும் ஜோடியாக கௌரவத் தோற்றத்தில் நடித்துள்ளனர்.

## வாலு வரும்



சிம்பு- ஹன்சிகா நடிக்கும் 'வாலு' படத்தின் படப்பிடிப்பு இதுவரை சிம்புவின் கால்ஷீட் தொடங் கிப் பல பிரச்சி னைகளால் தாமதம் ஆனது. இப்போது சந்தானம் கால்ஷீட் காலதாமதம் என்பதால் காத்திருந்து படமாக்கியுள்ளார்கள். கண்டிப்பாகப் படம் ஒகஸ்ட் 15இல் வெளியிடப்படும் என்கிறது தயாரிப்பாளர் தரப்பு.

## தனுஷுக்குப் பதில் சிம்பு



"பசங்க', 'மெரினா' படங்களின் இயக்குநர் பாண்டிராஜ் இயக்கத்தில் சிம்பு நடிக்கப் போவதாக தகவல் வெளியாகி உள்ளது. 'பசங்க' படம் மூலம் தமிழுக்கு அறிமுகமானவர் பாண்டிராஜ். இந்தப் படம் இரண்டு தேசிய விருதுகளைப் பெற்றுத் தந்தது. பின்னர், 'மெரினா', 'வம்சம்', 'கேடி பில்லா', 'கில்லாடி ரங்கா' போன்ற படங்களை இயக்கி உள்ளார். சில மாதங்களுக்கு முன்பு வெளியான 'கேடி பில்லா', 'கில்லாடி ரங்கா' மிகப்பெரிய வெற்றி பெற்றது.

அதைத் தொடர்ந்து தனுஷை தனது அடுத்த படத்தில் நடிக்கும் படி கேட்டிருந்தார் பாண்டிராஜ். ஆனால், ஹிந்தியில் தனுஷ் நடித்த 'ராஞ்ஹெனா' மிகப்பெரிய வெற்றி பெற்று இருப்பதால் அடுத்தும் ஹிந்திப் படத்தில் நடிக்கப் போகிறார் தனுஷ். அதனால் பாண்டிராஜுக்கு மறுப்புச் சொல்லிவிட்டார்.

இதனால் கடுப்பான பாண்டிராஜ், தனுஷின் போட்டியாக சொல்லப்படும் சிம்புவைச் சந்தித்து கதை சொல்லி இருக்கிறார். அவர் சொன்ன கதையில் மகிழ்ந்த சிம்பு, தான் நடிப்பதாக சம்மதித்து விட்டார். அத்துடன் சிம்புவே இந்தப் படத்தை தயாரிக்கப் போகிறாராம். சிம்புவின் தம்பி குறளரசன் இந்தப் படத்தின் மூலம் இசை அமைப்பாளராக அறிமுகமாகிறார்.

## மீண்டும் இணையும் வெற்றிக் கூட்டணி



'நண்பன்' தந்த மாபெரும் வெற்றிக்குப் பிறகு இயக்குநர் ஷங்கரும், நடிகர் விஜய்யும் மறுபடி இணையப் போகின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

விஜய் நடித்துள்ள 'தலைவா' விரைவில் வெளியாக உள்ளது. அதைத் தொடர்ந்து தற்போது 'ஜில்லா' படத்தில் நடித்து வருகிறார் விஜய்.

'ஜில்லா''வுக்குப் பிறகு ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் நடிக்கப் போகிறார் விஜய். 'துப்பாக்கி'போலவே அதிரடியான கதையைத்தான் இந்த முறையும் தேர்வு செய்திருக்கிறார்களாம்.


ஷங்கரும் விக்ரம், எமி ஜாக்சன் நடிப்பில் உருவாகும் 'ஐ' பட வேலைகளில் தீவிரமாக இருக்கிறார். இன்னும் சில மாதங்களுக்குப் படப்பிடிப்பு நீளும் எனத் தெரிகிறது.

இருவரும் தங்கள் கைவசம் உள்ள படங்களை முடித்துவிட்டு ஒன்றாக இணையப் போகிறார்கள் என்ற தகவல் கோடம்பாக்கத்தில் பரவியுள்ளது. இதற்காக ஏ.ஆர்.முருகதாஸ் தவிர, வேறு யாருக்கும் நாள்களை ஒதுக்காமல் இருக்கிறார் விஜய்.

வழக்கம்போலவே இந்தப் படத்தையும் மிகப் பெரும் செலவில் தான் எடுக்கப் போகிறார் ஷங்கர். அனேகமாக அடுத்த வருடம் படப்பிடிப்பு தொடங்கலாம் எனத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# யோசனைகளை எழுதி வையுங்கள்

**யோ**சனைகளை எழுதி வைப்பதற்கு நீங்கள் வழக்கமாகக் கையாளுகின்ற முறையை மேற் கொள்ளலாம். நான் என்னிடம் உள்ள 3க்கு 5என்ற அளவில் உள்ள அட்டை யில் எழுதி ஒரு சிறு உலோகப் பெட் டியில் வைக்கிறேன். பிறகு எண்க ளிட்டு பெரிய இரும்பு பீரோவில் வைத்துப் பூட்டி வைக்கிறேன். அந்த பீரோக்களில் நெருப்பும் புகையும் நுழைய முடியாது. அந்த அளவு பாது காப்பாக வைக்கின்றேன். ஒன்றுக் கொன்று நெருங்கிய தொடர்புடைய யோசனைகளாக இருந்தால் அவற்றை ஒரு கொத்தாக இணைத்து (கிளிப் செய்து) வைப்பேன். ஒன்றுக் கொன்று தொடர் புடைய பல யோசனைகளை ஒரே பெட் டியில் வைப்பது எனது வழக்கம்.

நீங்கள் உங்கள் யோசனைகளை ஒரு அட்டையில் எழுதி வைக்க விரும்பினால் அதே போன்று 3க்கு 5 அளவுள்ள அட்டை களை சட்டைப்பைகளில் எப்போதும் வைத் திருங்கள். அந்த அட்டைகளை மறுபடி மறுபடி எடுத்துப்படிக்கலாம். அதை மனப்பாடம் செய்து கொள்ளலாம். ஏற்கனவே உருவான யோசனைகளை நினைவில் கொண்டு வர முயற்சி செய் யாதீர்கள். எழுதி வைத்து விடுங்கள் யோசனை தோன்றிய அந்தக் கணமே எழுதி வைத்து விடுங்கள். பிறகு அந்த யோசனையை- புது எண்ணத்தை- நன்றாக ஆழமாகப் படியுங்கள். சாதக பாதகங்களை ஆராயுங்கள்- மேலும் தெளிவாக்குங்கள்- மேம்படுத்துங்கள்- பிறரைக்கவரும் விதத் தில் அந்த யோசனையை சொல்வதற்கு அதை முழுமையாக்குங்கள்.

மனத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள் எழுதி வைத்து விடுவது அவற்றைத் தொகுத்து வைத்துக்கொள்வதானது- சீக்கிரம் செல்வந்தர் ஆவதற்கு தேவைப் படும் இரண்டாவது முக்கிய நடவடிக்கை ஆகும். எண்ணச்சுடர்களை பளிச் என்று உதயமாக்கிக் கொள்வதற்கும் அவ்வாறு உதயமான யோசனைகளை எப்படி எழுத்தில் வடித்து தொகுத்து பத்திரமாக வைத்துக் கொள்வதற்கும் என்ன வழி என்பதை இது வரை சொல்லிக் கொடுத்தாயிற்று. சீக்கிரமாக செல்வந்தர் ஆவதற்கான மூன்றாவது முக்கிய செயல் திட்டத்தை இப்போது பார்ப்போம்.

### 3. வெளிப்படுத்துங்கள்.

ஒரு யோசனையை முறைப்படி எழுதி முறைப்படி தொகுத்து பத்திரப்படுத்தி வைத்தாலும் அத்தகைய யோசனைக்கு எந்த மதிப்பும் உங்களுக்கோ மற்றவர் களுக்கோ அதனால் எந்தப் பயனும் இல்லை.

நீங்கள் சீக்கிரம் செல்வந்தராக வேண்டு மெனில் உங்களுடைய யோசனையை பிறர் ஏற்கும் வண்ணம் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

உங்களுடைய யோசனையை நீங்கள் வெளிப்படுத்த வேண்டும். வெளிப்படுத் துவது என்றால், வாயால் பேசுவது என்கிற அர்த்தத்தில் அதை எடுத்துக் கொள்ளக் கூடாது. வெளிப்படுவது என்றால் உங்கள் யோசனையை மற்றவர்களுக்கு வாய்மூலம் எடுத்துச் சொல்வது அல்லது எழுத்து மூலம் தெரிவிப்பது எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால், உங்கள் யோசனையைமற்றவர்கள் அறியும் வண்ணம் வெளிப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதே வெளிப்படுத் துவது என்கிற இந்தப் பதத்தின் நோக்கம்.

இந்நிலையில் உங்கள் யோசனை என்ன? கருத்து என்ன? என்பது எனக்குத் தெரியாது உங்கள் சூழ்நிலை என்ன? ஆகவே உங்கள் யோசனையை எப்படி வெளிப்படுத்துவது என்பதைப் பற்றி நீங்கள் நல்லதொரு தீர்மானத்துக்கு வரவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட யோசனையை உங்க ளுடைய தொழில் அதிபரிடம் பரிந்துரை கூறுவது போல நீங்கள் வெளியிடலாம். (நாம் இப்படி ஒரு விஷயத்தை முயற்சி செய்தால் அற்புதமான விளைவுகள் ஏற்படும் என்று கூறுவது ஒரு வகை உத்தி இத்த கைய உத்திகள் அடுத்த அத்தியாயத் தில் விவரிக்கப்படுகின்றன) அல்லது மிகவும் கண்ணைக் கவர்வது போல விவரமாக டைப் அடித்து கவர்ச்சியாக பைண்ட் செய்து வசீகரமான உறையில் வைத்து அதிகாரியிடம் கொடுக்கலாம். அல்லது ஒரு அறையில் உற்சாகமான சொற்பொழிவின் வாயிலாக வெளியிடலாம்.

எது பொருத்தமான முறையோ அந்த முறையின் வாயிலாக உங்கள் யோசனையை - திட்டத்தை- வெளிப் படுத்துங்கள். எங்கு உங்களுக்கு அதிக நன்மை கிடைக்குமோ எப்படி சமர்ப்பித்தால் மற்றவர்கள் ஏற்பார்களோ அந்த வகையில் உங்கள் யோசனையை வெளிப்படுத் துங்கள்.

ஏன் என்றால், உருப்படியான யோச னைகள் தான் முன்னேற்றம்.

ஏன் என்றால் உருப்படியான யோச னைகள் தான் மேம்பாடு.

ஏன் என்றால் உருப்படியான யோச னைகள் தான் பணம்.

ஆகவே சீக்கிரம் செல்வந்தராவற்கு அவசியமான மூன்று படிகள்.

1. சிந்தியுங்கள் - யோசியுங்கள்
2. எழுதி வைத்துவிடுங்கள்
3.வெளிப்படுதுத்துங்கள்.

எதையும் மேம்படுத்தலாம் எல்லா வற்றையும் மேம்படுத்தலாம்.

மேம்பாட்டுக்கான யோசனைகளை எண்ணச்சுடர்களை பளிச் என்று வெளிப் படுத்தும் ஆளாக நீங்கள் இருங்கள். உங்களுக்குப் பெருமை சேரும். உங்க ளுக்குப்பதவி உயர்வு கிடைக்கும். நீங்கள் பிரபலமாவீர்கள். நீங்கள் சீக்கிரம் செல் வந்தராகி விடுவீர்கள். ஆனால், நீங்கள் சிந்திக்கவேண்டும்எழுதிவைக்கவேண்டும் வெளிப்படுத்த வேண்டும்.

உங்கள் அதிபரிடம் உங்கள் யோச னைகளை மரியாதையுடன் உரிய முறையில் எடுத்துக் கூறும் வழி இதோ!


உங்களுக்கு ஒரு உருப்படியான யோசனை தோன்றி அந்த யோசனை உங்களுடைய கம்பெனிக்கு லாபத்தை ஏற்படுத்தும் என்று நீங்கள் நம்பினால் அந்த யோசனையை உங்கள் அதிபரிடம் உரிய மரியாதையுடன் எடுத்துச் சொல் லுங்கள். அதன் மூலம் நீங்கள் உங்கள் கம்பெனிக்கு மேலும் பயன் தருபவராக ஆவீர்கள். அது உங்களுக்குப்பெருமையைச் சேர்க்கும் அப்படிச் சொல்லும் போது நீங்கள் அதிகமாக எதிர்பார்ப்பது போல் தோன்றக்கூடாது அதிபருடைய மறுப் பையும் சம்பாதித்து விடக்கூடாது.

மேலும் நீங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். உங்கள் அதிபருக்கு உங்களைக் காட்டிலும் அனுபவமும் அறிவும் உண்டு. ஆக அவரைக் காட்டிலும் உங்களுக்கு அதிகம் தெரியும் என்பதாக உங்கள் அதிபரிடம் நீங்கள் காட்டிக் கொண்டால் அதன் மூலம் அவருடைய வெறுப்பை நீங்கள் சம்பாதித்து விடுவீர்கள்.

ஆக எப்போதும் உங்கள் யோசனைகளைத் தெரிவிக்கும் போது கேள்வி கேட்பது போல் கேட்டு அதிபருடைய அதிக அனுபவமுள்ள அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்வது போல- கேட்க வேண்டும்.

*(கேள்விகள் அடுத்த வாரமும்)*


**சுடர் ஒளி வாசகர்களே!**



குடத்தில் இட்ட விளக்காக உங்களுக்குள் மறைந்து கிடக்கும் படைப்புத் திறன்களைக் குன்றின் மேல் தீபமாக்கிட சுடர் ஒளி காத்திருக்கிறது.

சிறுகதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், எதுவானாலும் அனுப்பிவையுங்கள். தரமானவை பிரசுரிக்கப்படும்.


படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி,
இல.361
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு தரும் பப்பாளி



பப்பாளிப் பழத்தை எந்தக் காலத்திலும் பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு இதன் விலையும் மிகக் குறைவே. பல மருத்துவக் குணங்கள் கொண்ட பப்பாளி ஒரு அழகுசாதனப் பொருளும் கூட இப்போதெல்லாம் பெண்கள் அதிக விலை கொடுத்து, செயற்கை வாசனைகளும், பதார்த்தங்களும் கொண்ட அழகுசாதனப் பொருள்களை வாங்கி, முகப்பொலிவு பெற முயல்கிறார்கள். இத்தகையை ரெடிமெட் அழகுசாதனங்கள் முகத்தை உடனடியாக பளிச் என்று தோன்றச் செய்தாலும் நீண்டகாலத்தின் பின்னர் சருமத்துக்கு பல பாதிப்புகளை ஏற்படுத்தி முக அழகை கெடுக்கவும் செய்கின்றன. சில சந்தர்ப்பங்களில் தோல் சம்பந்தப்பட்ட நோய்களையும் ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு காசு கொடுத்து நோயை வாங்குவதை விடவும் நமது சூழலில் கிடைக்கும் பப்பாளி மூலமாக இயற்கையான முக அழகைப் பெண்கள் பெறலாம்.

1. பப்பாளிப் பழத்தை நன்கு அரைத்து, களியாக்கி முகத்தில் பூசி. 15 நிமிடங்களின் பின்னர் கழுவுங்கள். உங்கள் முகம் நாளடைவில் நீங்களே எதிர்பார்க்காத வகையில் பளிச்சிடும்.
2. பப்பாளி ஜூஸை தினமும் குடித்து வந்தால் உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும் இதனால் பெண்களின் முகம், கை கால்களில் உள்ள சுருக்கங்கள் மறைந்து, வழவழப்பானவையாக மாறிவிடும்.
3. பப்பாளித் தோலும் ஒரு அழகுசாதனம் தான். தோலின் உட்புறத்தால் கன்னங்களை வருடினால், மயிர்த்துளைக் குழாய்களில் உள்ள அழுக்குகள் வெளியேறி, முகம் பொலிவு பெறும்.

இப்படி நிறைய வழிகளில் உடலையும், முகத்தையும் பொலிவு பெற வைக்கும் பப்பாளி மூலம் இயற்கை அழகு் பெறலாமே பெண்கள்.

# வங்காரி மாத்தாய்




கென்யாவின் ஒரு சரித்திர சாதனையாளர் வங்காரி மாத்தாய். உலகில் பல்வேறு காலகட்டங்களில் அறியப்பட்ட சமூக ஆர்வலர்களில் மிக முக்கியமானவர். நிறம் என்பது சாதனைக்கு ஒரு தடையல்ல என்பதை உலக அரங்கிற்கு காட்டியவர். வறுமையும் வரட்சியும் விரட்டும் ஆபிரிக்க கண்டத்தின் சூழல் சமநிலைக்காக மட்டுமன்றி உலகின் இயற்கைச் சமநிலைக்காக போராடியவர். தடைகள் பல தாண்டி உண்மையாகச் செயற்பட்டு வந்த ஒரு கறுப்பின பெண்மணி.

கிழக்கு ஆபிரிக்காவின் கிராமப் புறங்களில் பெண்கள் கல்வி பெறுவதில் சில சிக்கல்கள் இருந்ததால் அவரால் தன்னுடைய ஆரம்பக் கல்வியை எட்டு வயதில் தான் தொடங்க முடிந்தது. அதன் பின்னர் 1960ஆம் ஆண்டு புலமைப் பரிசிலில் கற்கச் செல்ல வாய்ப்புக் கிடைத்த 300 பேரில் வங்காரியும் ஒருவராக அமெரிக்கா பயணமானார். அங்கு உயிரியல் துறையில் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டங்களையும் பெற்றதோடு மட்டுமன்றி ஜேர்மன் பல்கலைக் கழகத்தில் P.H.D யை தொடர்ந் திருந்தார். கிழக்கு ஆபிரிக்க நாடுகளைப் பொறுத்தவரை P.H.D பட்டம் பெற்ற முதல் பெண்மணியும் இவராவார்.

தொடர்ந்து பெண்களின் பொருளாதார மேம்பாட்டை உருவாக்க போராடிக் கொண்டிருந்த வங்காரி அதற்காக தன்னை பல்வேறு இயக்கங்களில் இணைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கினார். அக்கட்டத்தில் தான் அவருக்கு ஒரு உண்மை புரிந்தது. ஒரு பொருளாதார அபிவிருத்திக்கு இயற்கையின் பங்களிப்பு மிக முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டு முதலில் அதை நிவர்த்தி செய்யச் செயற்படத் தொடங்கினார். அதற்காக மரக்கன்றுகளை நட்டு வளர்க்கத் தம் பெண்களை ஊக்கப்படுத்தினார். அதன் பின்னணியில் 'பசுமைப்பட்டை' என்ற இயக்கத்தை உருவாக்கி தொடர்ந்து செயற்படத் தொடங்கினார். அக்கால கட்டத்தில் அரசியலில் இருந்தவர்கள் இயற்கைக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். மரங்களை அழித்தல் அதன் மூலம் முறையற்ற வருமானம் ஈட்டுதல் போன்றவற்றை அவர்கள் செய்து வந்ததால் வங்காரிக்கும் அவர்களிற்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகளும் பல சிக்கல்களும் தோன்றியிருக்கின்றன. இதனால் வங்காரியும் அவர்களது குழுவினரும் தாக்குதல்களிற்கும் உள்ளாகியிருக்கிறார்கள்.

இந்த அமைப்பு இதுவரை மூன்று கோடி மரங்களை நட்டுள்ளதாக கூறப்படுகிறது. இவரது முன்மாதிரியான செயற்பாட்டிற்காக 2004 ஆம் ஆண்டு அமைதி மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான நோபல் பரிசு அளிக்கப்பட்டது. சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்காக நோபல் பரிசு பெற்ற முதல் சமூக ஆர்வலர் இவர் தான் என்பதோடு ஆபிரிக்க நாட்டில் முதல் நோபல் பரிசு பெற்ற முதல் பெண்மணியும் இவர் தான். நிறம் பால் வேறுபாடு என்பன சாதனைக்கும் உண்மையான உழைப்பிற்கும் ஒரு தடையல்ல என்பதை உலகுக் காட்டியதோடு இயற்கையின் அவசியத்தையும் உணர்த்திய இயற்கையை நேசித்த மனிதம் வங்காரி மாத்தாய்...!

# எப்போ புரியும் எங்கள் சில கிராமங்களுக்கு...



போன ஞாயிற்றுக்கிழமை என்னுடைய உறவினரொருவரை சந்திப்பதற்காக நான் நீர்வேலிக்குச் செல்லவேண்டியிருந்தது. கனநாட்களிற்கு பின்னர் சென்றதால் உபசாரத்திற்கு எந்தக் குறையும் இருக்கவில்லை. நல விசாரிப்புக்களும் ஊர்ப்புதினங்களுமாய் பரபரத்தது வீடு. பள்ளிக்கூடம் விட்டுவந்த சிறுசுகளும் ஓடிவந்து கையைப்பிடித்துக்கொண்டன. வீட்டிலிருந்து கொண்டு வந்த பலகாரத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டுக் கதைத்துக் கொண்டிருந்தேன்.

இடைநடுவில் வீட்டுக்காரருக்கு அழைப்பொன்று வந்தது. "ஓம் அண்ணை இந்தா இப்ப வாறன்" என்றபடி வெளிக்கிட்டவர், வாழைக்குலை ஏத்த வந்திருக்கினமாம். போய் வெட்டி ஏத்திக்குடுத்திட்டு இப்ப வந்திடுவன் என்றபடி கிளம்பினார். 'பரவாயில்லை நீங்கள் ஆறுதலாக வாங்கோ" என்றேன் நான். அவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார்.

ஒரு அரைமணித்தியாலயத்தால் போனவர் திரும்பி வந்தார். கூடவே இன்னும் இருவரும் வந்தனர். "மூன்று பேருக்கும் நல்ல தேத்தண்ணி போடும்" என்றபடி அமர்ந்தார் அவர். அவா எழும்பி தேனீர் போட உள்ளே போனா. "உவள் நல்லா தேத்தண்ணி போடுவாள் தெரியுமோ. ஆனா என்ர பெட்டயளுக்கு அது சரி வராது. எக்கணம் போற இடத்தில நல்ல பேச்சு வாங்கப்போகுதுகள். எப்ப பள்ளிக்கூடத்தால நிண்டதுகள் இன்னும் சரியா சமைச்சு பழகேல்ல பாருங்கோ..." என்றார் வீட்டுக்காரர்.

"என்னப்பா உன்ர பெட்டையளுக்கு இன்னும் சமைக்கத் தெரியாதே... இவ்வளவு காலமும் வீட்டில சும்மா தானே நிக்கிறாளவ" என்றார் மற்றவர். கேட்டுக்கொண்டிருந்த எனக்கு அவர்கள் எத்தனையாம் தரம் படிக்கிறார்கள் என்று அறியவேண்டும் போல இருந்தது. "இல்ல உங்கட பிள்ளையள் எத்தனையாம் தரம் படிக்கினம்" என்று கேட்டேவிட்டேன்.

"அவையள் பள்ளிக்கூடத்தை விட்டு ஐஞ்சு வருசமாச்சு" என்று பதில் கிடைத்தது. அப்போ வளர்ந்த பிள்ளைகள் தானே என்று நினைத்தபடி "என்ன பிரிவில படிச்சவை..." என்று கேட்டேன். அவையளை ஐஞ்சாம் வகுப்போட பேனிப்பாட்டிப் போட்டம் என்றார் அவர். எனக்கு தூக்கிவாரிப் போட்டது. 'ஐஞ்சாம் வகுப்போடயா ஏன்..?" என்று கேட்டேன். 'பொம்பிளப் பிள்ளயள் கனக்கப்படிச்சு என்னத்த காணுறது. இங்க தானே கட்டிக் குடுக்கப் போறம். வாறவனுக்கு வாயார சமைச்சுப்போடவும் வயல் வரப்பில வேலை செய்யவும் தெரிஞ்சா போதும்" என்றார் கூடவந்த மற்றவர்.

எனக்குத் தலை சுற்றியது. எங்கள் சமூகம் விழித்துக்கொண்டது என்று நாங்கள் நினைத்துக்கொண்டாலும் இன்னும் சில கிராமங்களில் இருக்கின்ற இந்த நிலை எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. 'நீங்கள் சொல்லுறது சரிதான். இருந்தாலும் வீட்டு நிர்வாகம் பார்க்க, காசுக் கணக்கு பார்க்கவாவது அவர்கள் படித்திருக்க வேண்டுமே" என்று பதிலுக்கு நான் கேட்டேன். "அதை யெல்லாம் ஏன் அவர்கள் தான் பார்த்துக்கொள்ளவேணும்... வாறவன் பார்க்கமாட்டானா" என்றார் வீட்டுக்காரர் கறாராக. சரிதான் இனிச்சொல்லி என்ன பயன் என்று எண்ணிக்கொண்டு மெல்ல எழும்பி விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன்.

அங்கே எல்லாம் முடிந்த இடத்தில் தனியே சொல்லி என்ன பயன். ஆதலால் தான் இங்கே சொல்லுகிறேன். பெண்களுடைய கல்வி என்பது சமூகத்தின் நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது. பொதுவாகவே எந்த நாட்டிலும் ஆண்களை விட பெண்களின் எண்ணிக்கை அதிகமாகவே காணப்படுகிறது. அதனால் பெண்களை தவிர்த்து விட்டு ஆண்களால் மட்டும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்பிவிட முடியாது. ஆரோக்கியமான சமுகத்தை உருவாக்கி விடமுடியாது. எனவே தான் பெண்கல்விக்கு இப்போது அதிக முக்கியம் தரப்படுகிறது.

எங்கள் பிரதேசத்தையும் சமுகத்தையும் பொறுத்தவரை வளரவேண்டிய இடைவெளி மிக அதிகம். இந்த நிலையில் எங்கள் சமூகம் இத்தகைய மரபார்ந்த கட்டுப்பாடுகளை எப்போது களையும்...? யதார்த்த உலகில் பெண் கல்வியின் முக்கியத்துவத்தை தமிழ்க்கிராமங்கள் எப்போது உணரும்...? இருக்கின்ற இடர்பாடுகளிற்கு மத்தியில் இவை எப்போது விழித்துக்கொள்ளும்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடு உண்ட பணிஸ்



பம்பலி பரமசிவம்

'தவிடு' என்பது கவிதை போல... கவிதையை இரசிக்கலாம். தவிட்டையும் தான். தவிடு நீக்கப்படாத அரிசிக் கஞ்சி குடிச்சுப் பார்த்திருக்கிறியளே? 'ச்சா' என்ன 'ரேஸ்ற்...' 'ரேஸ்ற்' மட்டுமே? அது உடலுக்கு நல்ல வலுவான உணவு... இப்பத்தையில் சனம் தவிடு நீக்கிப் போட்டுத்தான் அரிசி சமைக்கினம். தவிடு மாட்டுத் தீவனமாகப் போகுது. அதாலை அதுகள் நோய் நொடியில்லாமல் இருக்கு துகள்.

நான் இப்ப சொல்ல வந்தது என்னெண்டால், 'தவிடு, கவிதை' ஒப்பீடு... கவிதையிலை பாருங்கோ, எந்த ஒரு எழுத்தை நீக்கினாலும், மற்ற எழுத்துக்கள் ஒரு அர்த்தமுள்ள சொல்லாக இருக்கும். அதே போல 'தவிடு' எண்டுற சொல்லிலை உள்ள எந்த ஒரு எழுத்தை நீக்கினாலும், ஏனையவை ஒரு அர்த்தமுள்ள சொல்லாக இருக்கும்... இப்ப பாருங்கோ 'தவிடு' எண்டிறதிலை இருக்கிற 'த' வை நீக் கினால், 'விடு.' நடுவிலை இருக்கிற 'வி' யை நீக்கினால், 'தடு' கடைசியிலை இருக்கிற, 'டு' வை நீக்கினால் தவி...

அதனாலைதான் 'தவிடு,' 'கவிதை' இரண்டும் ஒரே மாதிரி எண்டனான்.

ஆடு, மாடு வாயில்லாச் சீவன்கள்.

பாவங்கள். பசியிலை அதுகள் அழ, அழ வீட்டுக்காரர் தங்கடை அலுவலுகள்... எங்கடை வீட்டிலையும் ஒரு ஆடு வளர்க்கிறம். பேரனின்ரை கரைச்சலாலை வாங்கினது. பேரனுக்கு வயது நாலரைதான். அங்கை இங்கை ஓடித்திரிவான்... இப்ப கொஞ்ச நாளாக, ஆட்டோடை மினக்கெடுகிறான். எனக்கும் கொஞ்சம் ஆறுதல்... ஆடு மாட்டை மேய்க்கலாம்... இப்பத் தையப் பிள்ளையளைக் கட்டி அவிழ்க்க ஏலாது. நான் படிச்ச படிப்பிற்கு, இப்பதான் அதுக்கேற்ற வேலை பார்க்கிறன். ஆடு, காலமை வெள்ளாப்பிலை 'மே.. மே.' எண்டு கத்த, அதுகின்ர சத்தத்திலை தான் நித்திரையாலை எழும்புறனானன். 'மே...மே..' தான் எங்கடை திருப்பள்ளியெழுச்சிப் பாடல். நித்திரை சரியா முறியாட்டில் விசர்தான் வரும்.

எங்கடை ஆட்டுக்குக் இலை, குழை, தழை அவ்வளவு பிடிக்கிறதில்லை. பழங்கஞ்சி, பழஞ்சோறு எண்டால் 'பொசுக்' 'பொசுக்' எண்டு சாப்பிடுவார். அதுக்கு பாண் பணிஸ்' எண்டாலும் நல்ல விருப்பம். எனக்கு பழஞ் சோறு ஓரளவு பிடிக்கும்... 'பாண் பணிஸ்' கண்ணிலையும் காட்ட ஏலாது. காலமைச் சாப்பாட்டுக்கு குசினியிக்கை போனால், பாணைக் கண்டால் பத்திக்கொண்டு வரும்... அதுவும் 'தவிட்டுப் பாண்' எண்டால் எப்பிடியிருக்கும்?

முந்தி தவிடு, பிண்ணாக்கு ஆடு மாடுக்குத்தான் வைக்கிறனாங்கள். இப்ப 'தவிட்டுப் பாண்' தான் எனக்குச் சாப்பாடு. இனி 'பிண்ணாக்குப் பாண்' எண்டும் வரும் போல கிடக்குது. எங்களுக்கெண்டே செய்வாங்கள்... 'டயபிட்டிக்குக்கு' அதுதான் சிறந்தது எண்டு விளம்பரமும் போட்டு விடுவாங்கள். நல்ல பக்கற்றில பக்பண்ணி 'உடன் தவிட்டு உணவு,' 'இன்ஸ்ரன்ற் பிண்ணாக்கு உணவு,' 'டயபிற்றிக் காரருக் கெனவே உருவாக்கப்பட்ட, முற்றிலும் 'ஹேபல்' உணவு எண்டு வந்தாலும் ஆச்சரியப்படுகிறதுக்கில்லை.

ம்ம்.....என்ன சொல்ல வந்தனான்? ம்ம்... 'கவிதை,' 'தவிடு,' 'பேரன்,' 'ஆடு,' 'மாடு...' ம்....இப்பதான் ஞாபகம் வருகுது. காலமை வெள்ளணை நித்திரையாலை எழும்ப ஆடு 'மே.மே' எண்டு ஒரே அலறல்.. பசிதான். ஆடு மாடு வளர்க்க ஆசை.. ஆனால் சாப்பாடு போடப் பஞ்சி.. அது கத்திற கத்தலைப் பார்த் திட்டு பேரனிட்டைச் சொன்னன்... "ஆடு 'அண் ணா அண்ணா' எண்டு கத்துது... தனக்குப் 'பணிஸ்' கொண்டு வந்து தரட்டாம்" எண்டு சொன்னன்... பின்ன பேரப்பிள்ளை தான் சாப்பிட்ட 'கிறீம் பணிஸிலை' பாதியை ஆட்டுக்குக் கொடுத்தார்... பேந்தும் ஆடு கத்திச்சுது...


"ஏன் ஆடு பேந்தும் கத்துது தாத்தா?" எண்டு பேரன் கேட்டிச்சுது. நான் பேந்து என்ன பிரச்சினை? 'வட் இஸ் த புறப்ளம்?' எண்டு ஆட்டைக் கேட்டன். அது 'மே... மே...' எண்டிச்சுது. பேரனிட்டைச் சொன்னன் 'பணிஸ்' காணாதாம், பாண் கொண்டு வரட்டாம் எண்டு ஆடு சொல்லுது என்றன்.

பேரன் உள்ளுக்கு ஓடிப்போய் எனக்கு வைச்சிருந்த 'தவிட்டுப் பாணை' எடுத்துக் கொண்டு வந்தான். பேத்தியார் கண்டிட்டா... 'எங்கை கொண்டு போறாய்?' எண்டு கேக்கப் பேரன், வஞ்சகமில்லாமல் 'ஆட்டுக்கு...' எண்டு சொல்ல, அவருக்கு முதுகிலை விழுந்துது ஒரு 'தொப்.'

பேரனும் தன்ரை பாட்டிலை அந்த 'தொப்' போடை அங்காலை போயிருக்கலாம்... அவர் என்னட்டடை ஓடி வந்து, அம்மம்மா அடிச்சுப் போட்டா எண்டு முறைப்பாடு. எங்கடை ஆடு மட்டுமே வாயில்லாச் சீவன்... நானும் தான்... அதைப் பேரனுக்கு விளங்கப் படுத்த ஏலுமே? நான் கேட்டன் எந்த வாசலாலை பாணைக் கொண்டு வந்த னீங்கள்? பேரன் சொன்னான், 'முன் கதவாலை கொண்டு வந்தனான்' தாத்து. (கொஞ்சம் முதுகு நொந்தால் அவர் தாத்தா வோடை 'தாத்து' என்று செல்லம் முத்துவார்.)

ஏட பேய்ப் பெடியா, முன் கதவாலை ஆட் டுக்குச் சாப்பாடு கொண்டு வந்தால் ஆரும் பேசுவீனம். அடிப்பீனம். தானே... நீ பின் கதவாலை கொண்டு வா எண்டன். பிள்ளை போய் எடுத்துக் கொண்டு வந்து கொடுக்க ஆடு எவ்வளவு சந்தோசப் பட்டுச் சாப்பிட் டுது தெரியுமே? எனக்கும் சந்தோசம்தான்... இன்றைக்குத் 'தவிட்டுப் பாணிலை' யிருந்து விடுதலை எண்ட சந்தோசம். முகம் கால் கழுவிப் போட்டுச் சாப் பாட்டுக்குப் போக சம்பல் தான் தனிய இருந்துது. பாண் இல்லை எனக்கு. அப்பவும் ஆடு 'மே.மே' எண்டு கத்திச்சுது. "தாத்து! அது ஏன் பிறகும் கத்துது?" எண்டு பேரன் கேட்டான். "அது கத்தவில்லை. 'தாங்க்ஸ்' எண்டு சொல்லுது" எண்டு பேரனுக்கு விளங்கப்படுத்தினன்.

**"முந்தி தவிடு, பிண்ணாக்கு ஆடு மாடுக்குத்தான் வைக்கிறனாங்கள். இப்ப தவிட்டுப் பாண் தான் எனக்குச் சாப்பாடு. இனி பிண்ணாக்குப் பாண் எண்டும் வரும் போல கிடக்குது. எங்களுக் கெண்டே செய்வாங்கள்... 'டயபிட்டிக்குக்கு' அதுதான் சிறந்தது எண்டு விளம்பரமும் போட்டு விடுவாங்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்

# எழுதாத ஒரு கவிதை

பொலிகையூர் சு.க. சிந்துதாசன்

காலம், மாற்றம் என்ற இரண்டிற்குமான செயல் நெறித் தொடர்பானது ஒன்றிலிருந்து இன்னொன்றை பிரிக்க முடியாத அல்லது காலம் மாற்றத்தையோ, மாற்றம் காலத்தையோ பிரதிபலிப்பதை உணரும் படியான சூழல் ஒரு தனிமனிதன் குறித்தோ அல்லது சமூகம் சார்ந்தோ வெளிப்படலாம். இவ்வெளிப்பாட்டின் மூலக்கூறாய் விளங்கும் வாழ்வியலும் அதை நிரப்புகிற அனுபவ ஊற்றிலும் உணர முடியா வியப்புக்களாய் வெளிப்படும் போது அவை அறிவியல் வெளியிலிருந்து வேறுபட்டு அல்லது அன்னியப்பட்டு நிற்பதைக் காணலாம்.

அந்த வகையில்,என்னிலும் என் கவிதையிலும் என் சூழலிலும் ஏற்பட்ட மாற்றங்கள் ஏராளம் என்றும் நெருக்கடி நெருப்புள் நிதமும் நின்ற போதும் என் கவிதைப் பூ கருகாமல் பூத்துக் கொண்டே இருந்தது என்றும் இதற்கு யார் காரணமோ? அறியேன் என்றும் என்னுரையிலே குறிப்பிடும் த. ஜெயசீலனின் மூன்றாவது கவிதைத் தொகுதி 'எழுதாத ஒரு கவிதை' (2013) ஆகும்.

ஏற்கனவே 'கனவுகளின் எல்லை' (2001) 'கைகளுக்குள் சிக்காத காற்று' (2004) போன்ற இவரது கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் பிரபலப்படுத்தி... எல்லாம் கற்பித்து நல்லவழி காட்டியோர்க்கும்... இந்நூலைக் காணிக்கை செய்திருக்கும் கவிஞர் 'தமிழ்த் தாய் வாழ்த்து' முதல் 'என்னைச் சுகப்படுத்து' ஈறாக 112 கவிதைகளை 147 பக்கத்தில் தந்துள்ளார்.

பொதுவாக இந்நூலை நிறைத்திருக்கும் கவிதைகள் மரபோடு பயணிக்கின்றன. தமிழ், கவிதை, கவிஞன் வாழ்வு, வரலாறு, நம்பிக்கை, ஆன்மீகம், உறவு, துணிவு, உண்மை, மனிதம், இயற்கை, சமூகம், இழப்பு, காத்திருப்பு, கற்பனை, நினைவுகள், போர், தவிப்பு, உணர்வு, பொய்மை, நிகழ்காலம்... போன்ற இன்னும் பல் வேறுபட்ட பாடு பொருட்களைக் கொண்டு இவரின் கவிதைகள் இயங்குகின்றன.

எழுதாத ஒரு கவிதைக்காய் ஏங்கி அதன் பண்பு இப்படியாய் இருக்க வேண்டி உழலும் ஒரு பாடுபொருள் எழுதாத ஒரு கவிதை (பக். 08-09) என வெளிப்படுகிறது.

ஒரு கவிதை என்றாலும்
எழுதத் துடிக்கின்றேன்
ஒரு கவிதை எழுதுவது
ஒரு பெரிய விசயமல்ல
எனினும்...
ஒரு கவிதை
உண்மையான ஒரு கவிதை

....
உய்விக்கும் ஒரு கவிதை
ஒளிரும் லயக் கவிதை
எழுதத் துடிக்கின்றேன்

மனிதனாய் இருந்து மனிதத்துடன் வாழாமல் எதையெதையோ இது தான் பெருமனிதம் எனக்கொண்டு வழிநடக்கும் யதார்த்தமான விடயத்தை மனிதம் மறந்து (பக். 32-33) என்ற கவிதையில் மிகவும் அச்சொட்டாகக் காட்டுகிறார்.

....
**அடுத்தவன் பசிகண்டு துடிக்கவோ?**
**அடுத்தவன் விழிக்கண்ணீர்**
**துடைக்கவோ?**
**அடுத்தவன்**
**வலிதன்னைத் தணிக்கவோ?**
**அடுத்தவன் இரத்தம்**
**உறைவிக்கச் செய்யவோ**
**அடுத்தவன்**
**துயர்கேட்க முயலவோ?**
**அடுத்தவன்**
**சுமை தன்னைப் பகிரவோ?**
**அடுத்தவர்க்**
**குதவவோ எண்ணிடாய்**
**ஆண்டவர்க்கு**
**அள்ளி இறைக்கிறாய்**

"தேடுமெம்முன் வந்து சிரி" (பக். 145-146) என்ற கவிதையை வேலவனை வேண்டி வெண்பா வாய்த் தந்திருக்கிறார்.

**காலப் பிழையோ**
**கலக்ககோள் தொந்தரவோ**
**நூலறுந்த பட்டமானோம்;**
**நொந்து போனோம் - வேலவனே**
**என்றெம்வினையகலும்?**
**என்றெம் விதி தெளியும்?**
**இன்றும் உரைக்கலையே ஏன்?**

இது போல 'என்னைச் சுகப் படுத்து' (பக். 146-147) என்ற கவிதை நல்லூர் கந்தனை விழித்து எழுதப் பட்டிருக்கிறது.

**புன்னகையாம்**
**தென்றலினால் என்னுயிர்க்கு**
**மருந்து கட்டி**
**உன் கை வருடலினால்**
**என் ஐயம் அச்சமோட்டி**
**என்னைச் சுகப்படுத்து**
**எக்கணமும்**
**நல்லூரா!**

ஒவ்வொரு கவிதையும் கவிஞரின் ஆழ்புலமையை ஏதோவொரு வகையில் வெளிக்கொணருகின்றது. புலமை சார்ந்து வெளிப்படும் இத்தொகுதியிலுள்ள கவிதைகள் அமைப்பு முறை, கருத்தியல் தெளிவு போன்றவற்றால் முன்னிலை வகிப்பதுடன் கவிஞருக்கான தனித்துவத்தையும் வழங்கி நிற்கிறது.

ஈழத்தின் பெயர் குறிப்பிடக் கூடிய சமகாலக் கவிஞர்களில் ஒருவராக விளங்கும் த. ஜெயசீலனது கவிதைகள் மரபு சார்ந்து பயணப்படும் அதே வேளை சொல்ல வந்த கருத்தை கனதியாகவும் ஆழமாகவும் சொற் பிணைப்பை மேற்கொண்டு கவிதையில் வெளிப்படுத்துகின்ற குறித்த பாணி ஏனையோரிலிருந்து இவரை வேறுபடுத்தியும் காட்டுகிறது. அத்தோடு இவர் கவிதைகளை நகர்த்தும் விதம் வியக்கவும் வைக்கிறது. கோட்பாட்டு ரீதியாக அல்லது தத்துவார்த்தமாக கையாளும் மொழிகள் இலக்கியத்தை மேம்படுத்துவதையும் காண முடிகிறது.

*** *** ***




## றஷ்மியின் இரு நூல்கள் அறிமுகம்



கவிஞர் றஷ்மியின் 'ஈதேனும் பாம்பு', 'ஈ தனது பெயரை மறந்துபோனது' எனும் கவிதை நூல்களின் அறிமுக நிகழ்வு கடந்த 7ஆம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்றது.

ஒரு முஸ்லிம் படைப்பாளியின் நூலொன்றுக்கான அறிமுக நிகழ்வு ஏறத்தாழ 30 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது. இதில் ஈழத்தின் முக்கியமான படைப்பாளிகள் பலரும் கலந்துகொண்டனர். நண்பர்கள் மற்றும் தவிர கலை இலக்கிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த அறிமுக நிகழ்வில் சித்தாந்தன், ந. மயூரரூபன், சி. றமேஸ் ஆகியோர் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர். வழமையான அறிமுக நிகழ்வு போலல்லாது வந்திருந்த அனைவரும் கருத்துக்களால் ஒன்றிணையும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன்

09

● ஒளண்யன்



வாழ்க்கையில் குடும்பம் என்ற அமைப்பே சிதைந்த பிறகு யூலியனுக்கு அவனது நண்பர்கள்தான் எல்லாமே. எனினும் தனக்கு வைத்த குறியில் அநியாயமாகத் தன் நண்பன் பலிக்கடாவாக மாறியதை யூலியனால் ஜீரணிக்க முடியவில்லை. எனினும் அதை நிகழ்த்தியவர்கள் அதை ஒரு உண்மையான விபத்துப் போலவே சோடித்துவிட்டதால், யூலியனால் எதுவுமே செய்யமுடியவில்லை. ஆனாலும் அடிபட்ட புலியாக - மீண்டும் பழைய ஜுலியனாக - மாறுவதற்கு இச்சம்பவம் விதையூன்றியது.

சிலவேளைகளில் இவ்வாறு ஒரு துர்மரணம் நிகழ்ந்திராவிட்டால் மதுவுக்குள்ளேயே யூலியனின் திறமைகள் எல்லாம் புதைந்து போயிருக்கும். நல்லவேளையாக அவுஸ்திரேலிய பொலிஸாரினதும், நோர்டெல் நிறுவனத்தினதும் புண்ணியத்தில் ஹக்கிங் என்ற ஆயுதத்தைக் கையில் ஏந்தியவாறு யூலியன் வீறுகொண்டெழுந்தான். எனினும் எழுந்த வேகத்திலேயே எதிரிகளை வீழ்த்துவதற்குப் பதிலாக எவரும் எதிர்பாராத வகையில்- நண்பர்களின் ஆலோசனைப்படி- அவுஸ்திரேலியாவை விட்டே ஒருநாள் விலகிப் போனான்.

விட்டது சனியன்! என்று யூலியனின் எதிரிகள் எல்லோருமே சந்தோஷப்பட்டார்கள். தமது தாக்குதல்கள் தொடரலாம் என்ற பயத்திலேயே யூலியன் ஓடிவிட்டதாக அவர்கள் தமக்குள் எண்ணிக்கொண்டனர். இனிமேல் தமது திருகுதாளங்களை எவ்விதப் பயமுமின்றித் தொடரலாம் என்ற நினைப்பே அவர்களுக்குப் பேரானந்தத்தைத் தந்தது. ஆனால் எரிமலை ஒன்று வெடிப்பதற்குத்தான் இவ்வாறு சொல்லாமல் கொள்ளாமல் நகர்ந்திருக்கிறது என்பதைக் காலம்தான் அவர்களுக்கு உணர்த்தியது.

அவுஸ்திரேலியாவை விட்டகன்ற யூலியன் தன் எண்ணத்தை ஒத்தநபர்களைத் தேடியலைந்தான். அதன் போது அவனுக்கு 5 நண்பர்கள் கிடைத்தார்கள். அவர்களும் யூலியனைப் போலவே வேஷதாரிகளின் கபடங்களைக் களையவேண்டும் என்ற தாகத்தோடு, ஆனால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தவர்கள்தான். இருளின் நடுவே தடுமாறிக்கொண்டிந்த அவர்களுக்கு யூலியனின் அறிமுகம் நம்பிக்கையின் ஒளிக்கீற்றை மிக அருகே தரிசிக்கவைத்தது. அவர்கள் யூலியனின் இணைய வேட்டைகளை ஏற்கனவே அறிந்திருந்தார்கள். இதனால் யூலியனுடன் இணைந்து செயற்பட அவர்கள் எவ்வித தயக்கமும் காட்டவில்லை. ஏதோ ஒரு திட்டத்துடன் யூலியன் தன் போக்கினை ஒத்தநபர்களைத் தேடுகிறான் என அறிந்து இன்னும் பலர் யூலியனோடு சேர்ந்து செயலாற்ற முன்வந்தனர். ஆனாலும் பல எலிகள் சேர்ந்தால் புற்றெடுக்க முடியாது என்பது யூலியனுக்கு நன்கு தெரிந் திருந்தமையில், தன்னை நாடி வந்தவர்களை வடிகட்டி, மேலே சொல்லப்பட்ட ஐவரை மாத்திரமே தன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டான்.

நிதமும் உலகில் இரகசியமாக அமுங்கிப் போய் விடுகின்ற அக்கிரமங்கள் தொடர்வதற்கு அதிதிறன்கொண்ட புலனாய்வு ஊடகங்களின் மட்டுப்பாடே காரணம் என்பதை யூலியன் தலைமையிலான குழு கண்டறிந்தது. ஏற்கனவே இயங்கிக்கொண்டிருந்த புலனாய்வு ஊடகங்களுடன் யூலியன் குழு தொடர்பினை ஏற்படுத்தி, அவற்றின் பணியின் போதாமைகளைச் சுட்டிக் காட்டி, ஒளிந்து கிடக்கும் இரகசியங்களை மோப்பம் பிடித்து, அதைப் பகிரங்கப்படுத்து மாறும் ஆலோசனை கூறியது. தனிப்பட்ட நபர்களின் பாலியல் சார் விடயங்களை வெளிப்படுத்துவதையே அந்த ஊடகங்கள் 'புலனாய்வு ஊடகவியல்' என்று அர்த்தம் கற்பித்து வைத்திருந்தன. பிரபலங்களின் பின்னால் மறைந்து திரிந்து அவர்களின் அந்தரங்களைப் படம் பிடிக்கும் பாப்பரஸித்தனமான முறையையே அவை கடைப்பிடித்து வந்தன. (இத்தகைய பாப்பரஸி புகைப்படக்காரர்களின் பின் தொடர்கையாலேயே இங்கிலாந்தின் இளவரசி டயானா கார் விபத்தில் சிக்கி உயிரிழக்க நேரிட்டது), எனவே இத்தகைய குறைகளை நீக்கி, பொதுமைப்படுத்தப்பட்ட வகையில் சமூகப் பயனுடைய வகையில் புலனாய்வு ஊடகங்கள் செயற்பட வேண்டும் என யூலியன் குழுவினர் யோசனை கூறினர். ஆனாலும் அவர்களின் ஆலோசனைகள் யாவுமே புறக்குடத்து நீராயின. நீங்கள் எது வேண்டுமானாலும் சொல்லுங்கள். எங்களுக்கு இப்படித்தான் செய்யத் தெரியும். நீங்கள் சொன்னபடி செய்தால் எங்கள் நிறுவனங்களை இழுத்துப் பூட்டி விட்டு, சிறைக்கம்பிகளைத் தான் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். உங்கள் ஆலோசனைகள் எவையுமே எமக்குத் தேவையில்லை என்று முகத்தில் அடித்தது போன்று அந்தப் புலனாய்வு ஊடகங்கள் யாவும் ஒரே குரலில் கூறின. இந்தப் பதில்கள் யூலியனையும் அவரது நண்பர்களையும் சிறிது சோர்வடைய வைத்தன.

இனி என்ன செய்யலாம்? என்ற யோசனையில் இறங்கினர். இறுதியில் ஆயிரம் சூரியன்களுக்காகக் காத்திருப்பதை விடவும் ஒரு மெழுகுவர்த்தியையாவது நாம் ஏற்றி வைப்போம் என்ற முடிவுடன் யூலியன் குழு களத்தில் குதித்தது. முடமாகிக் கிடக்கும் புலனாய்வு ஊடகத்துறையை உயிர்தெழ வைப்பதற்கு ஒரு புதிய இணையத் தளத்தினைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். ஒரு புலனாய்வு ஊடகம் என்னென்ன சவால்களையெல்லாம் சந்திக்கும் என அலசி ஆராய்ந்து, அவற்றை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற முன்கூட்டிய திட்டமிடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன. எல்லாம் திருப்தி என்ற மன நிறைவுடன் யூலியன் கட்டைவிரலை உயர்த்திப்பிடிக்க, ஊடகத்துறையின் புதிய பிரசவம் ஒன்று சுவீடனில் நிகழ்ந்தது.

உலகையே ஆட்டிவைக்க உதயமான அந்த இணையத்தின் பெயர்தான் விக்கிலீக்ஸ்!!!

பேரைக் கேட்டாலே சும்மா அதிரும் போது, விக்கிலீக்ஸின் அதிரடிகளால் உலகெங்கும் இடி இடிக்காமல் விடுமா?

விக்கிலீக்ஸின் ஒவ்வொரு இடியும் ஒவ்வொரு ரகம். அந்த இடிகள் என்ன?

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## கம்பஸில் காமப் பேய்கள்-6

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

"என்ன எல்லாரும் வெளிக் கிட்டிங்கள் போல. எக்ஸாம் ஹோல்ல கேட்ட விஷயம் என்ன மாதிரி. ஒருத்தருக்கும் படிப்பிலையும் அக்கறை இல்லை. முன்னேறுறதிலையும் விருப்பம் இல்லை." என்று அலுத்துக் கொண்ட பாவனையில் சொன்னார். அவரின் தில்லு முல்லுகள் பற்றி ஏற்கனவே பல மாணவிகள் அறிந்து வைத்திருந்ததால்.

"சேர்! நான் போன் பாவிக்கேறலை. ஏதும் தேவையெண்டா அண்ணாவின்ர போன் தான் யூஸ் பண்றனான். செல்போனால் கன பிரச்சினை வருகுதெண்டு வீட்டுக்காரர் வாங்கி தரேலை" என்று சொல்லி நழுவ முனைந்தனர். ஆயினும் இப்படி எத்தனை பேரை அந்த விரிவுரையாளர் கண்டிருப்பார். அவருக்கு தெரியாதா மாணவிகள் சொல்வது பொய்யென்று. உடனே அவர், "இந்தக் காலத்தில நேசறிப் பிள்ளை கூட செல்போன் யூஸ் பண்ணுது. நீங்கள் என்னடா வெண்டால் அக்கடமில படிச்சுக் கொண்டு அண்ணான்ர போன் ஆட்டுக்குட்டியின்ர போன் எண்டு பூச்சுத்துறீங்கள். சரி. அண்ணான்ர போன் நம்பரையாவது தாங்கோ" என்று குறித்து கொண்டார்.

என்றாலும் சில மாணவிகள் விரிவுரையாளரின் சுயரூபம் தெரியாமல் தங்கள் செல்போன் இலக்கங்களை கொடுக்கவும் தவறவில்லை. அவ்வாறு கொடுத்தவர்கள் அதற்கான பயனை அடுத்து வந்த இரவுகளில் அனுபவிக்கத் தொடங்கினர். விரிவுரையாளர் இரவுகளில் அந்த மாணவிகளிடம் கெஞ்சல் மொழியில் வக்கிரமான உரையாடலை தொடர்ந்தார். அவரது தூண்டிலில் சில மீன்கள் சிக்கினாலும் பலர் ஒதுங்கி ஓடத் தொடங்கினார். அப்படி ஒடினாலும் விரிவுரையாளர் விடவில்லை. எத்தனை நாள்தான் அவரின் ஆபாச லீலைகளை மாணவிகளும் சகிக்க முடியும்?

ஒரு கட்டத்தில் சில மாணவிகள் துணிவு கொண்டு, மாணவர் பிரதிநிதிகளிடம் விடயத்தை சொல்ல, செல்போன் திருவிளையாடல் புரிந்த விரிவுரையாளர் மீது நிர்வாகத்தின் அனல் பார்வை திரும்பியது. விளைவு? இப்போது அந்த இசைத்துறை விரிவுரையாளரின் அதிகாரம் பிடுங்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் அவரின் செல்போன் தரிசனங்கள் இன்னும் தொடர்வதாக கேள்வி. நிர்வாகம் அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து மாணவிகளைக் காப்பாற்றுமா?

**(காமப் பேய்களின் கதை அடுத்த வாரம்...)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்

இலக்கம் 01இல் இருந்து 27 வரையிலான இலக்கங்களைத் தொடர்பு படுத்தி உருவத்தைக் கண்டு பிடியுங்கள்.





## சிறுவர் மர்மத் தொடர் 10

– அம்புலி


"உன் பிள்ளைகளை எனக்காக நீ பலி தராவிட்டால், உன் நாட்டு மக்கள் எல்லோரையும் சிலைகளாக்கி விடுவேன்" என்று உரத்த குரலில் கூறியதோடு, மட்டுமல்லாமல் தன்னுடைய மந்திரக்கோலை எடுத்து ஏதேதோ மந்திரங்களைச் சொல்லியவாறு சுழற்றவும் தொடங்கினாள் மாயக்கிழவி.

நந்திவர்மனுக்கு தலை சுழன்றது. "நாட்டு மக்களா? பிறக்கப் போகும் பிள்ளைகளா? யார் எனக்கு முக்கியம்?" பலவாறாக யோசித்த அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக தொண்டையைச் செருமினான். மன்னன் தொண்டையைச் செருமியதும் மந்திரம் சொல்வதை இடைநிறுத்திவிட்டு ''என்ன நந்திவர்மா? முடிவெடுத்துவிட்டாயா?'' என மாயக்கிழவி கேட்டாள். "ஆம்! நீ கேட்டபடியே என் பிள்ளைகளை உனக்காக பலிதரச் சம்மதிக்கிறேன்'' என்று நந்திவர்மன் கூறியதைக் கேட்டதும் மாயக்கிழவியின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

''மன்னா! மிக்க மகிழ்ச்சி! என் மாய வலையில் சிக்குண்டிருந்த தளபதி, படைவீரர்களோடு இனி நீ நலமாக நாடு திரும்பலாம். ஆனால், நீ கொடுத்த வாக்கு மீறினால் நானே உன் புதல்வர்களை கவர்ந்து விடுவேன் என எச்சரிக்கும் தொனியில் கூறினாள் மாயத் தீவு மந்திரக்கிழவி."

[மந்திரக் கிழவி வருவாள்...]

## கும்பகர்ணன் 25




## பொன்மொழிகள்

* உண்மையைப் பேசுங்கள், கேட்பவர்களுக்கு இயன்றதைக் கொடுங்கள், இந்த இரு வழிகளாலும் ஒருவன் இறைவனின் சந்நிதியை அடையலாம்.
* எதிர்ப்பும், தடையும் இருந்தால் தான் மனிதன் விரைந்து முன்னேறுவான், காற்றாடி காற்றை எதிர்த்துத்தான் மேல் எழும்புகிறது.
* சந்தனக்கட்டை, மல்லிகை முதலியவற்றின் மணம் காற்றின் எதிர்த் திசையில் செல்வதில்லை, ஆனால், நல்லவர்களின் புகழ் மணமோ சூறைக் காற்றையும் எதிர்த்துச் செல்கிறது.

– புத்தர்

## மயிலே குயிலே



மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!



ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!

த. மயூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பூமுகன்

# பஸ்ஸில் கிடைத்த சிப்பாய் மாப்பிள்ளை

## ஏமாறும் தமிழ் பெண்களுக்கு இது ஒரு பாடம்

நான் 2008இல் அவரை சந்தித்தேன்.பஸ் பயணத்தின்போது சீருடையில் வந்த அவர் எனது தொலைபேசியை வாங்கினார். ஏதோ அவசரம் என்று எண்ணி நானும் கொடுத்தேன்.நான் கனவில் கூட நினைக்கவில்லை இப்படி எனக்கு நேரும் என்று.

எனது தெலைபேசியை வாங்கிய அந்த நபர் தனது தொலை பேசிக்கு டயல் செய்திருக்க வேண்டும். பின்னர் அடிக்கடி எனக்கு தொந்தரவு கொடுத்து வந்தார். என்னை காதலிப்பதாகவும் கூறினார். அவரது தொல்லை தாங்க முடியாமல் நான் சிறிது காலம் அந்த தொலைபேசி எண்ணை பாவிக்கவில்லை.

மீளவும் நான் அந்த நம்பரை பாவித்தபோது அவர் கோல் எடுத்தார். தான் என்னை உண்மையாகவே காதலிப்பதாகவும் இவ்வளவு நாளும் கஷ்டப்பட்ட தாகவும் கூறினார். அவரது காத்திருப்பு அவர்மீது எனக்கு காதலை ஏற்படுத்தியது.

காதலித்தேன்.உண்மையாகக் காதலித்தேன். நான் ஒரு சிப்பாயைக் காதலிக்கிறேன் என்ற விடயம் எனது குடும்பத்துக்கோ சுற்றத்தாருக்கோ தெரிந்தால் எனது காதலுக்கு தடையாக இருப்பார்கள் என்பதற்காக அவர்க ளிடம் நான் கடைசிவரை மறைத்தேன்.

இன்று நடுத்தெருவில் நிற்கிறேன்.இருந்தாலும் எனது வாழ்க்கைக்கு கரி பூச முற்பட்ட அந்த சிப்பாயின் முகத்தில் நான் சாவ தற்குமுன் கரி பூசுவேன்.

சற்றும் இடைவெளி விடாது பேசிக்கொண்டே இருந்தார் அந்த இளம் பெண்.

தமிழ்ப் பெண்கள் அவதானமாக இருக்க வேண்டியகாலம் இது. ஏராளமான பெண்கள் தாங்கள் சிப்பாய்களிடம் ஏமாந்த கதைகளை தமக்குள்ளேயே புதைத்து வைத்திருக்கிறார்கள். இந்தப் பத்தியில் சொல்லப்படும் உண்மைச்சம்பவம் இனிமேலும் இத்தகைய பொறியில் பெண்கள் விளக்கூடாது என்பதற்காகவே இங்கு தரப்படுகிறது.



### இலவு காத்த கிளி

யாழ்பாணம் ஆறுகால்மடத்தைச் சேர்ந்த இந்த யுவதி கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸார் முன்னிலையில் நஞ்சருந்தி ஆபத்தான நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் பொலிசாராலேயே சேர்க்கப் பட்டிருக்கிறார்.

இரணுவச் சிப்பாய் இவரைக் காதலித்து கைவிட்ட சம்பவம் வீட்டாருக்கு தெரியவர அவர்கள் பெண்ணைக் கண்டித்திருக்கின்றார்கள். அதனால் கோபமடைந்த அவர் வீட்டைவிட்டு வெளியேறி தனது உறவுக்காரருடன் கிளிநொச்சி முறிப்பு பகுதியில் வசித்து வந்துள்ளார்.

தான் இராணுவ சிப்பாய் ஒருவரால் ஏமாற்றப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி பொலிஸ்நிலையத்தின் பெண்கள் சிறுவர் பிரிவில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்த அந்தப் பெண் 5ஆம்திகதி பொலிஸ் நிலையத்துக்கு அழைக் கப்பட்டார். அங்கு குறித்த பெண்ணை ஏமாற்றியவர் என்று சொல்லப் படும் தங்காலையைச் சேர்ந்த நபரும் வந்திருந்தார்.

விசாரணையின் போது வாய்த் தர்க்கம் ஏற்பட்டு, பொலிஸார் முன்னிலை யிலேயே இருவரும் அடித்துகொண்டுள்ளனர். இந்த நிலையில், குறித்த பெண் தான் ஏற்கனவே திட்டமிட்டு எடுத்துச் சென்ற நஞ்சுக் குப்பியை எடுத்து குடித்துள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற அந்த யுவதி தனது காதல் வரலாற்றை கூறுகிறார் இப்படி.

"எனது உறவுகாரர் ஒருவர் வவுனியாவில் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை பார்க்க நான் வவுனியா சென்று வருவது வழக்கம். எனது காதலும் அப்போதே ஆரம்பித்தி ருந்ததால் அவரே என்னை அழைத்து செல்வார்.

அவருடன் நான் தொலைபேசியில் நீண்ட காலமாக தொடர்பைப் பேணி வந்த நிலையில் 2011 இல் என்னை தான் பதிவுத்திருமணம் செய்யப் போவ தாகவும் அதற்காக தான் லீவு எடுத்து இருவரும் அவரது சொந்த ஊருக்கு போகவேண்டும் என்றும் கேட்டார். நானும் உடன் பட்டேன்.

என்னை அழைத்து சென்றவர் வீட்டுக்கு கூட்டிச் செல்லவில்லை. பதிலாக விடுதி ஒன்றில் இருவரும் தங்கியிருந்தோம். இடையில் தனக்கு இராணுவ முகாமில் இருந்து அவசர அழைப்பு வந்துள்ளதாகவும் வேறொரு தினத்தில் பதிவுதிருமணம் செய்துகொள்வோம் என்று கூறியும் என்னை அழைத்து வந்து யாழ்ப்பாணத்தில் விட்டார். இது போல மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் என்னை ஏமாற்றினார். அவரது நடிப்பை நான் முழுமையாக நம்பினேன்.எனது வாழ்க்கை இப்படி தொலையும் என்று கனவில்கூட நான் நினைக்கவில்லை. படுபாவி என் வாழ்க்கையை நாசமாக் கிட்டான்"

அந்த பெண் பேச்சை நிறுத்தவே முடியவில்லை.

### மாப்பிள்ளை

தங்காலையை சேர்ந்த முஸ்லிம் இவர். நசூர்தீன் என்ற பெயரைக் கொண்ட இவர் இராணுவ சிப்பாய். பரந்தன் இராணுவமுகாமில் கடமையாற்றுகிறார். (தற்போது இவர் இராணுவத்திலிருந்து விலக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்)

தன்னைக் காதலித்த இவர் ஏற்கனவே திருமணமானவர் என்பதையும் தான் தற்போது அறிந்து கொண்டுள்ளதாகக் கூறுகிறார் அந்த பெண். நல்லவன் போல நடிக்கும் இவன் எனக்கு நிறையவே புத்திமதி சொன்னான். அவனது வார்த்தைகளே என்னை நம்ப வைத்தன.

சிப்பாய் என்னை ஏமாற்றியதை கிளிநொச்சி படைதலைமையத் திடமும் முறிகண்டி சி.சி. எம்.பியிலும் தெரியப்படுத்தினேன். ஆனால் எனக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. இனி நான் நீதிமன்றில் நீதி கேட்கப் போகிறேன்.

இவனோடு வாழ்வதற்கு அல்ல. என்னை ஏமாற்றியதற்கான தண்டனைக்காக...... அடிக்கடி தான் பிழை செய்யவில்லை என்று கூறிக் கொள்ளும் இந்த யுவதி இந்த சம்பவத்தை வைத்து தன்னை கேவலமாக எண்ணிவிட வேண்டாம் என்றும் கூறினார்.

கேவலம் எது? இன்னும் எத்தனை பேர் நீங்கள் செய்த பிழைகளை நியாயப்படுத்த போகிறீர்கள்? போதும் உங்களையே நீங்கள் முட்டாளாக்கியது.

பச்சமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டுமா கூறப்பா

"சுண்ணாம்பும் தயிரும் சேர்ந்தா திங்கிறவன் யாரப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

## திருமணம் செய்யாமல் குழந்தை பெற நடிகை விரும்புவது சரியா?

**க. அருள்ராஜ், கைதடி.**

**கே : தமிழர்களுக்கு கூட்டமைப்புத்தலைவர் சம்பந்தனால் மட்டுமே தீர்வைப் பெற்றுத்தர முடியுமென்று அரச கட்சி சார்பில் வடக்குத்தேர்தலில் போட்டியிடவுள்ள தயா மாஸ்ரர் கூறியுள்ளாரே. இது பற்றி என்ன நினைக் கிறீர்கள் பித்தரே?**



ப : இதில நினைக்க என்ன இருக்கு. இப்பிடிச் சொன்னவருக்கு எப்பவுமே சுயபுத்தி இருக்கிறேலை. இவற்றை வண்டவாளம் தெரிஞ்சதால கடைசிக் காலங்களில இவருக்கு அவங்கள் காத்துப் பிடுங்கித்தான் வைச்சிருந்தவங்கள். அப்பவும் கண்டபடி அறிக்கை விட்டு சனத்தை உசுப்பேத்தினதில உந்தப் புண்ணியவானுக்கும் பெரிய பங்கு இருக்கு. கண்ணை மூடிக் கொண்டு வாய்க்கு வாறத புசத்திறதில ஆள் விண்ணன். இப்ப எலக்சனில நிக்கிற சான்ஸ் கிடைச்ச உடன் மனுசனுக்கு தலைகால் தெரியேலை. அதை விட பகிடி என்னெண்டா எந்தகட்சியில நிக்கிற னெண்டும் தெரியேலை. அரச கட்சியில நிக்கிறதை மறந்து கூட்டமைப்பிலதான்நிக்கிறனெண்டுநினைச்சு, கூட்டமைப்புத் தலைவர் தான் தீர்வைப் பெற்றுத் தர முடியுமெண்டு சொல்லியிருக்கிறார். உது அவரில பிழையில்லை. அடிக்கடி கொள்கை மாறிக் கொண்டிருக்கிற எல்லாரும் இப்பிடித்தான் எந்தக் கொள்கையில இப்ப நிக்கிறம் எண்டதை மறந்து ஏதேதோ உளறுறவை. இதையும் அப்பிடியே எடுக்க வேண்டியது தான்.

**த: விதுஷா, சண்டிலிப்பாய்.**

**கே : பித்தரே! எனக்கொரு சந்தேகம். காதலித்து திருமணம் செய்த மனைவிக்கும், பெற்றோர் பார்த்து திருமணம் செய்து வைக்கும் மனைவிக்கும் என்ன வித்தியாசம்?**

ப : கனக்க வித்தியாசமில்லை. எப்பிடியிருந்தாலும் குணம் ஒண்டுதான். ஆனா அதை நாங்கள் எதிர்கொள்ளுற விதம் தான் வித்தியாசம். காதலிச்ச மனைவி உலக்கையால அடிச்சாலும், காதலிச்ச குற்றத்துக்காக அந்த அடி நோகாத மாதிரியே காலம் முழுக்க காட்டிக் கொள்ள வேணும். அதே சமயம் தாய் தகப்பன் பாத்துச் செய்து வைச்ச மனைவி அடிச்சால், குய்யோ முறையோ எண்டு குளறியடிச்சு. உன்னை நம்பித் தாலி கட்டினதுக்கு இதுதானா பரிசு? எண்டு மனதுக்க கேட்டுப்போட்டு, அறையைப் பூட்டிப் போட்டு அழவேண்டியது தான். (பித்தருக்கு இதில நல்ல எக்ஸ்பீரியன்ஸ் எண்டு நீங்க நினைச்சா அதுக்கு நான் பொறுப்பில்லை)

**இ. புஸ்பராணி, கீரிமலை.**

கே : எனக்கு திருமணம் செய்யாமலேயே குழந்தை பெற்றுக் கொள்ளத்தான் ஆசை என்று கமலின் மகள் ஸ்ருதி சொல்லியிருக்கிறாரே. இப்படி எல்லாப் பெண்களும் நினைத்தால் எதிர்காலத்தில் திருமணம் என்ற ஒரு விடயமே இல்லாமல் போய்விடுமா பித்து?

ப : கலியாணம் கட்டுறது, பிள்ளை பெத்துக் கொள்றது எல்லாம் அவையவையின்ர விருப்பம். ஆனா எங்கட கலாசார முறைக்கு மாறாக, கலியாணம் கட்டாமலே குழந்தை கிடைக்க வேணுமெண்டுறது தான் கொஞ்சம் சிக்கலாக் கிடக்கு. ஆனாலும் உப்பிடியான ஆசை இப்பதான் பொம்பிளையளுக்கு வருகுதெண்டு நினைச்சு, இனி கலியாணம் எண்ட ஒரு விசயமே இருக்காது எண்டு நினைக்கக் கூடாது. மகாபாரதத்தில குந்தி கலியாணம் கட்ட முதலேதான் கர்ணனைப் பெத்தெடுத்தவா. அதுக்குப் பிறகு உலகத்தில கலியாணம் செய்யிற வழக்கம் இல்லாமலே போட்டுது? இல்லையே. ஒராள் ரண்டுபேர் அப்பிடி நினைக்கிறதால ஒட்டுமொத்த பழக்க வழக்கமும் மாறிப்போடும் எண்டு பயப்பிடாதையுங்கோ.

பொதுவாகவே இளம்பொம்பிளைப்பிள்ளையளுக்கு குழந்தைகளில ஆசை அதிகம் எண்டு உளவியலாளர்கள் சொல்லுகினம். ஆனா அதேசமயம் திருமணம் தொடர்பா அவைக்கு அந்த வயதில ஒரு வெறுப்பு இருக்கும். தங்கட குடும்பத்தை விட்டிட்டு எப்பிடி வேற ஒரு ஆணோட போய் குடும்பம் நடத்துறது எண்டெல்லாம் யோசிப்பினம். கிட்டத்தட்ட அப்பிடியான மனநிலையில தான் ஸ்ருதி சொல்லிருப்பா போல (வேணுமெண்டா நீங்கள் ஒருக்கா அவாக்கு அப்ளிகேசன் போட்டு பாருங்கோவன்)

## சொற்சிலம்பம் போட்டி இல: 578

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | ■ | 5 |
| 6 | | | ■ | 7 | | 8 | |
| 9 | | ■ | 10 | | | | ■ |
| 11 | | 12 | ■ | ■ | | ■ | 13 |
| | ■ | 14 | | 15 | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| ■ | 18 | | ■ | 19 | 20 | | ■ |
| 21 | | ■ | 22 | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

**மேலிருந்து கீழ்**

1. (நோயில்லாமல் உடலை) ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றநிலை அல்லது வழிமுறை.
2. தாமரை
3. தேனீக்கள் இதனைத் திரட்டும்
4. ஒன்று தோன்றிய அதேகாலம்
5. பெற்றெடு
7. வனம்
8. கண்டுபிடி
12. பச்சைக்கிளி
13. நுதல்
15. உடல் உறுப்புகளின் இயக்கம்
16. போலியல்லாதது
17. நிதானமிழந்து அவசரப்படு
20. இரத்தம், கண்ணீர் முதலியன சிறிய அளவில் வெளிவருதல்.

**இடமிருந்து வலம்**

1. ஆரோக்கியமுடையவன்
6. மன்மதன்
7. கேட்டதைக் கொடுக்கும் பசு இந்த இனத்தைச் சேர்ந்தது
9. பனை
10. மயானம்
11. இந்திரன் சபையில் ஆடும் அழகி
14. உடல் (குழம்பியுள்ளது)
16. வன்முறையல்லாத ஆயுதம்
17. உடைமை கவர்
18. ஜலதோஷம் பிடித்தால் இதனாலும் கஷ்டமுண்டு
19. தகுதி (குழம்பியுள்ளது)
21. நான்கில் ஒரு பகுதி
22. ஓர் அசைச் சொல்
23. அற்பம்

### சொற்சிலம்பம் போட்டி இல. 576 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. நேரம், 2. சக, 3. நாம்பன், 4. கடுகு, 5. மது, 7. மாமிசம், 9. அசுரர், 10. காயம், 11. காமுகன், 13. வில், 15. சுவர், 16. ஞானி, 18. பறி

**இடமிருந்து வலம்**

1. நேச நாடுகள், 6. ரகம், 7. மாது, 8. படகு, 9. அன், 10. காசம், 11. காசு, 12. ஓவியம், 14. முரசு, 17. கர்வம், 18. பனி, 19. பன்றி

### சொற்சிலம்பம் போட்டி இல. 578

சொற்சிலம்பம் 578 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 575 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | கனகசபை நாகேந்திரன், இல. 11-3/1, நெல்சன் இடம், வெள்ளவத்தை, கொழும்பு-06. |
| 2ஆம் பரிசு | ச. பரமேஸ்வரி, இல. 43/31, திசவீரசிங்கம் சதுக்கம் மேற்கு, மட்டக்களப்பு. |
| 3ஆம் பரிசு | டி. ஆர். ஆன் டிலுக்ஷி, இல. 11, ஸ்ரீசிவாநந்தா வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு-13. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) கே.எம்.எம்.கலீல்
இல. 66-17, வாரண வீதி,
திஹாரிய, கலகெடிஹேன.

(2) வி. யிந்துசா,
மே/பா-வே. இராசநாயகம்,
சோரன்பற்று, பளை.

(3) கே. இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை.

(4) வஸந்தா பாலேந்திரா,
இல. 21, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.

(5) ம. குருச்சந்திரன்,
இல. 39/24, சிவன் வீதி,
திருகோணமலை.

(6) T. செல்வதுரை,
இல. 11-5/1, சென்ற் லோறன்ஸ் றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.

(7) S. செல்வநாதன்,
இல. 14/2, பீரிஸ் வீதி,
தெஹிவளை.

(8) செ. திலகவதி,
பத்தியவத்தை,
நெல்லியடி.

(9) சி. ஜெயந்தினி,
சோறன்பற்று, பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனையும், கொள்வனவும்




ஐரோப்பிய பிராந்தியத்தில் உதைபந்தாட்டத்தின் வீரர்கள் விற்பனை மற்றும் கொள்வனவு பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஒவ்வொரு அணியும், சிறந்த வீரர்களை தத்தமது அணிகளில் இணைத்துக் கொள்வதற்கு மும்முரம் காட்டி வருகின்றன. அந்த வகையில் ஐரோப்பாவின் முன்னணி கழகங்களான பார்சிலோனா, ஆர்சனல், ரியல் மட்ரிட் ஆகிய கழகங்கள் பணத்தினை வாரி இறைத்து பிரபலமான வீரர்களை தத்தமது கழகங்களில் இணைக்கப் போட்டி போட்டு வருகின்றன.

இந்த வாரத்தின் தகவல்களின் அடிப்படையில், கடந்த பருவ காலத்தின் போது பலவீனமாக இருந்த தமது பின்களத்தினை வலுப்படுத்தும் முகமாக உலகின் தலை சிறந்த பின்கள வீரரான பிரேஸிலின் தியாகோ சில்வாவை தமது அணியில் இணைத்துக் கொள்ள ஸ்பெயினின் முன்னணி கழகமான பார்சிலோனா முனைப்புக் காட்டி வருகின்றது. தற்போது பிரான்ஸின் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக ஆடிவரும் தியாகோ சில்வாவுடன் தனிப்பட்ட ரீதியில் சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொண்ட பார்சினோனா நிர்வாகம், அதில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து தியாகோ சில்வாவுக்கான விலையிலை பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியுடன் பேரம் பேசத் தயாராகி வருவதாக தெரிகிறது.

பார்சிலோனா அணிக்காக ஆடுவதற்கு முனைப்புக் காட்டும் தியாகோ சில்வாவின் கொள்வனவு வெகு சீக்கிரத்தில் இடம்பெறும் எனத் தெரிகிறது. அல்லது இந்தச் செய்தி படிக்கப்படும் நேரத்தில் இடம்பெற்றுக் கூட இருக்கலாம். பார்சிலோனா அணியில் பிரேஸிலின் நட்சத்திர வீரர்களான நெய்மார், டானி அல்விஸ் ஆகியோரும் ஆடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதே போல் லிவர்பூல் அணியிலிருந்து தாம் வெளியேற விரும்புவதாக தெரிவித்திருந்த அவ்வணியின் நட்சத்திர வீரரான உருகுவேயின் லூயிஸ் சுவாராஸினை தமது அணிகளில் ஒப்பந்தம் செய்வதற்கு ஸ்பெயினின் பிராந்திய கழகமான ரியல் மட்ரிட்டும், இங்கிலாந்தின் ஆர்சனல் கழகமும் போட்டி போட்டு வருகின்றன. சுவாரிஸினை கொள்வனவு செய்ய ஆர்சனல் சமர்பித்த 35 மில்லியன் யூரோ நிர்ணய விலையானது லிவர்பூல் கழகத்தினால் நிராகரிக்கப்பட்டதை தொடர்ந்து, 40 மில்லியன் யூரோக்களை நிர்ணய விலையாக சமர்ப்பிக்க ஆர்சனல் தயாராகி வருகின்றது. அதே நேரம் ஆர்சனலுக்கு போட்டியாக 43.5 மில்லிய்ன் யூரோவுடன் களத்தில் குதிப்பதற்கு ரியல் மட்ரிட்டும் தயாராகி வருவதாக தெரிகிறது. இந்தப் பிரபல வீரர்களுக்கான போட்டியினால், ஐரோப்பிய வீரர்கள் பரிவர்த்தனை சந்தை சூடு பிடித்துள்ளது.

அதுபோல பிரான்ஸின் நபோலி அணிக்காக ஆடிவரும் உருகுவேயின் எடிசன் கவானியை 63 மில்லியன் யூரோ நிர்ணய விலை மூலம் கொள்வனவு செய்ய இங்கிலாந்தின் செல்சியா கழகம் ஆர்வம் காட்டி வருகின்றது. அது போல சுவீடன் அணியின் நட்சத்திர வீரரும், தற்போது பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காக ஆடிவருபவரு மான ஸ்லாற்றன் இப்ரஹிமோவிச் ஸ்பியினின் ரியல் மட்ரிட் அணியில் இணைவதற்கு ஆர்வம் காட்டியிருக்கின்றமையும், இந்த வீரர்கள் சந்தையினை பரபரபாக்கியிருக்கின்றது.

# யாருக்கு உரிமை?



அண்மையில் நடந்து முடிந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில், தரவரிசையில் 15ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸின் மரியன் பர்டோலி, 24ஆவது இடத்திலுள்ள ஜேர்மனியின் சபைன் லிசிக்கியைத் தோற்கடித்து பட்டம் வென்றார். கடந்த 2007ஆம் ஆண்டு இறுதிப் போட்டி வரை முன்னேறித் தோல்வியடைந்த பர்டோலி ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் விம்பிள்டன் மற்றும் கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் 7 ஆண்டுகளின் பின் பட்டம் வென்ற பிரெஞ்ச் வீராங்கனை என்ற பெருமையையும் பெற்றார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் பிரிவில், தரவரிசையில் இரண்டாவது இடத்திலுள்ள பிரிட்டனின் ஆண்டி முர்ரே, முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சை தோற்கடித்து பட்டம் வென்றார். இதன் மூலம் 77 ஆண்டுகளுக்குப் பின் விம்பிள்டன் பட்டம் வென்ற பிரிட்டன் வீரர் என்ற வரலாறு படைத்தார். முர்ரே பெற்ற வெற்றியை தாங்கள் பெற்ற வெற்றி போல் எண்ணி பிரித்தானியர்கள் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இங்கிருந்து தான் பிரச்சினை ஆரம்பமானது. அன்டி முர்ரேயின் வெற்றியைக் கொண்டாடுவதில் ஸ்கொட்லாந்து, பிரிட்டன் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இதனால் அரசியல் ரீதியான சர்ச்சை வெடித்துள்ளது. பெரிய பிரித்தானியாவில் [illegible] இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் ஆகிய நாடுகள் உள்ளன. தற்போது 300 ஆண்டுகளுக்குப் பின் சுதந்திர நாடாக பிரிந்து செல்ல ஸ்கொட்லாந்து விரும்புகின்றது. இதற்காக மக்களிடம் கருத்துக் கேட்கும் வாக்கெடுப்பு எதிர்வரும் 2014 செப்டெம்பர், 18ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இந்நிலையில், விம்பிள்டன் இறுதியாட்டத்தில் முர்ரே வென்றதும், பிரிட்டன் பிரதமர் டேவிட் கமெருன் அருகில் அமர்ந்திருந்த ஸ்கொட்லாந்து முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட் தனது நாட்டுக் கொடியை அசைத்தது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. சால்மண்டின் செய்கையை வெறுப்புடன் கமெருன் பார்த்ததை தொலைக்காட்சி வாயிலாக இரசிகர்கள் கண்டு கொண்டார்கள். தான் செய்தது எந்த விதத்திலும் தவறாகாது. ஸ்கொட்லாந்துக்கு 117 ஆண்டுகளுக்குப் பின்னர் விம்பிள்டன் கிண்ணம் கிடைத்திருக்கின்றது என தங்களை தனியாகப் பிரித்து பேசி வருகின்றார் சால்மண்ட்.

தாயும் பிள்ளையும் ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறல்லவா? அந்த நிலை தான் தற்போது ஸ்கொட்லாந்து மற்றும் பிரிட்டன் இரசிகர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ளது. ஸ்கொட்லாந்து அரசியல் தலைவர்களின் தனிநாட்டு பிளவிற்கு முர்ரேயின் வெற்றி சாதகமாக போய்விட்டது. பிரிட்டிஷ் மகா ராணியினால் அரசாளப்படும் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து மக்களிடையே என்றுமே பிளவு இருந்து கொண்டு தான் வருகின்றது. அது விளையாட்டிலும் தொடர்கிறது.

# ஆஷஸ் யாருக்கு?




வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் ஆரம்பமாகியுள்ளது. சுமார் 45 நாட்கள் வரை இடம்பெறவுள்ள இத்தொடரில் வெற்றி – தோல்வி என்ற முடிவுகளை விட இதில் விளையாடுவதே இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு என்றும் கௌரவமாகக் கருதப்படுகின்றது. தொடரை வெல்லும் முனைப்புடன் அலெஸ்ரயர்குக் தலைமையிலான இங்கிலாந்து அணியும், மைக்கேல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய அணியும் களம் புகுந்திருக்கின்றன.

1882ஆம் ஆண்டு முதல் இவ்விரு அணிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் இத்தொடர் இதுவரை 65 தடவைகள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் மொத்தமாக 310 டெஸ்ட் போட்டிகள் இடம்பெற்றிருக்கின்றது. இதில், அவுஸ்திரேலிய அணி 123 போட்டிகளிலும், இங்கிலாந்து அணி 100 போட்டிகளிலும் வெற்றியீட்டிருக்கின்றது. 87 போட்டிகள் சமனிலையில் முடிந்திருக்கின்றன.

இங்கிலாந்து இம்முறை கிண்ணத்தை வெல்லும் என பலராலும் கணிக்கப்படுகின்றது. காரணம், இங்கிலாந்து வீரர்களின் திறமையான பெறுபேறுகள் என்பதைவிட அவுஸ்திரேலியா இளைய வீரர்களை உள்ளடக்கியதாக பலம் குறைந்த அணியாகக் களமிறங்கியுள்ளமையே ஆகும். கடந்த ஆஸஷ் தொடரில் அவுஸ்திரேலியாவிற்கு பெரும் பலமாக விளங்கிய பொன்டிங், மைக் ஹசி ஆகிய இருவரது ஓய்வும் அவ்வணிக்கு பின்னடைவே! தவிர, இறுதியாக இந்தியாவுடன் இடம் பெற்ற தொடரில், அவுஸ்திரேலியா 4 போட்டிகளிலும் தோல்வியடைந்து மண் கவ்வியது.

கடந்த ஆஷஸ் தொடருக்கு (2010–2011) பின்னரான காலப் பகுதியில் இங்கிலாந்து அணி தான் விளையாடிய 9 டெஸ்ட் தொடர்களில் ஐந்தில் வெற்றியையும், இரண்டில் தோல்வியையும் பெற்றதுடன், இரண்டை சமனிலையில் முடித்துக் கொண்டது. அவுஸ்தி ரேலிய அணி நான்கு தொடர்களில் வெற்றியையும், இரண்டு தொடர்களில் தோல்வியையும், இரண்டு தொடர்களை சமனிலையிலும் முடித்தது. இங்கிலாந்து அணி தமது மண்ணில் விளையாடிய மூன்று தொடர்களில் இரண்டில் வெற்றி பெற்றுள்ளதுடன், அவுஸ்திரேலியா அணி வெளிநாடுகளில் விளையாடிய மூன்று தொடர்களில் இரண்டில் வெற்றி பெற்றிருக்கின்றது. இம்முறை போட்டி இங்கிலாந்தில் இடம்பெறுவதால் அவுஸ்திரேலியாவால் வெளிநாட்டில் சாதிக்க முடிகின்றதா பார்க்கலாம்.

## விளையாட்டு

தொகுப்பு : வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிதாபத்துக்குரிய 13

■ நீலன்




சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்காக எமது அரசியல் கொள்கைகளை விட்டுக் கொடுக்க முடியாது எனவும் 13 ஆவது திருத்தத்துக்கு ஆதரவான எமது நிலைப்பாட்டை நாம் ஒரு போதும் மாற்றிக்கொள்ளமாட்டோம் என அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக்கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக இடதுசாரி முன்னணி மற்றும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசில் என்பன தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து ஆளுரைத்து வருகின்றன. அத்துடன் இனவாதக் கருத்துக்களைக் கக்கவரும் அமைச்சர்களான சம்பிக்கரணவக்க மற்றும் விமல்வீரவன்ஸ ஆகியோரின் இனவாதப் பிரசாரங்களை ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லையென்றும் அக்கட்சிகளின் தலைவர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர். இருந்தும் 13 ஆவது திருத்தத்தில் மேற்கொண்டேயாக வேண்டும் என்ற நிலைப்பாடு அரச தரப்புக்குள் உறுதியாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி தலைமையில் கூடிய சிறீலங்கா சுதந்திரக்கட்சிக் குழுக் கூட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும், அவ்வேளையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி 13 ஆவது திருத்தம் தொடர்பில் முரண்பாடான கருத்துக்களை எவரும் தெரிவிக்கக் கூடாதெனவும் அவ்வாறு அரசாங்கத்தில் இருந்து கொண்டு சதிசெய்வோர் விரும்பினால் அரசாங்கத்தை விட்டு வெளியேறலாமெனவும் சற்றுக் காட்டமாகத் தெரிவித்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன.

வடமாகாண சபைத் தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியானதில் இருந்து ஜாதிகஹெல உறுமய, பொதுபலசேனா மற்றும் அமைச்சர் விமல்வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி என்பன மோசமான இனவாதப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

ஒரு வகையில் கடந்த 25 வருடகாலமாக நடைமுறையில் இருந்து வரும் மாகாணசபை முறைமையை சவாலுக்கு உட்படுத்தி பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வடமாகாணத்துக்கு வழங்கக் கூடாதெனக் கூறிப் பல்வேறு முட்டுக்கட்டைகளைப் போட்டு வருவதன் காரணமாக அரசியலில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையேயும், இதர கட்சிகளுக்குள்ளேயும் முரண்பாடுகள் தோன்றியிருப்பதைப் பகிரங்கமாக அவதானிக்கமுடிகின்றது.

இதே வேளை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் இந்த நிலைப்பாட்டிற்குக் கீழ்படிய வேண்டிய தேவை இல்லை எனவும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தொடர்பில் தவறான கருத்துக்களையே இவர்கள் மக்கள் மத்தியில் பரப்பி வருவதாகவும் மத்திய அரசுக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் கூடுதலான அதிகாரங்கள் காணப்படுகையில் ஏன் அஞ்ச வேண்டுமெனவும் கருத்துத் தெரிவித்துள்ளதுடன் தற்போதைய அரசில் இருக்கும் அமைச்சர்களில் 50 வீதமானவர்களே நாட்டுக்குள் இனவாதம் மற்றும் மதவாதத் தீயை அணைப்பதற்காக நேர்மையாக முயற்சிக்கின்றனர் என்றும் மீதமானவர்களில் பெரும்பாலானோர் இனவாத மதவாத செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், அதற்கு இரகசியமான முறையில் பங்களிப்புச் செய்து வருகின்றனர். இது நாட்டுக்குள் தேவையற்ற வன்செயல்கள் ஏற்பட வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் வாசுதேவாவின் கூற்றினை மெய்ப்பிக்கும் விதத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், அமைச்சருமான தினேஷ் குணவர்தன இலங்கையின் நிலப்பிரதேசத்தில் மூன்றில் ஒரு பங்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குரியது. மூன்றில் இரண்டு பங்கு வடக்கு, கிழக்கு எல்லையில் அமைந்துள்ளது. அதனைத் தமிழ் மக்களின் தாயகம் என்றும் கூறிவருகின்றனர். இவ்வாறான பின்னணியில் வடக்கையும், கிழக்கையும் இணைக்க முடியுமா? இது நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் சுயாதீனத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் எனக் கூறியுள்ளார்.

இவ்வாறாக 13 ஆவது திருத்தம் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் கடுமையாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதனால் அரசியல்வாதிகள் மட்டுமன்றி மக்களும் வெகுவாகக் குழம்பிப் போயுள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஏதேனும் முயற்சிகள் முன்வைக்கப்படும் பொழுது அதனைக் குழப்பியடிப்பதும் இறுதியில் கைவிடுவதும் இந்நாட்டின் கலாசாரத்துக்கு ஒன்றும் புதியதல்லவே. இது வழமையான தொன்றாகவே இருந்து வருகின்றது.

திருத்தங்கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் விரைவில் தீரப் போவதில்லை என்ற சமிக்ஞையையே காட்டி நிற்கின்றது. இதனிடையில் திருத்தங்களைச் செய்வதற்கு அங்கீகாரத்தைப் பெறுவதற்கான பிரேரணை கடந்த வாரத்தில் வடமேல் மாகாணசபையில் சமர்ப்பிக்கப்பட்ட போது பிரேரணைக்கு ஆதரவாக 29 மேலதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

வடமேல் மாகாண சபையில் சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களான ஜவஹர்ஷா மற்றும் யெஹியர் ஆகிய இருவரையும் கட்சியின் கொள்கையையும், தீர்மானத்தையும், நிலைப்பாட்டையும் மீறிப் பிரேரணையை ஆதரித்து வாக்களித்தமைக்காக கட்சியிலிருந்தும் அதனூடாக அவர்கள் கட்சியில் வகிக்கும் சகல பதவிகளிலிருந்தும், கட்சியின் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீமினால் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

13 ஆவது திருத்தத்தின் பின்னணியில் கட்சிக்குள்ளேயே பல்வேறு குளறுபடிகள் தலைதூக்கியுள்ளதையே இவை எடுத்துக் காட்டுகின்றன. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்துக் காட்டுகின்றது. சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 13 ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளும் மாற்றங்களை அன்றேல் அதனை நீர்த்துப் போகச் செய்யும் நடவடிக்கைகளையோ பகிரங்கமாக எதிர்த்து வருகின்றது.

அத்துடன் ஏலவே 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஆராயவென அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முஸ்லிம் காங்கிரசுக்கு இடம் வழங்கப்படாதமை குறித்து அதன் தலைவர் ஹக்கீம் தனது அதிருப்தியை காரசாரமாக வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் கட்சியின் கொள்கைக்கு அப்பால் செயற்பட எத்தனிப்பார்களேயாயின் அது முஸ்லிம் காங்கிரஸ் மேலும் வலுவிழக்கவும் அத்துடன் பலம் குறைவுமே வாய்ப்பாக அமையும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

அரசியல் ரீதியாக 13 ஆவது திருத்தத்தின் பின்னணியில் நாடு பாரியதோர் அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதையே இது எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒரு புறம் கட்சிகளுக்குள்ளேயும் மறுபுறம் கொள்கை ரீதியாகவும் பாரிய முரண்பாடுகள் விஸ்வரூபம் எடுத்து வருகின்றன. அரசாங்கம் இதனை முளையிலேயே கிள்ளி எறிந்தால் அரசியல் வாதிகள் முட்டி மோதும் நிலை ஏற்படாமல் தடுத்திருக்க கூடியதாக இருக்கும்.

அத்துடன் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்கள் மத்தியிலும் ஒரு தரப்பை மறு தரப்பு சந்தேகக் கண் கொண்டு பார்க்காத நிலைமைகளும் உருவாவவதற்கு வழிவகுத்திருக்கும். இந்தக் கட்டத்திலேனும் அரசாங்கம் இவ்விவகாரத்தைச் சரியான அணுகுமுறையில் பின்பற்றுவது அவசியத்திலும் அவசியம். அதன் மூலமே உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் இது தொடர்பான சர்ச்சைகளைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்

அதைவிடுத்து அரசாங்கம் தனது போக்கினை மாற்றாது அடம் பிடிக்குமேயாயின் அது நாட்டின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் அத்துடன் இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்திற்கும் கேட்டினையே விளைவிக்கும்.




noolaham.org | aavanaham.org



# அணுஉலை அதிகாரி புற்றுநோயால் சாவு

ஜப்பானில் சுனாமியால் பாதிக்கப்பட்டு மூடப்பட்ட புகுஷிமா அணுஉலை தலைமை அதிகாரி புற்று நோயால் உயிரிழந்தார். புகுஷிமா அணு உலை தலைமை அதிகாரியாக பணியாற்றிய மசாவோ யோஷிடா (வயது 58) , கடந்த சில ஆண்டுகளாகவே புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார். தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி அவர் உயரிழந்தார். இதையொட்டி அணு உலை சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், புற்று நோய்க்கும், யோஷிடா புரிந்த பணிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று குறிப்பிடப் பட்டு உள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டை உலுக்கிய பூகம்பம், சுனாமியால், புகுஷிமாவில் உள்ள அணு உலை பெரிதும் பாதிக்கப்பட்டது. அப்போது அணு உலையில் தலைமை நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தவர் மசாவோ யோஷிடா. சுனாமியின்போது அணு உலையை சீரமைப்பதற்காக தனது உயிரையும் பொருட்படுத்தாமல், துணிச்சலான நடவடிக்கையால், எதிர்காலத்தில் ஏற்பட இருந்த பேரழிவைத் தடுத்தவர் யோஷிடா. அணுஉலை தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் புற்றுநோயால்உயிரிழந்த சம்பவம் உலகெங்கும் அதிர்ச்சியலைகளை உருவாக்கியுள்ளது.

# மீண்டும் கொதிக்கும் கூடங்குளம்



தமிழகத்தின் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் தொடக்க நிலை இயக்கங்கள் ஆரம்பித்து விட்டன. யுரேனியம் செறிவூட்டப் பட்டதும் மின் உற்பத்திப் பணிகள் தொடங் கிவிடும் என்று இந்திய மத்திய அரசு அறிவித் துள்ளது. இதனால் சில காலமாக உறங்கு நிலையில் இருந்த இடிந்த கரை மக்கள் மீண்டும் போராடக் கிளம்பிவிட்டார்கள். இந்த அணுஉலை பாதுகாப்பானது என அரசு உறுதிப்படுத்தினால் மாத்திரமே அதனை இயங்கச் செய்ய அனுமதிப்போம் என்பதே போராட்டக் காரர்களின் வாதமாக இருக்கிறது. இதனால் அடுத்துவரும் நாள்களில் கூடங்குளம் அணுஉலை மக்கள் போராட்டங் களால் கொதிப்பது நிச்சயம்.

# மக்கள் படை வெல்லும்



கடந்த சில வருடங்களுக்கு முன்பும் எகிப்திய பிரச்சினை உலக அரசியல் அரங்கில் பரவலாகப் பேசப்பட்டது. 2011ம் ஆண்டு தன் சொந்தநாட்டு மக்கள் மீது அடக்குமுறைகளைத் திணித்த ஹொஸ்னி முபாரக்குக்கு எதிராகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்தில் குதித்திருந்தனர். ஆனால் இராணுவத்தை மட்டும் நம்பியிருந்த ஹொஸ்னி முபாரக் அப்பாவி மக்கள் கூட்டம் மீது ஆயுத வெறிபிடித்த இராணுவத்தை ஏவிவிட்டார். பல நூற்றுக்கணக்கான மக்களை வீதிகளெங்கும் சுட்டுக்கொன்றுவிட்டு மக்கள் போராட் டத்தை முறியடித்ததாக கொக்கரித்துக் கொண்டே இருந்தார் முபாரக்.

ஆனால் அவரின் அடக்குமுறை இறுதியில் மக்களால் தோற்கடிக்கப்பட்டு காலப்போக்கில் அவரும் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டார். அவர் நடத்திய ஒவ்வொரு படுகொலைகளுக்கும் இன்று நீதிமன்றங்களில் பதில் சொல்லிக் கொண்டே இருக்கின்றார்.

ஆனால் ஹொஸ்னி முபரக் பயணித்த அதே வழியில் இப்போதைய எகிப்திய அதிபர் முகமது மேசியும் பயணித்துக் கொண்டேயிருக்கிறார். ஹொஸ்னி முபாரக்கின் ஆட்சியின் பின்னர் ஜனநாயக வழியில் தேர்தல் மூலம் தெரிவு செய் யப்பட்ட முகமது மேசிக்கை எதிர்த்து முளைத் துள்ள போராட்டங்களும் இன்று எகிப்தின் திசை எங்கும் பரவி வருகின்றன. அன்று ஹொஸ்னி முபாரக்குக்கு எதிராக கிளர்ந்தது போன்று இன்று முகமது மேசிக்கு எதிரான போராட்டங்களில் குதிப்போரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

கடந்தவாரம் கூட ஹொஸ்னி முபரக்கிக்கு எதிரான புரட்சியில் பல லட்சக்கணக்காண மக்கள் திரண்டு எழுந்து குரல் எழுப்பியுள்ளனர். மக்களின் போராட் டத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்க ஆட்சி யாளர்கள் துடியாய்த்துடிக்கின்றனர். ஆனால் இராணுவ துப்பாக்கிகளை எதிர்கொண்டும் நிலைகுலையாமல் தமது உணர்வினை எகிப்தின் திசையெங்கும் மக்கள் படர விட்டுக்கொண் டேயிருக்கின்றனர்.

மக்களின் போராட்டங்களை அடக்க ஆட்சியை இராணுவம் கைப்பற்றியிருக்கிறது. இது மக்களின் போராட்டத்தை திசைதிருப்ப இராணுவம் செய்த திட்டமிட்ட சதி என்கின்றனர் எகிப்திய மக்கள். அடக்குமுறைகள் எங்கெல்லாம் வெடிக்கின்றதோ அங்கெல்லாம் புரட்சிவெடிப்பதும் உலக நியதி. எங்கெல்லாம் புரட்சி வெடிக்கிறதோ அங்கெல்லாம் இறுதியில் வெல்வது மக்களும் நீதியுமே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஜூலை 17 ஆம் திகதி வெளியிடப்பட்டது.